விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை (22.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## இலங்கைக்கு எதிரான நாடுகளுடன்

# ஜெனிவா மனிதவுரிமை மாநாட்டில் போரிடத் தயாராகும் இலங்கை

(கொழும்பு)

**அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளின் உதவியுடன் பிரித்தானியாவினால் எதிர்வரும் மார்ச் மாதம் 22ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்க தீர்மானித்துள்ள போர்க்குற்றங்கள் அடங்கிய யோசனைக்கு எதிராகப் போரிடத் திட்டங்களை வகுத்து வருவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கு எதிரானயோசனைக்கு ஆதரவு வழங்கும் நாடுகளில் எவ்விதமான மதச் சுதந்திரத்தை வழங்காமை, பாரதூரமான மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களை செய்தமை தொடர்பில் தகவல்களை வெளியிட இலங்கை தீர்மானித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அரசாங்கத்தின் உயர் மட்டத் தரப்பு, இதுவரை நாங்கள் வாய்களை மூடிக் கொண்டிருந்தோம்.

இலங்கைக்கு எதிரான யோசனையை கொண்டுவரும் நாடுகளின் உண்மை நிலைமையை மாநாட்டில் வெளியிடுவோம் என தெரிவித்தது. இலங்கைக்கு எதிரான யோசனையை கொண்டுவரும் ஜெனிவாவுக்கான பிரித்தானிய தூதுவர் அங்குள்ள மேற்குலக நாடுகளின் தூதுவரகளுடன் இரகசியமான பேச்சுவார்த்தைகளை

24-ம் பக்கம் பார்க்க

## மீனவர்களை தாக்கும் கடற்படையுடன் நேசக்கரம் நீட்டுகிறது இந்தியா!

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கிவரும் நிலையில் இந்தியக் கடற்படையினர் இலங்கைக் கடற்படையுடன் பயிற்சியில் ஈடுபடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளைப் பேணுவதனை ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினருடன் இந்திய கடற்படையினர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்தில் இரண்டு கரையோரப் பாதுகாப்பு கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன.

குறித்த இரண்டு கப்பல்களும் உடனடியாக நாட்டுக்கு அழைத்துக் கொள்ளப்பட வேண்டுமென



ஜெயலலிதா கோரியுள்ளார்.


இது தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு, ஜெயலலிதா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழக மக்களின் உணர்வுகளை உதாசீனம் செய்யும் வகையில் மத்திய அரசாங்கம் செயற்பட்டு வருவதாகத் தெரி

24-ம் பக்கம் பார்க்க

## தேர்தலை நடத்தக் கோரி நீதிமன்றை நாடவும் தயார்

### ரணில் கூறுகிறார்



(கொழும்பு)

2014 ஆம் ஆண்டில் அரசாங்கத்தை மாற்றும் தேர்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக போராட வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 55-வது வரு

23-ம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதை வரவேற்கிறது பாகிஸ்தான் அரசு

### அந்நாட்டு சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என பாகிஸ்தான் சபாநாயகர் சர்தார் அய்யாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம மேற்கொண்ட முயற்சிகள் வரவேற்கபபட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும்பாகிஸ்தானுக்கும் இடையில் வரலாற்றுக் காலம் முதல் மிக நெருங்கிய பிணைப்புக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் சபாநாயகர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை

23-ம் பக்கம் பார்க்க

## மாகாண சபை பட்ஜெட்டை அங்கீகரித்தார் ஆளுநர்!



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் 2014-ம ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தினை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அங்கீகரித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 2014-ம ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினை கடந்த 10-ம் திகதியன்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வ.விக்னேஸ்வரன் கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபைக் கட்டடத்தில் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட அமர்வில் சமர்ப்பித்தார்.

வரவு செலவுத்திட்ட சமர்ப்பிப்பினையடுத்து கடந்த 10, 11, 12-ம் திகதிகளில் வரவு செலவுத் திட்ட வாசிப்புக்கள் இடம்பெற்று இறுதியில் முதலமைச்சர், எதிர்கட்சியினரால சிறுமாற்றங்கள் கொண்டு வரப்

24-ம் பக்கம் பார்க்க

up to 25% CONDITIONS APPLY
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
Special offer
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

## இந்தியாவுக்கு செல்வோர்

### மலேரியா நோய்த் தடுப்பு மருந்தைப் பாவிக்க அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவுக்குச் பயணம் செல்வோர் மலேரியா நோய்த் தடுப்பு மாத்திரையை பாவிக்குமாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

இலங்கையில் மலேரியா நோய்க் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் இந்தியாவில் இன்னமும் மலேரியா நோய் காணப்படுகிறது.

தற்போது ஐயப்பன் விரதம் ஆரமபமாகியுள்ளதால் பெருமளவான பக்தர்கள் இந்தியா செல்வதற்கு ஆயத்தமாகியுள்ளனர்.

எனவே அவர்கள் செல்வதற்கு முன்னதாக மலேரியா நோய்த் தடுப்பு மருந்தான குளோரோகுயின் (Chloroquine) மாத்திரையை பாவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்மாத்திரையை அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

இம்மாத்திரையை இந்தியா செல்வதற்கு ஒரு கிழமைக்கு முன்னதாக 2 மாத்திரைகள் வீதம் பாவிக்குமாறும் இந்தியாவில் இருக்கும்போது கிழமைக்கு

23-ம் பக்கம் பார்க்க

## பயிற்சியை முடித்த 45 தமிழ் பெண்கள்

(கொழும்பு)

இராணுவத்தில் பயிற்சிகளை நிறைவுசெய்த 45 தமிழ் பெண்கள் உட்பட 55 பெண்கள் இராணுவ அணி வெளியேறியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பயிற்சிகளை முடித்து வெளியேறிய தமிழ் பெண்களின் அணி வகுப்பு மரியாதை கடந்த 18ஆம் திகதி அனுராதபுரத்தில் அமைந்துள்ள இராணுவ சமிக்ஞைப் படைப் பிரிவில் நடை

24-ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இதய அஞ்சலி

தோற்றம் 1958 - 05 - 08



மறைவு 2013 - 12 - 21

எமது பாடசாலை அதிபர்

அமரர் அந்தோனிமுத்து றோசறி ஜெயநாயகி

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும்
கண்ணும் கருத்துமாக இருந்து அயராது பாடுபட்ட
அன்னையே! மாணவரின் கல்வி உயர்வுக்காக
கண்டிப்புடனும் அன்புடனும் சேவையாற்றி
ஆசிரியர்களுடன் மதிப்புடனும் பரிவுடனும் பழகி
பாடசாலையை நடாத்தி சென்ற அதிபர் அவர்கட்கு
எமது இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலிகள்

(5126)

யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்,
மல்லாகம்.

பிரிவால் துயருறும்
பாடசாலைச் சமூகம்



NEW SCIENCE WORLD

VICTORY MUST

Navalar road junction , Brown road , Jaffna.

Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

For 2013A/L...... Monday - Friday

Day Classes

Physics : R.Kugen
R.Kumaran

Chemistry : Dias
S.Sivakumar

Biology : S.Ponthivakaran
V.Umashankar

(சி-5958)

புதிய பிரிவு ஆரம்பம் 23.12.2013 திங்கள் நேரம்:-7.30



விராட் விஸ்வப் பிரம்மனே நமக!

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகநாதன் கமலாதேவி



வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் பத்திர காளி கோவிலடியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சண் முகநாதன் கமலாதேவி 20.12.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா செல்லம்மா தம்பதி களின் அன்பு மகளும், காலஞ் சென்ற இராமலிங்கம்-வள்ளி யம்மை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், சண்முகநாதனின் பிரியபத்தினியும், உதய குமாரன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (லண்டன்), ஜெயக்குமார் (ஆசிரியர்-யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாயலம்), இந்திரகுமார் (உரிமையாளர்-அம்பாள் தளபாட நிலையம், சுழிபுரம்), சந்திரகுமார் (ஆசிரியர்-யா/இந்துக் கல்லூரி) சுரேஸ்குமார் (தொ.நு.உத்தியோகத்தர் UNHABITAT, புதுக்குடியிருப்பு), ஞானகுமார் (ஆசிரியர்-க/இராஜவலை இந்து தேசிய கல்லூரி, திகன) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, முத்துலிங்கம், லோகேஸ்வரி, பத்மநாதன், ருக்மணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகுரு, விஸ்வலிங்கம், செல்லப்பா பறுவதம் காலஞ்சென்ற வர்களான அப்புத்துரை, தவமணி, அன்னம்மா ஆகி யோரின் அன்பு மைத்துனியும் தர்சினி, கௌசல்யா, சிவ கௌரி, பங்கயற்செல்வி, இந்துமதி, உமாகௌரி ஆகி யோரின் பாசமிகு மாமியாரும், மிதுனா, வர்ணிகா, அஸ் வினி, ஹர்சனா, மோகிலன், மகிழ்ஜன், சகானா, பூர்விகா, பாவனா, தர்சனன், தினுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

பத்திரகாளி கோவிலடி,சுழிபுரம். (5122)


# இளவாலை வைத்தியசாலையின் வைத்தியருக்கு எதிராக முறையீடு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியருக்கு எதிராக மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இளவாளை பகுதியினைச் சேர்ந்த குழந்தை யொன்று நேற்று வீழ்ந்து நாடி உடைந்தமையி னால், குழந்தையின் தந்தை சிகிச்சை பெறுவத ற்காக இளவாளை பிரதேச வைத்தியசாலைக்கு குழுந்தையைக் கொண்டு சென்றுள்ளார்.

இருந்தும் அங்கு வைத்தியர் இருக்கவில்லை. வைத்தியருக்காக காத்திருந்த போதும் நீண்ட நேரமாகியும் வைத்தியர் வருவதாகத் தென்படாத காரணத்தினாலும் குழந்தை வலியில் அழுதமை யினால் பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு குழந் தையினைக் கொண்டு சென்றுள்ளார்.

அங்கு இருந்த வைத்தியர் சுகவீன விடுமுறை யில் சென்றுள்ளார் எனத் தாதியர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து சங்கானை வைத்தியசாலைக்குச் சென்றே குழந்தைக்கு சிகிச்சை மேற் கொண்டுள்ளார். அந்த குடும்பஸ்தர் உடனடியாக மனித உரிமை ஆணைக்குழுவில், கடமைநேரத்தில் வைத்தியசாலையில் இருக்காத வைத்தியரின் செயல் குறித்து முறையிட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் மனித உரிமை ஆணைக் குழுவினால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

14 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக் குட்படுத்தியவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளான சிறுமியின் தாயாரினால் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை யாழ்.உரும்பிராய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த மேற்படி குடும்பஸ்தரை கோப்பாய் பொலிஸார் கைது செய்ததாகவும் இந்நிலையில் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் நேற்று சிறுவர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட தாகவும் இதன்போது நீதிபதி, குறித்த நபரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# திருட்டுச் சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் பகுதியில் கடந்த காலங்களில் இடம் பெற்ற 15-ற்கும் மேற்பட்ட திருட்டு சம்பவங்களுடன் தொடர்பு பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் ஆனைக்கோட்டை யினைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் அண்மைக்காலமாக ஆலயங்கள் மற்றும் வீடுகளில் பரவலாகத் திருட்டுக்கள் இடம்பெற்றன. இது தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் மேற்படி இளைஞன் ஆனைக்கோட்டை யில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் தற்போது பொலிஸ்தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகள் மேற் கொள்ளப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)


## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் சரஸ்வதி



நெல்லியடி வடக்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சரஸ்வதி நேற்று (21.12.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான மாணிக்கம்-பத்தினிப் பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற நாகரத் தினம் நவரத்தினத்தின் அன்பு மனைவியும் பரமேஸ்வரியின் சகோதரியும், மைதிலி (ஆசிரியை-பருத்தித்துறை மெத டிஸ்த பெண்கள் பாடசாலை), மயூரன் (மருதம் இரும் பகம்-நெல்லியடி) ஆகியோரின் பெரியதாயாரும், சிறி கந்தசேகரம் (ஆசிரியர்-யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை), கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரணன், அபிராம், திசாந்த், ஆரபி, நவந்நாத், கவீஸ்நாத், தீபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற வல்லிபுரம், திரவியம், பாக்கியம், இராசமலர், சிவ சோதி, சிவநேசன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2013) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மத்திய மகா வித்தியாலய வீதி,
காளிகோவிலடி, நெல்லியடி. (சி-5959)

தகவல்:
குடும்பத்தினர்



## கார்ச் சாரதி தேவை

தற்காலிக அடிப்படையில் நாள் ஒன்றிற்கு 500/= சம்பளம் வழங்கப்படும்.
40 வயதிற்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் நேரில் வரவும் (சி-5957)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 2219016, 0215689090
www.thisaivisa.com



## ICT வகுப்புக்கள்

O/L ICT Class
GIT Class
A/L ICT Class

தனியாகவும், குழுக்களாகவும் வீடுக ளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். (5125)

ஆசிரியர்-கஜன்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:-0773555672



## பதவி வெற்றிடம்

பிள்ளையார் இன் Hotel க்கு மும்மொழி யிலும் தேர்ச்சி உடைய வரவேற்பாளர் ( Receptionist ) தேவை.

தொடர்பு:-
NO 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2829



Organ, Guitar,
புல்லாங்குழல் வகுப்புகள்
சினிமாப் பாடல்களுக்கான
Notes விற்பனைக்குண்டு.
(5124)

கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
T.P. [illegible]



## Man power (பராமரிப்பு சேவை)

462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

- நேயாளர் பராமரிப்பு சேவை
- வயோதிபர் பராமரிப்பு சேவை

0774744204

உங்கள் இல்லங்களிலே நாள் கணக்கிலோ, கிழமைக் கணக்கிலோ மாதக்கணக்கிலோ பராமரிப்புக்கான கட்டண ங்கள் கலந்தாலோசித்து தீர்மானிக்கலாம். (5127)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(C-5954)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION
MONEY TRANSFER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் நிலவும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

(கொழும்பு)

**வடக்கு மாகாணத்தில் நிலவும் அரச வெற்றிடங்களை நிரப்புவதன் மூலமே மக்களுக்கான சிறந்த சேவையினை வழங்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் சந்திர குமார் தெரிவித்துள்ளார்.**

கடந்த 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம் பெற்ற பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மீதான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யுத்தம் முடிவடைந்த பின்பு அரச செயலகங்களில் பல வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் அவை இயங்க முடியாத சூழ்நிலையில் அங்கு காணப்பட்ட கணிசமான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும் பல வெற்றிடங்கள் நிரப்பப் படாத குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதைத் தெரிவிக்கின்றேன்.

குறிப்பாக கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலே இன்னும் நூற்றுக்கணக்கான பட்டதாரிப் பயிலுநர்களை உள்வாங்கக்கூடிய சூழ்நிலை காணப் படுகிறது. அப்பிரதேசங்களில் வெற்றிடங்கள் காணப்படுவதால் அவர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சைப் பொறுத்த வரையில், 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடு தழுவிய ரீதியில் 54 ஆயிரம் பட்டதாரிகள் பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டார்கள். கடந்த வாரம் அவர்களில் கிட்டத்தட்ட 90 வீதமானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் பட்டிருக்கின்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 3 என்ற பதவி நிலையில் உள்வாங்கப்பட்டு, கடந்த ஒன்றரை வருடங்களாகப் பட்டதாரிப் பயிலுநர்கள் என்ற வகையில் பத்தாயிரம் ரூபா சம்பளம் பெற்று வந்த இவர்கள் இப்போது திருப்திகரமான ஒரு சம்பளத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள்.

இன்று குறிப்பாக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் வரக்கூடிய மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மக்களுக்குச் சிறந்த சேவையாற்றக் கூடிய ஒரு நிறுவனமாக மாற்றியமைக்கப்பட வேண்டிய தன் அவசியம் இப்பொழுது உணரப்பட்டுள்ளது.

வெறுமனே அதிகாரநிலைப்பணி என்ற நிலைமையிலிருந்து மக்களிடம் சென்று சேவை செய்யக்கூடிய ஒரு நிறுவனமாக அது மாற்றியமைக்கப்பட வேண்டும். பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் வரும் ஒவ்வொரு திணைக்களமும் ஒவ்வொரு மாவட்டச் செயலகமும் மக்கள் சந்திப்புக்காக புதன்கிழமையை ஒதுக்கி இருந்தாலும் கூட அது நடைமுறையில் வெற்றியளிப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தங்கள் தேவையின் நிமிர்த்தம் அதிகாரிகளைச் சந்திப்பதற்காக இந்த புதன்கிழமைகளில் இந்த மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் மக்கள் நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள்ளாகின்றனர். இந்த நிர்வாக அலகுகள் மக்களிடம் சென்று சேவையாற்றக்கூடிய நிலைமையை உருவாக்கும்போது தான் மக்களில் அதிக தொகையினர் அங்கு சென்று காத்திருக்கின்ற துர்ப்பாக்கிய நிலையை மாற்றியமைக்கலாம்.

ஆகவே, அதற்கான ஒரு பொறிமுறையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

மற்றும் மூன்றுமொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக அரச உத்தியோகத்தர்களை மாற்றியமைக்க வேண்டும் என்ற திட்டம் உண்மையில் ஆமை வேகத்தில் தான் செயற்படுகின்றது. இது குறித்து வெறுமனே கொள்கை அளவில் பிரகடனம் செய்தால் மட்டும் போதாது. அதற்கான சிறப்பானதொரு வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும். கட்டாயப்படுத்தலுக்கூடாக அதைச் செயற்படுத்த வேண்டும்.

யாழ்.மாவட்டத்திலே தென்மராட்சி, புவியியல் ரீதியாகப் பரந்த ஒரு பிரதேசமாகும். இந்தப் பிரதேச செயலகப் பிரிவை இரண்டு பிரதேசப் பிரிவுகளாக மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கை மக்களால் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

அதேபோன்று 2012 ஆம் ஆண்டில் இந்த விடயம் எல்லை மீள் நிர்ணயக் குழுவுக்குக் கொண்டு வரப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக இன்று வரையில் அந்தப் பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரிக்கப்படுவதற்குரிய முடிவு எதுவும் எடுக்கப்படாத நிலைமை காணப் படுவதால் அமைச்சர் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென வேண்டுகின்றேன்.

அதேபோன்றே கிளிநொச்சி மாவட்டத்திலே கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவும் புவியியல் அமைப்பு ரீதியாக நீண்ட பெரிய பிரதேசத்தை உள்ளடக்கியது. இந்தப் பிரதேச செயலகப் பிரிவையும் இரண்டு பிரதேச பிரிவுகளாக மாற்றியமைக்க வேண்டுமென்ற முன்மொழிவுகள் முன்வைக்கப் பட்டுள்ளன. இந்த விடயத்திலும் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

இதோபோன்றே கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கிராம சேவையாளர் பிரிவுகளை இரண்டு பிரிவுகளாக மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகளும் எல்லை மீள்நிர்ணயக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் காலதாமதத்தை நீக்க வேண்டுமென நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

கடந்த வருடம் கண்டாவளை பிரதேச செயலகம் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வருட வரவு செலவுத் திட்டத்திலே அவ் விடயம் குறிப்பிடப்படாமலிருப்பது கவலையளிக்கின்றது. அதற்காக கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபா கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இன்னுமொரு விடயத்தையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். கடந்த 2011 ஆம் ஆண்டு அரச நிர்வாக சேவை தரம் III இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதேபோல அங்கு கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் பாரிய அளவில் இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்காக நீங்கள் போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றை நடத்தி அந் நியமனங்களை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றீர்கள். எனவே, அந் நியமனங்களை விரைவாக வழங்கி வெற்றிடங்களை நிரப்ப வேண்டுமென நான் இவ்விடத்திலே வலியுறுத்துகின்றேன்.

அடுத்து நீண்ட காலமாக ஓர் இடத்தில் கடமையாற்றிய கிராம சேவையாளர்களை இடமாற்றம் செய்வதற்கும் கிராம சேவையாளர்களுக்கு உரிய பதவியுயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றேன்.

அடுத்து வட மாகாணத்தில் நிலவுகின்ற சில பதவி வெற்றிடங்கள் தொடர்பாக நான் இங்கு குறிப்பிட வேண்டும். கணக்காளர் சேவையிலும் கூட வெற்றிடங்கள் உள்ளன என்றார். (அ-2)

# வாரம் ஒரு தகவல்

## அழகு முகம்

"என்னுடைய பேர்சனாலிட்டியை பற்றி என்ன நினைக்கிறாய்?"

"அதையெல்லாம் நினைத்து பார்த்திருந்தால் நம்ம கல்யாணமே நடந்திருக்காது தெரியுமா?"

"என்ன... கிண்டலா? என் முகத்தைப் பார்த்துவிட்டு சினிமாவில் நடிக்க வாறியா? என்று கூட நாலைந்து தயாரிப்பாளர்கள் வந்து கேட்டார்கள். நான்தான் அதெல்லாம் வேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டேன்"

"ரொம்பத்தான் ரீல் விடாதீங்க. எனக்கு மனோதத்துவமெல்லாம் தெரியும். அதனால் உங்களுடைய பேர்சனாலிட்டி என்னவென்பது எனக்கு நன்றாகத் தெரியும்"

"என்ன தெரியும்? சொல் பார்க்கலாம்"

"உங்களை மாதிரி உள்ளவர்களை ஆங்கிலத்தில் **நாசிஸ்டிக் பேர்சனாலிட்டி** என்று சொல்வார்கள்"

"அப்படியானால்?"

"கிரேக்க இதிகாசத்தில் நாசி என்று ஒருத்தன் இருந்தான். அவன் தண்ணீரில் தன்னுடைய முகத்தைப் பார்த்துவிட்டு ஆகா! நாம எவ்வளவு அழகாக இருக்கிறோம் என்று கர்வமாக நினைத்துக் கொண்டு, தன்னுடைய அழகுக்கு தகுந்தாற்போல் ஒரு துணை வேண்டுமென்று உலகம் முழுவதும் தேடிப்பார்த்துவிட்டு, அப்படி யாரும் கிடைக்காததால் மனமுடைந்து கடைசியில் தற்கொலை செய்து கொண்டானாம்."

"நானும் அதுமாதிரி என்கிறாயா?"

"உங்களை மாதிரி நிறையப் பேர் உண்டு. தன்னைப் பற்றி மிகவும் பெருமையாக நினைப்பது. மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும். மரியாதை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது. இப்படிப்பட்டவர்களுக்கு நல்ல உறவுகளே நீடிக்காது."

"நான் அப்படியில்லை. நான் அழகாக இருப்பதுபோல் என்னைச் சுற்றியிருப்பதும் அழகாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பவன். அதனால்தான் நம்முடைய வீட்டுச்சுவர் முழுவதும் அழகான படங்களை வாங்கி வந்து மாட்டி வைத்திருக்கிறேன்"

"ரொம்ப அழகுதான்"

"அதுசரி, இதோ இந்தப்படம் ஏது? நீ வாங்கி வந்தாயா? அழகாக இருக்கும் படங்களுக்கு மத்தியில் இது எவ்வளவு அசிங்கமாக இருக்கிறது. முதலில் இதைக் கழற்றி எறி"

"அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாது"

"அது படம் இல்லை. முகம் பார்க்கும் கண்ணாடி"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

22.12.2013

(மார்கழி 07, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 12.45 மணிவரை

ஆயிலியம் முற்பகல் 11.19 மணிவரை

இராகுகாலம் 4.55-6.25 மணிவரை

சுபநேரம் 9.25-10.55 மணிவரை

**மேடம்** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** விருந்தினர் வருகையுண்டு, தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், தொலைபேசி மூலமும் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், பொதுத் தொண்டுகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச்சுமை கூடும், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் கிடைக்கப் பெறுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**துலாம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு, எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி தகுந்த முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** மனக்குழப்பங்கள் அதிகரிக்கும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், உதாசீனப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்ச்சிக்கலாம், பயணத்தின்போது பொருட்களில் கவனம் தேவை, வேலைச்சுமைகூடும்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், களஸ்திர நன்மையுண்டு.

**மீனம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தேக நலன் சிறாகும், காணாமற்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் முன்னேற்றத்திற்காக அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 110 | 70 | 60 | 100 |
| தக்காளி | 60 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 40 |
| கோவா | 20 | 15 | 30 | 40 |
| கரட் | 40 | 40 | 50 | 60 |
| பூசணி | 25 | 30 | 50 | 40 |
| புடோல் | 35 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 35 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 - 180 | 200 | 200 | 120 - 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 100 | 190 | 130 | 120 |
| பாகற்காய் | 120 | 80 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 50 | 50 |
| பயற்றங்காய் | 60 | 80 | 90 | 100 |
| லீக்ஸ் | 70 | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 60 | 50 | 70 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 130 | 140 |
| முருங்கைக்காய் | - | 200-300 | - | 240 |
| போஞ்சி | 100 | 90 | 120 | 80 |
| கத்தரி தம்புள்ள | 30 | - | - | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 50 | 50 | 50 | 30 - 40 |
| இராசவள்ளி | 160 | 120 | 200 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து சிறுவன் பரிதாப மரணம்

வடமராட்சி தம்பசிட்டி தோட்டப்பகுதியில் பட்டம் ஏற்றி விளையாடிக்கொண்டிருந்த மாணவனொருவன் பின்பக்கமாக சென்று தவறி கிணற்றில் வீழ்ந்து பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 4.30 மணியளவில் தம்பசிட்டி பகுதியிலுள்ள தோட்டக் கிணற்றில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,தனது வீட்டிலிருந்து சிறிது தூரத்திலுள்ள தோட்ட வெளியில் பட்டம் ஏற்றி விளையாடிக் கொண்டிருந்த வேளை சிறுவன் தவறுதலாக கிணற்றினுள் வீழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இவ்வாறு சிவலிங்கம் சங்கீத்தன் என்ற சிறுவனே பரிதாபமாக உயிரிழந்தவராவார். சிறுவனைக் காணவில்லையென பெற்றோர் தேடி அலைந்த போது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் சிறுவன் கிணற்றினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மரண விசாரணை, பிரேத பரிசோதனை என்பவற்றின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

# இளைஞர் கழக நிர்வாக தெரிவு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட கழகங்கள் மீள புனரமைப்பு செய்யப்பட்டு வருவதுடன் 2014 ஆம் ஆண்டுக்கான இளைஞர் கழகங்களின் புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைய மாரீசன்கூடல் இளைஞர் கழகத்தின் புனரமைப்பு மற்றும் நிர்வாகிகள் தெரிவு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கையித்தர் கோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, குறித்த மாரீசன்கூடல் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 13 முதல் 29 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளை தவறாது சமுகமளிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (9-23)

# இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

மருதனார் மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் இலட்சார்ச் சனைப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமையுடன் நிறைவடையவுள்ளது.

தொடர்ந்து 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை ஹனுமத் ஜெயந்தியும் இடம்பெறவுள்ளது.


திருவிழாவின் ஒவ்வொரு நாளும் முற்பகல் 11.30 முதல் 12.30 மணிவரை ''கம்பராமாயணம்'' தொடர் இசைப் பேருரையை நல்லைக் குருவின் பிரதம வாரிசு பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்தவுள்ளார். (அ-9)

# அலங்கார உற்சவம்

கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்ப சுவாமிகள் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்று வருகின்றன.

உற்சவத்தின் இன்று வேட்டைத்திரு விழாவும் நாளை திங் கட்கிழமை சப்பறத்திருவிழாவும் நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறு நாள் புதன்கிழமை தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (அ-9)

நன்றி:-அதரண




# மகரஜோதி பெருவிழா இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தின் மகரஜோதிப் பெருவிழா இன்று காலை 6 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதன்படி காலை 6 மணிக்கு ஐயப்ப சுவாமிக்கு விஷேட அபிஷேகமும் 8மணிக்கு மகரஜோதி பதினெட்டாம் படிப் பூஜையும் 10 மணிக்கு சரணகோஷ பஜனைகளும் இடம்பெறவுள்ளன.

இப் பூஜைகளை தர்ம சாஸ்த குருகுல அதிபர் ஸ்ரீ பிரம்ம ஸ்ரீ தாணு மகாதேவ சிவாச்சாரியார், வியாவில் ஐயனார் தேவஸ்தான பிரதம குரு ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க.ச.சோமஸ்கந்த சிவாச்சாரியார், உரும்பிராய்சபரிமலைகுருசுவாமி ஸ்ரீ பிரம்ம ஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார் ஆகியோர் மேற்கொள்ளவுள்ளனர்.

அத்தோடு முற்பகல் 11 மணிக்கு கருடபுராண நூல் வெளியீட்டு நிகழ்வு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வரவேற்புரையை ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் க.சோமசேகரம் ஆற்ற நூலினை கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை அறக்கொடைச் செம்மல் எஸ்.சிவஞானம் பெற்றுக் கொள்ளவுள்ளார்.


இவ் விழாவில் விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் இடம்பெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் அறிவித்துள்ளார். (அ-9)




# கீரிபள்ளி கிராமத்தில் திருட்டு; திருடன் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

கரணவாய் கலட்டி கீரிபள்ளி கிராமத்தில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றவர்களை நெல்லியடி பொலிஸார் கையும்மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.



இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த மாதம் கரணவாய் கலட்டி கீரிபள்ளி எனும் கிராமத்திலுள்ள வீடொன்றில், வீட்டின் ஓடுகளைக் கழற்றி உள்நுழைந்த திருடர்கள் பெறுமதியான பொருட்கள் பலவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, நெல்லியடி பொலிஸாருக்கு வீட்டாரினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் கள்வாடப்பட்ட தொலைபேசியிலிருந்து குறித்த நபரொருவர் உரையாடியுள்ளார். இத் தகவல் நெல்லியடி குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு கிடைக்க அவர்கள் சாதுரியமான முறையில் கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்த இருவரைக் கைது செய்துள்ளனர்.

அத்தோடு அவர்களிடமிருந்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணனி, 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கமரா, 80 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு கைத்தொலைபேசிகள் உள்ளடங்கலாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வரையான பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் நேற்று முன்தினம் நெல்லியடி குற்றப்புலனாய்வுப் பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

விசாரணை செய்த பதில் நீதவான் குறித்த இரு நபர்களையும் 14 நாட்கள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

திருடப்பட்ட குறித்த வீட்டில் இவ் வருடத்தில் மட்டும் மூன்று தடவைகள் களவுச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

# அரச சார்பற்ற நிறுவன நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினரின் அடுத்தாண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை டாக்டர் வி.தியாகராஜா தலைமையில் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் நிதி, நிர்வாக அபிவிருத்தி செயற்பாட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 2014 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனடிப்படையில், தலைவராக திருமதி சரோஜா சிவச்சந்திரனும் (மகளிர் அபிவிருத்தி நிலையம்) உப தலைவராக டாக்டர் வி.தியாகராஜா, (மக்கள் நலன் காக்கும் பிரிவு), செயலாளராக ஜே.ரமணதாஸ்(வைகுறோ), உப செயலாளராக என்.நகு லேந்திரன் (சேவாலங்கா மன்றம்), பொருளாளராக ஆர்.எ.தில கரட்ணம் (கரிதாஸ் கியூடெக்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(அ-9)



யாழ்.மறைமாவட்ட ஆயர் இ.தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் குருத்துவ அபிஷேகத்தின் பொன்விழா நேற்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# கருத்தரங்கு

வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்,யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை நெல்லியடி நெல்லை முருகன் ஆலயமண்ட பத்தில் காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் அன்றைய தினம் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

union assurance
Trust in your tomorrow, today.

வேலைவாய்ப்புகளுக்கான நேர்முகத் தேர்வு

23.12.2013 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் யூனியன் அசூரன்ஸ்சில் நடைபெறவுள்ளது.

தொடர்புகளுக்கு:- 0773438513
139, ஸ்ரான்லி றோட் ,
யாழ்ப்பாணம். (டயலொக் அருகாமையில்)
(C-5874)



## உடனடியான தொழில்

வருமான பிரச்சினையா ??? தொழில் தேடுகிறீர்களா ??? கவலையை விடுங்கள் ...... 18–55 ஆண், பெண்

எம்மிடம் கொழும்பை அண்மித்த பகுதிகளின் பிரபல்யமான தொழிற்சாலைகளான டொபி/ ஜாம்/ கோடியல்/ பிஸ்கட்/ PVC/ பிளாஸ்டிக்பை/ கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில். உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/–, 25,000 /– , 38,000 /– சம்பளங்களுடன் உற்பத்தி / லேபல் / பொதியிடல் / களஞ்சியப்படுத்தல் பிரிவுகளில் நிரந்தர உடனடி வேலைவாய்ப்பு.

0777 117 661, 0775561883
(C-5729)



## வேலைவாய்ப்பு

உங்களுக்கு கப்பல்/ விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? அழையுங்கள். கப்பல் புனர் நிர்மாணத்துறையில் வெல்டர்/தச்சு/சாதாரண ஊழியர்கள் மற்றும் விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர் / கேப்ட்டரீங்/ காகோ/ லொன்றி பிரிவுகளுக்கு 18–45 வயது ஆண்–பெண் தேவை. உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 18000/– 25000/– 32000/– தொழில் அடிப்படையில் சம்பளம். தொடர்புகளுக்கு முந்துங்கள்.

தொடர்பு:–0775561883


## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் புனித நீக்கொலார் ஒளி விழா இன்று ஞாயிறு மாலை 4.30 மணிக்கு திருப் பலியுடன் ஆரம்பித்து ஆலய முன்றலில் மாலை 6 மணிக்கு பல்வேறு கலை நிகழ்வு களுடன் இடம்பெறும். இங்குகிளாலி, கச்சாய், தவசிகுளம் ஆகிய உப பங்குகளை சேர்ந் தவர்களுடைய கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமல மரித் தியாகிகள் குருமட உப அதிபர் அருட் பணி பீ. சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக உசன் முருகன் கோவில் பிரதம குரு கேதீஸ்வர சர்மா குருக்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## பாராட்டு நிகழ்வு

அஞ்சல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தபால் அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சை தரம் –I இல் சித்தியடைந்த உருத்திராபதி ரகுபதியை பாராட்டும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் ஓய்வு பெற்ற இ.போ.ச. திடீர் பரிசோதனை அதிகாரி கி.வெள்ளிமலை தலைமையில் நடைபெறவுள்ளது. (அ–9–60)


990/– 990/– 2190/– 690/–




1.அவசர மின் விளக்கு மற்றும் விசிறி 990/– மட்டுமே
2. நுளம்பு கொல்லி 990/– மட்டுமே
3.ஈ/பூச்சி கொல்லி 2190/– மட்டுமே
4.அவசர மின்விளக்கு 690/– மட்டுமே
(4829)

மற்றும் உங்கள் மின் கட்டணத்தை குறைக்கும் (10%–15%)LED மின்விளக்குகள் (290/–) ரீச்சார்ஜபிள் ப்ளாஷ்லைட் (790/–) சோலார் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. முழு விற்பனை மற்றும் சில்லறை விற்பனை

68, CROSSETT LANE, OFF KACHCH ERI NALLUR ROAD, NALLUR, JAFFNA/ Tel: 0789130813/0788745253 email: christiepara@yahoo.co.in



## காணி விற்பனைக்கு

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் இருக்கும் வீதியில் 800 மீற்றர் தூரத்தில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:–
0779442687 (5102)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் வெற்றிடம் கொழும்பு அண்மித்த பிரதேசங்கள்/ யாழ்/ திருகோணமலை/ கண்டி/ கம்பஹா போன்ற பிரதேசங்களில் மேசன்/ தச்சு/ செடலின் பாஸ்/ கம்பி பாஸ்/ டயில் பாஸ்/ (1200/– 1500/–) கையுதவியாளர் (800/– 1200/–) மாதாந்தம் சம்பளம் வருகை தரும் அன்றே தொழில் வாய்ப்பு.

தொடர்பு:– 0775561883


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 18 செவ் 2 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: O/L / சாரதி (மலேசியா)
தொ.இ: B/2665

பிறப்பு: 1974 இந்து (V)
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 9 செவ் 4 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்: Dip. in Accounting (Book keeping), Computer Engineering (அவுஸ்திரேலியா - PR)
தொ.இ: B/2667

பிறப்பு: 1985 இந்து (Vis)
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 46 உயரம்: 5’
தகைமை/தொழில்: A/L / சொந்த வேலை
தொ.இ: B/2669

பிறப்பு: 1985 கிறீஸ்தவம் (RC - V)
நட்சத்திரம்: பரணி உயரம்: 177 cm
தகைமை/தொழில்: PHD / விரிவுரையாளர் (பிரான்ஸ் - PR)
தொ.இ: B/2670

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து (Siva V)
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 65 செவ் 8 இல் உயரம்: 5’2"
தகைமை/தொழில்: A/L / வியாபாரம் (நோர்வே – PR)
தொ.இ: G/2694

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 52 செவ் 4 ல்
உயரம்: 5’1"
தகைமை/தொழில்: A/L, Dip. in Preschool / முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/2697

பிறப்பு: 1972 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா: 13.5 சூரி, செவ் 12 ல்
உயரம்: 5’1"
தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்
தொ.இ: G/2699

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: சதயம் 1 கி.பா: 27
செவ் 4 இல் உயரம்: 5’
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/86

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


## தேவை நாடும் மகளிர்

நீங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணா?
அல்லது சிறுமியா?
அப்படியாயின்
உளவளத்துணை (மனநல ஆலோசனை)
சட்ட உதவி
எம்மால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மௌனத்தைக் கலையுங்கள்!
வாழ்வில் வெற்றி கொள்ளுங்கள்!!

விபரங்களுக்கு:

தேவை நாடும் மகளிர் ‘வின்’

அவசர தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலமாக விஸ்தரிக்கப்பட்டு
2014 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது
011 4718585
இல 35A, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
அலுவலக இல. 021 222 9671
இணையத்தளம்: www.winsl.net
Facebook - Women In Need (WIN)
(5112)



1717 FOLLOW US www.mobitel.lk




இப் பண்டிகை காலத்தில், வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளை வாழ்த்திட மிகச் சிறந்த IDD கட்டணங்கள் அடங்கிய மொபிடெல் IDD அட்டைகள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரு. 189 | ரு. 300 | ரு. 100 | ரு. 400 |
| ரு. 589 | ரு. 900 | ரு. 400 | ரு. 1,300 |

கட்டணங்கள் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டவை. *நிபந்தனைகளுக்குட்பட்டது.

Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.
(த-5842)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வங்கி முகாமையாளராக வருவதே எனது விருப்பம்

## யாழில் வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி

(யாழ்ப்பாணம்)

யாரிடம் படிக்கின்றார்கள் என்பதை விட எதனைப் படிக்கின்றார்கள் என்பதே முக்கியமானது என வர்த்தகப் பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவியான நிதுஷா ஜெயக்குமார் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெளியான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப் படையில் யாழ்.மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் 97 ஆவது இடத்தையும் பெற்ற மாணவி நிதுஷா வலம்புரிக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது,

நான் இவ்வாறு முன்னிலையில் பெறுபேறினைப் பெற்றமைக்கு காரணமாக இருந்த எனது பாடசாலை ஆசிரியர்கள், மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோர்களுக்கு மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனிவரும் காலங்களில் எனது சகோதரர்களை இன்னும் முன்னிலையில் பெறுபேற்றினை பெற வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு அவர்கள் யாரிடம் படிக்கின்றார்கள் என்பதைவிட எதனைப் படிக்கின்றார்கள் என்பதே முக்கியமானது என்பதை தெரிவிப்பதோடு எனக்கு ஊக்குவிப்புத் தந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

நான் எதிர்காலத்தில் வங்கி முகாமையாளராக வர வேண்டும் என்பதோடு சிறந்த தமிழ் விரிவுரையாளராக வருவதற்கும் கடினமாக முயற்சி செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துடன் என்னை நேரடியாகத் தொடர்பு கொண்ட வலம்புரி பத்திரிகையாளர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். (அ-6-11)

# தொடரும் தொண்டர்களின் போராட்டத்துக்கு மௌனம் காக்கும் உயர் அதிகாரிகள்

**(யாழ்ப்பாணம்)**

**உயர் அதிகாரிகள் மௌனமாயிருக்க தீர்வு கிடைக்காமல் முடிவின்றி தொடர்கின்றது யாழ். போதனா வைத்தியசாலைத் தொண்டர்களின் தொடர் போராட்டம்**

நேற்றைய தினம் மூன்றாவது நாளாகவும் தொண்டர்களின் போராட்டம் தொடர்ந்ததோடு போராட்டத்துக்கு தீர்வு கிடைக்காமையினால் தொண்டர்கள் விரக்தி நிலைக்கு சென்றுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டரடிப்படையில் பணியாற்றிய சென் ஜோன்ஸ் பணியாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வைத்தியசாலையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 8 நாட்களாக தொடர்ந்த இப் போராட்டம் நேற்றைய தினமும் முடிவுகள் எட்டப்படாமையினால் 9 ஆவது நாளாகவும் தொடர்ந்ததோடு இன்றும் தொடரவுள்ளது என தொண்டர்கள் தெரிவிக்கின்றனர்.

தொண்டர்களின் இப்போராட்டத்தினால் யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள போதிலும் உரிய அதிகாரிகள் அந்த விடயத்தில் கவனமெடுக்காமல் அசண்டையீனமாகவேயுள்ளனர். தம்மை வந்து சந்தித்த 3 நாட்களுக்குள் தீர்வு தருவோம் என கூறிச் சென்றவர்களை இதுவரை (நேற்று வரை) காணோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர் . 9 நாட்களாகியும் தொடரும் எமது போராட்டத்திற்கு பதில் தரப்படவில்லை. ஆகையினால் எமது போராட்டத்தின் வடிவத்தை உயரதிகாரிகளே மாற்றியமைக்க முயல்கின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

எமக்கு நியமனம் வழங்காவிட்டால் நாம் சாவதற்கும் தயங்க மாட்டோம் எனவும் அவர்கள் கதறியழுதனர். (அ-4)

# தேசிய ரீதியில் மிளிர சுயகற்றல் அவசியம்

## யாழில் கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன்

சுயகற்றல்மூலமே தேசிய ரீதியில் மிளிர முடிந்ததென கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் 3 ஆம் இடமும் மாவட்ட ரீதியில் முதலாமிடமும் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் இராஜசேகரன் யதுசன் தெரிவித்துள்ளார். இணுவிலைச் சேர்ந்த குறித்த மாணவன் யாழ். இந்துக் கல்லூரியில் கணிதப் பிரிவில் கல்வி கற்று மாவட்டத்தில் முதலாம் நிலையிலும் தேசிய ரீதியில் 3 ஆம் நிலையிலும் இடம் பிடித்துள்ளார். தனது வெற்றி குறித்து அம் மாணவன் தெரிவிக்கையில் எனது வெற்றிக்கு வித்திட்ட எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு எனக்கு அருள் புரிந்த சத்திய பாபா அவர்களினையும் மனதில் கொள்கிறேன்.

சுயமாகவும் தேடிக் கற்பதன்மூலம் என்னைவிட தேசிய ரீதியில் மிளிர முடியும் கல்வி கற்பிக் கும் ஆசிரியர்கள் தெய்வமாக போற்றப்படவேண்டும் எதிர் காலத்தில் ஒரு பொறியியளாளராக வந்து எனது மக்களிற்கு சேவையாற்ற வேண்டும் என்றார் அவர். (அ-4)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய சேவை புரிவதே எனது நோக்கம்

## யாழில் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன்

ஒரு கேள்விக்கு தவறாக அளித்த பதிலால் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று எனது மாகாணத்துக்கு பெருமை சேர்க்க முடியாமற் போய்விட்டது என யாழ்மாவட்டத்தில் உயிரியல்பிரிவில் முதலாம் இடத்தினையும் தேசிய ரீதியில் ஆறாம் இடத்தினையும் பெற்ற யாழ். ஹாட்லிக்கல்லூரி மாணவன் சிவஞான செல்வம் தினேஷ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் தினேஷ் வலம்புரிக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வெற்றிக்கு பிரதான காரணம் எனது தந்தையே. அவர் எனக்கு நம்பிக்கையினையும் முயற்சியையும் துணிவையும் ஊட்டினார். அவர் எனக்காக அதிகம் பாடுபட்டுள்ளார்.

நான் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் போது மிகவும் அவதானத்துடன் கற்பேன். இரவில் அதிக நேரம் நித்திரை முழித்து கற்றதில்லை. அத்துடன் மாணவர் கல்வி கற்கும் போது கவனக் கலைப்பு செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. எனது வெற்றிக்கு கல்லூரி அதிபர், ஆசிரியர்களும் பங்கு வகிக்கின்றனர். எனக்கு கல்வியில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துக் கொள்வேன். வைத்தியத் துறையினூடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை பார்த்த போதே வைத்தியராக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்தது.

மாணவர்கள் நம்பிக்கையுடனும் துணிவுடனும் தமது கல்வியைத் தொடர வேண்டும். தோல்வியைக் கண்டு மனம் தளரக் கூடாது. தொலைபேசி பாவனை, தொலைக்காட்சி பார்த்தல் போன்றவற்றை தவிர்ப்பது கல்வியில் சாதிக்க உதவும். மேலும் எனது சுய விருப்பத்தின் பேரிலேயே உயிரியல் பிரிவைத் தெரிவு செய்தேன் அதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் முதல் இடத்தினைப் பெற முடிந்துள்ளது.

ஆனால் தேசிய ரீதியல் முதலிடத்தைப் பெற வேண்டும் என்பதே எனது நோக்கமாகயிருந்தது. ஆனால் ஒரு கேள்விக்கு தவறாக பதிலளித்ததனால் 6 புள்ளிகளை இழந்து விட்டேன். அதனால் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று சாதிக்க முடியவில்லை என்றார். (அ-6)

# க.பொ. உயர்தரப் பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. இவ் முடிவுகளில் முன்னணிப் பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர். முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

3A *கணிதத்துறை*

இராஜசேகரன் யதுசன், சண்முகலிங்கம் குருபரன், சிவகுமார் மேகலாதன், நகுலநாதன் லவலோஜன், சந்திரதேசன் ராம்ராஜ், கைலாசபதி சுதாகர், குணாநந்தசீலன் நிலக்ஷன்(E), திருலிங்கம் ஆதவலோசன், செந்தில்நாதன் கிரிஷாந், குமாரசாமி கஜானன், புண்ணியராஜா திவாகரன், நந்தகுமாரன் கேதீஸ்வரன், சண்முகநாதன் சந்தோஷன்

3A *உயிரியல்துறை*

இரட்ணசிங்கம் பிரணவன், துரைசிங்கம் ஆதவன்

3A *வர்த்தகத்துறை*

கிருபாலன் சுபாங்கன், இதயராஜா ரமணன், கோபலச்சந்திரன் குகரூபன்.

**யா/ யூனியன் கல்லூரி**

*கணிதப் பிரிவு*

சி.சுஜேந்திரன் 3A, த.தர்சனா 3C சி.ஜசிகரன் 2CS, க.பிரகாஸ் 2CS

*உயிரியல்பிரிவு*

பா.துர்க்கா 3C, தே.ராகவி BCS, இ.துர்க்காயினி 2CS

*வர்த்தகப்பிரிவு*

மோ.சித்திராங்கன் B2C, க.சிந்துஜா 3C

*கலைப்பிரிவு*

கோ.பிரியதர்சினி 2AB, க.அர்ச்சிகா 2AB, நி.பர்மினா ABC, கு.கீர்த்திகா ABC, க.சிவரூபிநாயகி ABC, சி.பவீந்திரன்3B , ப.பிரசன்னா 2BC, ப.பிரசாத் 2BC.

**யா/மகாஜனக் கல்லூரி**

**தெல்லிப்பழை**

*உயிரியல் பிரிவு*

வி.பிறேமினி 3B, எ.தர்சன் 2BC, வை.ஆரணி 2CS, கெ.சுவேந்தினி 3C, வி.அபிசாயினி C2S,

*கணிதம்*

ஜே.ஜெயக்கமலன் A2B ரி.மதுரா 3C, பி.திவாகரன் 3C, பி.மீரஜா C2S

*வர்த்தகம்*

பி.கஜவதனி 2AB, [illegible] 2AB, பி.கபில்ராஜ் A2B, ஆர். ரேணுகா B2C

*கலை*

ரி.ஜிவிதா 3A, பி.புகழரசி 3A, எஸ்.அனிஸ்ரா 2AB, எம்.திசபொல 2AC, எஸ்.சோபிகா 2AC, எஸ்.துஸ்யந்தினி A2B, பி.விஸ்ணுகீத் A2B, வி.வித்ஜா A2B, கே.திவ்யா A2B, எஸ்.நிரோஜா A2B, எஸ்.துசிதா ABC, எஸ்.கஜனான் A2C, ரி.தனுசா ACS, வி.நிசாந் ரட்ணகுமார் 3B, ஆர்.கோகிலாணி 2BC, எஸ்.தீபகுமார் 2BC, ரி.கஜலக்சி 2BC, எஸ்.பிரதாப் 2BC, வி.விஸ்மன் 2BC, எ.ஸ்ரீசரண்யா 2BC , எஸ்.சிவகஜன் 2BS, என்.சிந்தூரன் 2BS ரி.புஸ்பரதன் B2C பி.விஜிதா b2C, எல்.லக்சியா B2C, ரி.சியாமி B2C, என்.சகானா B2C, ஆர்.ரஜிதரன் B2C, எ.கஜன் B2C, எஸ்.நிந்துஜா B2C, எ.உதயசாந்தினி B2C, எஸ்.ரதீஸ்குமார் BCS, எஸ்.கஜீபன் BCS, ஆர்.நிருஜா BCS, எஸ். தரணிகா BCS, கே.சர்வஜன் BCS, கே.கிருஜன் BCS, ஜி.சேருசன் BCS, எ.ரஜினி B2S, எம்.குயின்ஷா B2S, வி.அனிஸ்ரா B2C,

**[illegible]**

**[illegible]**

*கணிதம்*

சிவயோகநாதன் துவாரகன் 3A, கிருஷ்ணயோகன் பிரணவன்A2B, சிவானந்தன் சுகந்தன்3B, அருளானந்தசிவம் மோகன்லால்ABC, பாலசிங்கம் டிலக்ஷன்A2B, பரமநாதன் ஹரிதர்ஷன்ABC, ஞானவடிவேல் சர்மிலன்ABC, விக்னேஸ்வரமூர்த்தி முகுந்தன்B2C, நேசராசா அங்கதன் B2C,

*உயிரியல்*

செல்வராசா சஞ்சிகாA2B, சிறீஸ்குமார் சாகிர்த்தியா ABC, புவிராஜசிங்கம் பிரவீனன்ABC, நேசராசா ஆதித்தியா 3B, பிரியதர்சினி பாலசுப்பிரமணியம் 2BC, விஜயராசா கலைவாணி B2C, விஸ்வலிங்கம் பிரியா 2BS

*வர்த்தகம்*

அம்பிகாநிதி துளசி 2AB, சிவநேசன் சிந்துஜா2AB, கிரிதரன் நிருபன் 2AC,ஆனந்தராஜா ஜிகானந் 2AC,

*கலை*

கந்தசாமி சஞ்சீபா 2AB, இராஜலிங்கம் ஈஸ்வரன்ABC

***விக்டோரியா கல்லூரி***

*கணிதப்பிரிவு*

செந்தில்நாதன் சாருஜா 2ஏபி, திருமூர்த்தி சேந்தன் 2ஏசி, இந்திரகுமார் கார்த்திகா ஏ2பி

*உயிரியல்பிரிவு*

சிவகுமார் சிவசங்கர் ஏபிசி, மனோகரன் பிரதீபன் பி2சி, ஸ்ரீகிருஷ்ணராசா காருண்யா பிசிஎஸ்

*வர்த்தகப்பிரிவு*

காந்தரத்னம் கபிலன் 3பி, கணேஸ்வரன் காயத்திரி ஏ2சி, யோகேஸ்வரன் யோகிதா பி2சி

*கலைப்பிரிவு*

தெய்வேந்திரம் தர்சிகா ஏ2பி, பத்மநாதன் சிவப்பிரியா 2ஏசி, வள்ளிகாந்தன் கவிதா 2ஏசி, கந்தசாமி காருண்யா 2ஏசி, சண்முகநாதன் யதீசன் 2ஏசி, கனகலிங்கம் காத்யாயினி ஏ2பி

**யா/வரணி மத்திய கல்லூரி**

முருகன் சிந்துஜா 3A, தனபாலசிங்கம் அகிலன் 3A, இராசேந்திரம் மாதங்கி 2AB, விக்கினேஸ்வரன் வினோஜா 2AB, சிவராசா லோஜிகா 2AC, சண்முகசுந்தரம் கசிந்தன் 2AC, அம்பலவாணர் பூரணி A2B, கந்தசாமி சிந்துஜா A2B, இராசேந்திரன் நிரோஜன் A2B, சுகேந்திரன் சுஜீபன் ABC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையார்கட்டு பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமியுங்கள்

## வினோ எம்.பியிடம் மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

**முல்லைத்தீவு, உடையார்கட்டு பிரதேச வைத்தியசாலைக்கென பத்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்ட நிலையில் இன்னும் சேதமடைந்த நிலையில் உள்ள பழைய கிராமிய வைத்தியசாலைக் கட்டடத்தில் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி நிரந்தர வைத்தியரும் இல்லாமல் உள்ளமையினால் அப்பகுதி மக்களும், நோயாளர்களும் பல்வேறு சிரமத்தை எதிர்நோக்குவதாக அம்மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோதராதலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.**

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு உடையார்கட்டு, மூங்கிலாறு ஆகிய பிரதேசத்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் குறித்த வைத்தியசாலைக்கு நேரில் சென்று அங்குள்ள மக்களையும், பிரதிநிதிகளையும் சந்தித்த போதே அவர்கள் அந்த கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அந்த மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் மேலும் தெரிவிக்கையில்,

நாளாந்தம் இரண்டு மணி நேரம் மட்டுமே வைத்திய அதிகாரி கடமையில் இருப்பதாகவும், அவசர சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் 13 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கோ அல்லது கிளிநொச்சி மாவட்ட தர்மபுரம் வைத்தியசாலைக்கோ செல்ல வேண்டியுள்ளது.

விஸ்வமடு, உடையார்கட்டு, றெட்பானா, சுதந்திரபுரம் போன்ற சனத்தொகை கூடிய கிராமங்களுக்கென இருக்கும் ஒரே ஒரு சிறிய கட்டடத்தில் இயங்கும் இவ்வைத்தியசாலையின் கூறை ஓடுகள் உடைந்த நிலையில் காணப்படுவதினால் மழை காலங்களில் மழை நீர் உட்செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலைக்கென ஒதுக்கப்பட்ட புதிய காணியில் நிரந்தர கட்டடத்தை கட்டுவதற்கும் நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கும் ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலைக்கு நேரில் விஜயம் செய்து குறைகளை கேட்டறிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோதராதலிங்கத்திடம் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் வீ.கனக சுந்தரசுவாமி ஆகியோரிடம் கிராம மக்களும் கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் குறித்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். (ம-250)

# யுவதி மீது வன்புணர்வு; சந்தேக நபர்கள் கைது

(முல்லைத்தீவு)

தகப்பன், பெரிய தகப்பன், சிறிய தந்தை ஆகிய மூவரினாலும் பரிதாபமான முறையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்ட 20 வயது நிரம்பிய மனநலம் குன்றிய மகளை மல்லாவி பொலிஸார் மீட்டெடுத்துள்ளதுடன் தாயின் முறைப்பாட்டினடிப்படையில் மூவரையும் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜராக்கிய வேளை அம் மூவரையும் எதிர் வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.


மேற்படி சம்பவம் பல காலமாக நடைபெற்று வந்ததாகவும் மேற்படி மூவரினதும் பாதுகாப்பில் விட்டு விட்டு தாய் வேலைக்கு சென்றுவிடுவதாகவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (ம)




# க.பொ.த. உயர்தர பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்கள்



தி.சகாணன்
கிளிநொச்சி மாவட்டத்தில்
கணிதப்பிரிவில் முதலாமிடம்



அ.பிரதீன்
முல்லைத்தீவு மாவட்டத்தில்
உயிரியல்பிரிவில் முதலாமிடம்



ம.கிருத்திகா
கிளிநொச்சி மாவட்டத்தில்
கலைப்பிரிவில் முதலாமிடம்

க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியுள்ளன. முன்னணி பெறுபேறுகளின்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மாவட்டங்களில் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை பிரிவுகளில் முதல் நிலைகளை பெற்ற சில மாணவர்களின் விபரம் வருமாறு,

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த அமிர்தநாதன்- பிரதீன் 2ஏபி பெறுபேற்றை பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதலாமிடத்தையும் கலைப்பிரிவில் அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவி தெட்சணாமூர்த்தி மதுஷா 3ஏ பெறுபேற்றை பெற்று முதலாமிடத்தைப் பெற்றுள்ளதுடன் தேசிய மட்டத்தில் 23 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

வர்த்தகப்பிரிவில் முள்ளியவளை வித்தியாணந்த கல்லூரியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன்- நிறோஜிதா 2ஏபி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் கணிதப் பிரிவில் அதே பாடசாலையைச் சேர்ந்த எம்.பிரசாத் 2ஏபி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் கிளி/ மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஞானேஸ்வரன் சுடர்வண்ணன் 2ஏபி பெறுபேற்றை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் உருத்திரபுரம் ம.வி. மாணவி மகேந்திரன்- கிருத்திகா கலைப்பிரிவில் 3 ஏ பெறுபேற்றை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளார்.

கிளி/ பளை மத்திய கல்லூரி மாணவன் திருக்கேதீஸ்வரன் சகாணன் கணிதப்பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் விஞ்ஞானப் பிரிவில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி சிவமைந்தன் தட்சாயினி உயிரியல் பிரிவில் முதலாமிடத்தையும்தேசிய மட்டத்தில் 23 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அத்துடன் அதேபாடசாலையைச் சேர்ந்த மாணவி பத்மநாதன் துசானி வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (அ-266)

# மாடு வெட்டியவருக்கு கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

முள்ளியவளை 4ஆம் வட்டாரம் புதரிக்குடா பகுதியில் பெறுமதி வாய்ந்த பசுமாடுகளை இறைச்சிக்காக களவாடி கொலை செய்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஒருவருட கடூழியச்சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இந்தநபர் மீது கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி அன்று வழக்கு தொடரப்பட்டு விசாரணையின் பின்னர் கடந்த 19 ஆம் திகதி அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி நபர் மேலும் பல பெறுமதியான மாடுகளை களவாடி இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (ம)

# வவு.நெளுக்குளம் பகுதியில் வயோதிபரின் சடலம் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளம் மன்னார் வீதியில் உள்ள வயல் பகுதியில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்று மதியம் தனது வயலுக்குச் சென்ற இராமன் சின்னையா (வயது 67) என்பவர் இரவாகியும் வீடு திரும்பாமையால் அவரைத தேடிய பொழுது அவர் வயல் வாய்க்கால் கரையில் இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்கு கொடுக்கப்பட்ட தகவலையடுத்து நேற்று காலை சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)



வவுனியா மாவட்ட சர்வோதய நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் உதயகுமாரன் தலைமையில் மகா இறம்பைக்குளம் சர்வோதய இளம்கதிர் சிரமதான சங்கத்தின் ஏற்பாட்டில் சிரமதானம் அண்மையில் நடைபெற்ற போது... (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனியின் கடவுச்சொல் மறந்துவிட்டால் என்ன செய்யலாம்




விண்டோஸ் எக்ஸ்பி இயங்கு தளத்தில் பயனர் கணக்கை (user account) உருவாக்கி அதனை எவரும் அணுகா வண்ணம பாஸ்வேர்ட் மூலம் பாதுகாப்பளிக்கவும் முடியும் என்பது நீங்கள் அறிந்த விடயமே.

அப்படி நீங்கள் உருவாக்கும் பயனர் கணக்குக்குரிய பாஸ்வேர்ட் ஒருவேளை மறந்து போனால் விண்டோஸில் டிபோல்டாக உருவாக்கப்படும் அட்மினிஸ்ட் ரேட்டர் (administrator) கணக்கு மூலம் லாக் ஒன் செய்து அதனை நீக்க முடியும்.

Licensing Agreement திரை தோன்றும். அப்போது F8 விசையை அழுத்தியதும் வரும் திரையில் புதிதாக விண்டோஸை நிறுவுவதா அல்லது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதை சரி செய்வதா (Repair) என வினவும். அப்போது கீபோர்டில் R கீயை அழுத்தி ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விண்டோஸை சரி செய்வதற்கான விருப்பை தெரிவு செய்யவும்.

அடுத்து கணனி மறுபடி இயங்க ஆரம்பித்து (restart) ஒரு சில நிமிடங்களில் திரையின் இடது புறத்தில் Installing Devices எனும் செயற்பாடு நடைபெறக் காணலாம். இந்த இடத்தில்தான் நீங்கள் செயற்பட வேண்டியுள்ளது. இங்கு கீபோர்டில் SHIFT + F10 விசைகளை ஒரே நேரத்தில் அழுத்துங்கள். அப்போது திரையில் கமாண்ட் விண்டோ தோன்றும். கமாண்ட் ப்ரொம்டில் NUSRMGR.CPL என




இந்த அட்மினிஸ்ட்ரேட்டர் கணக்குக்குப் பாஸ்வேர்ட் இட்டுக் கொள்வோரும் உண்டு. இப்போது அந்த அட்மினிஸ்ட்ரேட்டர் கணக்குக் குரிய பாஸ்வேர்டும் மறந்து போனால் என்ன செய்வது?

அதற்கும் ஒரு தீர்விருக்கிறது. எனினும் இந்த வழிமுறை ஓரளவு சிக்கலானது. விண்டோஸைப் புதிதாக நிறுவும் முறையை அறிந்திருப்போருக்கு இது இலகுவான விடயமே.

முதலில் கணனியை இயக்கி சிடியிலிருந்து பூட் ஆகுமாறு பயோஸ் (BIOS) செட்டப்பில் மாற்றி விடுங்கள். கணனியை மறுபடி இயக்கி விண்டோஸ் எக்ஸ்பீ சடியை ட்ரைவிலிட Press any key to boot from CD எனும் செய்தி திரையில் தோன்றும். அப்போது ஒரு விசையை அழுத்த சீடியிலிருந்து கணனி பூட் ஆக ஆரம்பிக்கும். இது விண்டோஸை நிறுவும் செயற்பாட்டில் முதற்படியாகும்.

இந்த செயற்பாட்டில் கணினியைப் பரிசோதித்து பைல்கள் லோட் செய்யப்பட்டதும் டைப் செய்து எண்டர் கீயை அழுத்த கண்ட்ரோல் பேனலிலுள்ள User Accounts விண்டோ திறக்கக் காணலாம். இங்கு நீங்கள் விரும்பும் பயனர் கணக்குக்குரிய பாஸ்வர்டை மாற்றவோ நீக்கவோ முடியும்.,

ஒரு யூசர் கணக்கில் நுழையும்போது அதாவது லொக்-ஒன் செய்யும் போது பாஸ்வேர்டை வினவாமல் செய்ய அதே கமாண்ட் ப்ரொம்டில் control userpasswords2 என டைப் செய்து எண்டர் கீயை அழுத்துங்கள். அப்போது படத்தில் உள்ளது போல் ஒரு டயலொக் பொக்ஸ் தோன்றும். அங்கு அட்மினிஸ்ட்ரேட்டர் கணக்குக்குரிய பாஸ்வேர்டை மாறறவோ அல்லது நீக்கவோ (Reset password) ரீசெட் பாஸ்வேர்ட் பட்டனில் க்ளிக் செய்து மாற்றிக் கொள்ளலாம்.

மாற்றங்கள் செய்த பின்னர் அந்த டயலொக் பொக்ஸை மூடிவிட்டு விண்டோஸ் ரிபெயாரிங் செயற்பாடு பூர்த்தியாகும் வரை அதனைத் தொடர வேண்டும். அதன் பின்னர் உங்கள் கணனி அன் லெக் ஆகிவிடும்.

# HTC இன் விலை உயர்ந்த கைத்தொலைபேசி



HTC நிறுவனம் தன் மொபைல் போன்களிலேயே மிக அதிக விலை மதிப்புமிக்க போனை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் விலை இலங்கை ரூபாயின் மதிப்புபடி ஒரு இலட்சத்து 30 ஆயிரம்.

இருப்பதிலேயே மிகப்பெரிய திரையாக 5.9 அங்குல திரை இதில் உள்ளது, இதுவரை 4.7 அங்குல அகலத் திரையினையே HTC தந்து வந்தது.


இதன் பின்புற கமெராவின் கீழாக ஸ்கேனர் ஒன்று தரப்பட்டுள்ளது, விரல் ரேகையினை இது உணர்ந்து, இந்த போனின் உரிமையாளர் மட்டுமே பயன் படுத்த வழிவகை செய்கிறது.

இதன் இரு மொடல்கள் 16 மற்றும் 32 ஜிபி மெமரியுடன் உள்ளன. இந்த போனைப் பயன்படுத்துபவர்கள், கூகுள் ட்ரைவில் 50 ஜிபி மெமரி இடத்தினை இலவசமாகப் பெறலாம்.

இதில் இணைத்து தரப்படும் பற்றரி 3,300 mAh திறன் கொண்டதாக உள்ளது. வழக்கமாக, 4 அங்குல திரை கொண்ட போன்களில், 1,800 முதல் 2,000 mAh திறன் கொண்ட பற்றரிகள் இணைக்கப் படும்.

இதன் திரை 5.9 அங்குல அகலத்தில் அமைக்கப்படுவதால், கூடுதல் திறனுடன் கூடிய பற்றரி தரப்பட்டுள்ளது.

# விந்தணுக்களால் சக்தியூட்டப்பட்ட உலகின் முதலாவது உயிரியல் ரோபோ




விந்தணுக்களால் சக்தியூட்டப்பட்ட உலகின் முதலாவது உயிரியல் ரோபோவை ஜேர்மனிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். காந்தத்தை பயன்படுத்தி தூர இயங்கும் முறைமை மூலம் கட்டுப்படுத்தப்படும் நுண்ணிய உலோக குழாயினுள் எருது ஒன்றின் தனியொரு விந்தணுவை உட்செலுத்தியே இந்த உயிரியல் ரோபோவை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

இந்த ஆய்வுக்கு தலைமை தாங்கிய ரெஸ்டென் நகரிலுள்ள ஒருங்கிணைப்பு நுண் விஞ்ஞான நிறுவகத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான ஒலிவர் ஷமிட் விபரிக்கையில், இந்த உயிரியல் ரோபோவை எதிர் காலத்தில் உடலின்குறிப்பிட்ட பகுதிக்கு மருந்துகளை விநியோகிக்கவும் கருமுட்டையை கருக் கட்டச் செய்யவும் பயன்படுத்த முடியும் என்று கூறினார்.

50 மைக்ரோன் நீளமும் 5 முதல் 8 மைக்ரோன் விட்டமுமுடைய மேற்படி நுண் உலோக குழாய் ஒரு விந்தணுவை விடவும் சொற்ப அளவே பெரிதாகும். இத்தகைய குழாய் கட்டமைப்புக்குள் விந்தணுவை உட்செலுத்த பெரும் போராட்டத்தை எதிர் கொண்டதாக ஒலிவர் கூறினார்.


# நேரடி ஒளிபரப்பை விரிவு படுத்துகின்றது யூடியூப்




வீடியோக்களை பதிவேற்றுதல், பகிருதல் போன்ற சேவைகளை வழங்கிவரும் முன்னணி தளமான யூடியூப் தற்போது நேரடி ஒளிபரப்பு சேவையை விரிவுபடுத்துகி ன்றது.

அதாவது குறிப்பிட்ட சில விசேட பயனர்களுக்கு மாத்திரம் இதுவரையில் பல்வேறு நிகழ்ச்சிகளையும் நேரடி ஒளிபரப்பு சேவையை (Live Streaming) வழங்குவதற்கு 2011ஆம் ஆண்டிலிருந்து அனுமதி கொடுத்திருந்தது. எனினும் தற்போது தமது கணக்குகளை சிறந்த நிலையில் பாதுகாக்கும் ஏனைய பயனர்களுக்கும் இந்த வசதியை வழங்க யூடியூப் முன்வந்துள்ளது. இதனை பெறுவதற்கு ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் ஆயிரம் பின்தொடருனர்களைக் (Followers) கொண்டிருக்கவும் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உங்கள் மென்பொருளை பிறர் பயன்படுத்துவதை தடுப்பது எப்படி




கணனியில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்தும் போது சில பாதுகாப்பு குறைபாடுகள் வரலாம். நீங்கள் நிறுவியுள்ள மென்பொருளை வேறு யாரும் பயன்படுத்தி விடக்கூடாது என்று நினைக்கலாம்.

சிலர் உங்கள் மென்பொருளில் நுழைந்து ஏதாவது மாற்றம் செய்துவிடலாம். அலுவலகத்தில் வேலை செய்யும் போதும் கல்லூரிகளில், அலுவலகங்கள் போன்ற பொது இடங்களில் பணிபுரியும் சூழ்நிலையில் இந்த மாதிரி கட்டு ப்படுத்தும் செயல் அவசியமானது. இதனை நீங்கள் Group Policy Editor மூலமாகவும் செய்யலாம்.

ஆனால் எளிமையாக கையாள இலவச மென்பொருள் Appadmin உள்ளது. முக்கியமான மென்பொருட்களை எவரும் பயன் படுத்த முடியாதபடி இந்த மென்பொருள் மூலம எளிமையாக செய்யலாம்.

இது மென்பொருட்களுக்கு கடவுச்சொல் கொடுத்து (password protect) அதை முடக்குகிறது. இதன் கடவுச்சொல் தெரிந்தவர்கள் மட்டுமே இதை பயன்படுத்த முடியும். இதில் முதலில் உங்களுக்கான கடவுச்சொல்லை கொடுத்து விட வேண்டும்.

பின் Block என்பதை கிளிக் செய்தால் எந்த மென்பொருளை தடை செய்கிறீர்களோ அதனை தேர்வு செய்துவிட வேண்டும். மேலும் இன்னொரு வசதியாக எந்த மென் பொருளையும் இதன் விண்டோவில் இழுத்து விட்டால (Drag and drop) கூட போதும்.

இதன் வடிவமைப்பு பயன்படுத்த எளிமையாக உள்ளது. இதை நிறுவத்தேவையில்லை. அப்படியே தரவிறக்கி பயன்படுத்தலாம்.

கீழே உள்ள முகவரியில் இலவசமாக பதிவிறக்கம் செய்ய முடியும்..

http://adf.ly/1erl0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று உத்தராயனம் ஆரம்பம்!

உத்தரம் என்றால் வடக்கு, அயனம் என்றால் போக்கு. சூரி யன் வடக்கு நோக்கிச் செல்லு தலையே உத்தரா யனம் என அழைக்கின்றோம்.

வசந்த விஷுபுண்ணியகாலம், தட்சணாயனப் புண்ணியகாலம், சரத்விஷுபுண்ணியகாலம், உத்த ராயனப் புண்ணியகாலம் என குறிப்பிடப்படுபவை வானியல் தொடர் பாக புவியில் நிகழும் பருவகால ஆரம்பங்களேயாகும்.

ஆங்கில மாதப்படி மார்ச் 21, ஜூன்21, செப்டெம்பர் 22, டிசெம்பர் 22 ஆகிய தினங்களில் இப் பருவ காலங்கள் ஆரம்பமாகின்றன.

இவையே ஸ்பிரிங், சமர், ஓட்டம், விண்டர் (Spring, Summer, Autumn, Winter) என ஆங்கிலப் பதத் தால் அழைக்கப்படுகின்றது.

பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவது மட்டும்தான் அனேகமானோ ருக்குத் தெரியும்.

ஆனால் பூமியின் சுழற்சியின் போது பூமி சுற்றும் திசைக்கு எதிர்த் திசையாக பூமியின் அச்சுச் சுழல் கின்றது.

இந்தச் சுழற்சியினால் ஒவ்வொரு வருடமும் ஏற்படும் கதி பேதம் 50 செக்கன்களாகும்.

இவ்வாறு பூமியின் அச்சுச்சுழற்சி யால் ஏற்படும் மாற்றத்தையே முந் துகை அல்லது முன்நிகழ்ச்சி (The Precessional Movement of the Earth) என அழைக்கிறோம். அய னாம்சம் எனவும் இதுவே குறிப் பிடப்படுகின்றது.

இச்சுழற்சிக்கு வருடமொன்றிற்கு 50 செக்கன் வீதமாக ஒரு பாகை யைக் கடக்க 72 வருடங்கள் 360 பாகையைக் கடந்து சுற்று பூரண மடைய 25 ஆயிரத்து 920 வருடங் களும் செல்கிறது.

இம் முந்துகையால் வானிலை யில் ஏற்படும் மாற்றம் பருவகாலங் களிலும் மாற்றத்தை ஏற்படுத்து கிறது.

தமிழ் மாதப்படி உத்தராயனம் ஆரம்பமாவது தை மாதப் பிறப் பன்று (ஜனவரி14) என நம்மவர் குறிப்பிட்டாலும் முந்துகையின் விளைவாக 23 நாட்களுக்கு முன் பதாகவே உத்தராயனம் ஆரம் பமாவதை வானியல் பஞ்சாங்கங் கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

எனவே இன்றைய தினமே உத்தராயனப் புண்ணியகாலம் ஆகும். ஏறக்குறைய ஆயிரத்து 732 வருடங்களுக்கு முன்னர் தை மாதப் பிறப்பன்று நிகழ்ந்த உத்த ராயனப் புண்ணிய காலத்தை இன்றும் அவ்வாறு நிகழ்வதாக ஏற்றுக் கொள்வது அறிவுடைமை ஆகாது.

பொய்யற்ற கீரன்

# இந்திய பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கை வருகை



இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நேச்சல் சந்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கொழும்பில் சந்தி த்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது. இதில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் யஷ்வந்த்குமார் சின்ஹா வும் பங்கேற்றுள்ளார்.

இருதரப்பு நலன்கள் தொடர்பாக இதன் போது பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக, இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள் ளது.

எனினும், இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் இந்தப் பயணத்தின் நோக்கம் குறித்து எந்த தகவலும் வெளியிடப் படவில்லை.

முன்னதாக, இவர், முத்தரப்பு கடல்சார் பாதுகாப்பு கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக கூறப்பட்டது. ஆனால், இக் கூட்டத்தில் இந்திய, இலங்கை, மாலைதீவு கடலோரக் காவற்படை அதிகாரிகள் மட்டுமே பங்கேற்றிருந்தனர்.

அதில் இந்தியாவின் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் நேச்சல் சந்து பங்கேற்கவில்லை.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தா பய ராஜபக்ஷ அண்மையில் புதுடில் லிக்கு ஒரு இரகசியப் பயணத்தை மேற்கொண்டு, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் உள்ளிட்ட பாது காப்பு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (அ-2)

# போதைப்பொருள் விற்பனை செய்வோர் யார்?- ஹெல உறுமய

(கொழும்பு)

போதைப்பொருள் விற்பனை செய்வோர் யார்? என ஜாதிக ஹெல உறுமயக் கட்சி கேள்வியெழுப்பியுள் ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்க ளில் பலர் போதைப் பொருள் விற் பனை செய்துவருவதாக அண் மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியிருந்தார்.

இவ்வாறு போதைப் பொருள் விற்பனை செய்வோர் பற்றிய தகவல்களை வெளியிடுமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் விற்பனை யில் ஈடுபடுவோர் பற்றிய தகவல் களை வெளியிடாமை பாரதூர மான சமூக மற்றும் சட்ட விரோத செயலாகும்.

பிரதமர் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடவில்லை என்ற நிலைப்பாடு மங்கள சமரவீர வின் நிலைப்பாடா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடா என ஓமல்பே சோபித தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# பாக்.சபாநாயகர் இலங்கை வருகை

(கொழும்பு)

பாகிஸ்தான் நாடாளுமன்ற சபா நாயகர் சர்தார் அயாஸ் சாதிக் உட் பட பாகிஸ்தான் பிரதிநிதிகள் மூன்று நாட்கள் விஜயம் ஒன்றைமேற் கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் விசேட அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள இந்த தூதுக் குழுவினரை பிரதி சபாநாயகர் சந்திம வீரக் கொடி விமான நிலையத்தில் வரவேற்றார்.

பாகிஸ்தான் தூதுக்குழுவினர் நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்து சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத் தவுள்ளனர். (அ-2)

# பால் நிலை சமத்துவ பயிற்சி

(மானிப்பாய்)

மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இதம் உள வள நிலையத்துடன் இணைந்து நடத்தும் பால் நிலை சமத்துவப் பயிற்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை அதிபர் திருமதி சிவகுமார் கலந்து கொள்ளவுள் ளதோடு கருத்துரைகளை இதம் உளவள நிலையத்தினைச் சேர்ந்த வளவாளர்கள் பி.புலேந்திரன் மற் றும் ஈ.சைலஜா ஆகியோர் வழங்க வுள்ளனர்.

ஆர்வமுள்ள இளைஞர், யுவதி களை கலந்து பயன்பெறுமாறு கேட் கப்பட்டுள்ளது. (அ-9-23)



வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால் நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவின் போது....
(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# திருவாசக விழா போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

திருவாசக விழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் யாழ்.மாவட்ட அறநெறிப் பாட சாலை மாணவர்களி டையே நடத்திய கட்டுரை, பேச்சு, பண்ணிசை ஆகிய போட்டிமுடிபுகளை யாழ்.மாவட்ட அபி விருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்றிடங் களைப் பெற்றவர்களின் பெயர் விப ரங்கள் வருமாறு:

**பாலர் பிரிவு பண்ணிசை:**

மு.ரேவதி (சித்தி விநாயகர் அற நெறிப் பாடசாலை), கு.வைஷ்ணவி (கிழவன்காடு கலாமன்ற அ.நெ. பா.), கு.லோகிதா (மருதனார் மடம் ஸ்ரீ ஆஞ்ச நேயர் அ.நெ.பா.).

**கீழ் பிரிவு பண்ணிசை:**

கி.தர்சிகா (பாரதி கலைமன்ற அ.நெ. பா.), இ.தசிகா (ஸ்ரீகிருஷ்ணா அ.நெ. பா.), தி.பானுப்பிரியா (கன்னியர் வைரவர் அ.நெ.பா.).

**பண்ணிசை மத்திய பிரிவு:**

கு.தயாளரூபினி (சிவபூரணி முத் தமிழ் மன்ற அ.நெ.பா.), ந.சங்கவி (இந்து அ.நெ.பா.), சோ.சிவஜெனன் (ஸ்ரீகணேசா அ.நெ.பா.).

**பண்ணிசை மேற் பிரிவு:**

ப.கௌரீசன் (இளந்தொண்டர் சபை அ.நெ.பா.), ச.நிதுஷா (ஸ்ரீகிருஷ்ணா அ.நெ.பா.), பி.பிரஷாந்தினி (மடத்து வெளி முருகன் அ.நெ.பா.).

**பாலர் பிரிவு பேச்சு:**

சூ.சயித்திரா (பாரதி கலைமன்ற அ.நெ.பா.), அ.அனுஸ்ரிகா (சைவ வித்தியாவிருத்திச் சங்க அ.நெ.பா.), பா.அபிநயன் (பொலிகை விநாயகர் அ.நெ.பா.).

**கீழ்ப் பிரிவு பேச்சு:**

ஸ்ரீ.சரத்டிலக்சனா (நெல்லண்ட அம் மன் அ.நெ.பா.),அ.தனரூபன் (கிழவன் காடு மன்ற அ.நெ.பா.), இ.திலக்சனா (சிவயோகர் சுவாமிகள் அ.நெ.பா.).

**மத்திய பிரிவு பேச்சு:**

ச.சர்வாணி (சிவகாமி அம்மன் அ.நெ.பா.), க.கேஜுகா (கோழுக்க அ.நெ.பா.),ந.தேனுஜா (தொண்டைத்திரு நாவுக்கரசு அ.நெ.பா.).

**மேற் பிரிவு பேச்சு:**

ம.மோகதாரணி (மருதடி விநாயகர் அ.நெ.பா.), ஜீ.சுவஸ்திகன் (இளந் தொண்டர் சபை அ.நெ.பா.), வ.றஜிதா (மடத்துவெளி முருகன் அ.நெ.பா.).

**கீழ்ப் பிரிவு கட்டுரை :**

வி.துஷாந்தி (கண்ணகை அம்மன் அ.நெ.பா.), பே.கஜதீபன் (அரசடி சித்தி விநா யகர் அ.நெ.பா.), ச.விதுஷா (ஸ்ரீதுரவடிப் பிள்ளையார் அ.நெ.பா.).

**மத்திய பிரிவு கட்டுரை:**

க.அபர்ணா (இந்து அ.நெ.பா.), ர.கீர்த்திகா (பரராஜசேகரப் பிள்ளை யார்அ.நெ.பா.), கோ.சுகந்தினி (திக் கரை இந்து அ.நெ.பா.).

**மேற் பிரிவு கட்டுரை:**

அ.அசோக் (பொலிகை விநாயகர் அ.நெ.பா.), வி.சஜீபன் (நாகராஜேஸ் வரி அ.நெ.பா.), இருவர் மூன்றாம் இடம் பா.குலமதி (கிழவன் காடு கலாமன்ற அ.நெ.பா.), க.சாஜுகா (தான்தோன்றி மனோன்மணி அம் பாள் அ.நெ.பா.). (அ-9)

# இந்திய மீனவர்கள் அத்து மீறினால் கைது

## கடற்படை தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கடலில் அத்துமீறி மீன் பிடிக்கும் இந்திய மீனவர் களை தொடர்ந்தும் கைது செய்யப் போவதாக கடற்படைத் தளபதி ஜயநாத் கொலம்பகே தெரிவித் தார். இலங்கை கடற்படை தம்மை பாதுகாக்கும் நடவடிக்கையில் மட்டுமே ஈடுபடுவதாக கூறினார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் "கடல் பேணு தல் மாநாடு-2013" இல் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், அத்துமீறிய மீன்பிடியை தடுப்பதற்கான ஒரே வழி அவர்களை கைது செய்வதுதான். அதையே நாம் செய்கின்றோம். இலங்கை கடற்படை வங்காள விரிகுடாவை திறந்தவெளிச் சிறையாக்க முயல் வதாக கருணாநிதி கூறியிருந்தார்.

மன்னிக்கவும் நாம் அப்படிச் செய்யவில்லை. நாம் செய்வதெல் லாம் எம்மை பாதுகாப்பது மட்டு மேயாகும்.

நாம் அவர்களது விடயத்தில் தலையிடவில்லை. மீன்பிடித்துறை தமிழ்நாட்டின் வாழ்வாதார தொழி லாக உள்ளதென்பது நியாயம் தான் என்றும் அவர் கூறினார்.

இலங்கை மீனவர்களுக்கு மீன் பிடித்துறையே வாழ்வாதாரம் என கூறிய இலங்கைக் கடற்படைத் தள பதி இதுவே இங்குள்ள பிரச்சினை யின் பின்னணி என்றும் அவர் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

668

## குண்டுக் காக்கா

ஒரு ஊரில ஒரு மாமாவும், மாமியும் இருந்தார்களாம். மாமா அரண்மனையில் வேலை பார்த்துக்கிட்டிருந்தார். அரண்மனைக்குள்ளேயே அவர் குடியிருக்கிறதுக்கு ஒரு வீடு கொடுத்திருந்தாங்க. மாமாவும் மாமியும் அந்த வீட்டிலே நல்லா வாழ்ந்திட்டிருந்தாங்க.

அந்த மாமிக்கு கொத்தவரங்கா வத்தல்னா ரொம்ப பிடிக்குமாம். அதனாலே அப்பப்ப கொத்தவரங்கா வாங்கி மொட்ட மாடி நிறைய காயப்போடுவாங்களாம்.

இப்படி இருக்கும்போது ஒருநாள் அதே மாதிரி, கொத்தவரங்கா வாங்கிக் காயப் போட்டிருந்தாங்களாம். நல்லாக்காயட்டும்னு மாடியிலே நாலுநாள் எடுக்காமலே போட்டுட்டாங்களாம்.

தினமும் காலையிலே மாடிக்குப் போய்ப பார்த்தா கொஞ்சம் கொஞ்சமா கொத்தவரங்கா கொறஞ்சிக்கிட்டே வந்துச்சாம்.


எப்படி காணாமப் போச்சுன்னு யோசிச்சாங்களாம். யாரோ ராத்ரியிலே வந்து வத்தலைத் திருடீட்டுப் போறாங்க. அதைக் கண்டுபிடிக்கணும்னு முடிவு பண்ணாங்க.

அன்னைக்கு ராத்ரி அந்த மாமா ஒரு பெரிய கருப்புக் கம்பளியை எடுத்துப் போர்த்திக்கிட்டு, கையிலே ஒரு கம்பை எடுத்துக்கிட்டு மாடிக்குப்போய் ஒளிஞ்சுக்கிட்டாராம், யாராவது திருடன் வந்தா ஒரே அடி! அடிக்க.

நடு ராத்ரீலே மொட்டைமாடீலே ஒரு பெரிய காக்கா வந்து உக்காந்துதாம். சாதாரணமா இருக்கிறதைவிட நாலஞ்சு மடங்கு பெரிசாம்.

இவர் அதை அடிக்கப்போற சமயத்திலே, அந்தக்காக்கா நில்லுங்க நில்லுங்க என்னை அடிக்காதீங்கன்னுச்சாம். ஏன் எங்க வத்தலைத் திருடறேன்னாராம். என்னோட மனைவிக்கு கொத்தவரங்கா வத்தல்னா உயிரு. அதனாலே எடுத்துட்டுப் போனேன். என்னை அடிச்சிடாதீங்க உங்களுக்கு நான் நிறைய உதவிகள செய்றேன்னுச்சாம்.

நீ ஒரு காக்கா. நீ எனக்கு என்ன உதவி செய்யப்போறே? ன்னு மாமா கேட்டார். ஒருநாளைக்கு என் வீட்டுக்கு வாங்க தெரியும்னு காக்கா சொல்லிச்சாம். வீடா? அது எங்கிருக்குன்னார் மாமா.. பக்கத்துலே ஒரு மலை தெரியுது பாருங்க. அதோட அடிவாரத்துலே என் வீடு இருக்கு. அங்க



வந்து குண்டுக்காக்கா வீடு எதுன்னு யாரக் கேட்டாலும் சொல்வாங்க.

இப்படிச் சொல்லிட்டுப் பறந்து போயிடுச்சு. இவருக்கு ஆச்சரியமா இருந்துச்சு. மாமியிடம் எல்லாத்தையும் சொன்னார்.

ஒருவாரம் ஆச்சு. மாமாவிடம் மாமி சொன்னாங்க -அந்தக் குண்டுக் காக்கா ஏதோ உதவி செய்றேன்னுச்சே. அதைப் போய்ப்பார்த்துட்டு வாங்களேன்னு.. மாமாவும் புறப்பட்டுப் போனார்.

ரொம்ப தூரம் போனவுடன் மலை அடிவாரம் வந்தது. அங்கே .பெரிய பெரிய மரமா இருந்துச்சு. குண்டுக்காக்கா வீடு எங்கேன்னு ஒருத்தரக் கேட்டதும் அவர் ஒருமரத்தைக் காட்டினார். அந்த இடத்துக்கு மாமா போனார். மரப்பலகைகளாலே கட்டப்பட்ட ஒரு பெரிய வீடு மரத்து மேலே இருந்துச்சு. மேலே ஏற மரப்படிகள் இருந்துச்சு. அது மேலே ஏறிப் போனார்.

குண்டுக்காக்கா குண்டுக்காக்கான்னு கூப்பிட்டார். வீட்டுக்குள்ளே இருந்து காக்கா வெளியே வந்துச்சு. வாங்க வாங்கன்னு வரவேத்துச்சு. குண்டுக்காக்கா அவரைத் தன் மனைவிக்கு அறிமுகப்படுத்திச்சு. மனைவிக் காக்காவும் சந்தோஷப்பட்டுச்சு. சாப்பிடறதுக்குப் பலகாரங்கள் எல்லாம் கொடுத்துச்சு.

குண்டுக்காக்காவிடம், சரி எனக்கு ஏதாவது உதவி பண்ணுன்னு கேட்டாராம். அது ஒரு ஆட்டைக்கொண்டு வந்து கொடுத்துச்சாம். ஆட்டை வச்சு நான் என்ன செய்றதுன்னு கேட்டார்.

அது சொல்லிச்சு: இது சாதாரண ஆடில்ல. இது கிட்ட தங்கம் கொடுன்னு கேட்டா வாயைத் திறக்கும். வாயிலிருந்து தங்கக் கட்டிகளாய் விழும். போதும்னு சொன்னா வாயை மூடிக்கும்னு சொல்லிச்சு.

மாமாவுக்கு ரொம்ப சந்தோஷம். நன்றி சொல்லிட்டு ஆட்டை ஓட்டிக்கிட்டு வேகமா வீட்டுக்கு வந்தார். மாமி ஆட்டைப் பார்த்ததும் இது எதுக்குன்னாங்க.

குண்டுக்காக்கா கொடுத்த மந்திர ஆடு இது. இது சாதாரண ஆடில்ல. இது கிட்ட தங்கம் கொடுன்னு கேட்டா வாயைத் திறக்கும். வாயிலிருந்து தங்கக் கட்டிகளாய் விழும். போதும்னு சொன்னா வாயை மூடிக்கும்னு மாமா சொன்னார்.

மாமிக்கு சந்தோஷம். நம்ம கஷ்டம் எல்லாம் போயிடுச்சு. இனிமே நமக்கு எந்தக் கவலையும் இல்லேன்னாங்க.

அந்த ஆட்டுக்கிட்டே போய் தங்கம் கொடுன்னு மாமா கேட்டார்.. அது வாயைத் திறந்துச்சு. வாயிலே இருந்து தங்கக்கட்டியாய் விழுந்துச்சாம். அவங்க தங்கம் கேட்டதையும், தங்கம் விழுந்ததையும் அரண்மனை மதில் மேலிருந்த ஒரு காவல் வீரன் பார்த்துட்டு ரொம்ப ஆச்சரியப்பட்டான். அவன் ராஜாவிடம் போய் தான் பார்த்த எல்லாத்தையும் சொன்னானாம்.

ராஜாவுக்குப் பொறாமை. அந்த ஆடு ராஜாவிடம்தான் இருக்கணும்னு சொல்லி அதை வாங்கித் தனக்கே வச்சுக்கிட்டாராம். மாமாவும், மாமியும் வருத்தப்பட்டாங்க.

மறுபடியும் குண்டுக்காக்கா கிட்டே உதவி கேட்கணும்ன்னு முடிவு பண்ணினாங்க. மாமா மறுபடி குண்டுக்காக்கா வீட்டுக்குப் புறப்பட்டார். ரொம்ப தூரம் நடந்து அந்த மரவீட்டுக்குப் போய்ச்சேர்ந்தார் .

குண்டுக்காக்கா குண்டுக்காக்கான்னு கூப்பிட்டார். வீட்டுக்குள்ளே இருந்து காக்கா வெளியே வந்துச்சு. வாங்க வாங்கன்னு வரவேத்துச்சு. குண்டுக்காக்கா மனைவிக் காக்காவும் வாங்க வாங்கன்னு வரவேத்துச்சு. சாப்பிடறதுக்குப் பலகாரங்கள் எல்லாம் கொடுத்துச்சு.

என்ன இவ்வளவு தூரம்னு குண்டுக் காக்கா கேட்டுச்சு. ராஜா ஆட்டப் பிடுங்கிக்கிட்டார்னு சொல்லி வருந்தப்பட்டார் மாமா. அப்படியா செய்தி? நீங்க கவலைப்படாதீங்க! உங்களுக்கு வேற ஒண்ணு தர்ரேன்ன்னு சொல்லி வீட்டுக்குள்ளே போய் ஒரு இரும்புப்பெட்டிய கொண்டு வந்து மாமாவிடம் கொடுத்துச்சாம். இரும்புப் பெட்டிய வச்சு நான் என்ன செய்றது? எனக்கு எதுக்கு இது? ன்னாராம்.

அதுக்கு அந்தக் குண்டுக்காக்கா இது சாதாரணப் பெட்டியில்ல. இதுல நமக்கு வேண்டிய சாப்பாடெல்லாம் கிடைக்கும். வடை, பாயசம், சாப்பாடு கொடுன்னு இது கிட்டே கேட்டா, எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் சாப்பாடு தரும். இதை வச்சுக்கிட்டு சந்தோஷமா வேணுங்கிற நேரம் சாப்பிட்டுக்கிட்டிருங்கன்னு சொல்லி மந்திர பெட்டியக் கொடுத்துச்சாம்.

மாமாவும் அதைச் சந்தோஷமா வாங்கிட்டு அங்கிருந்து புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தாராம்.

மாமா இரும்புப் பெட்டியை மாமிக்குக் காட்டினார். இந்தப் பெட்டி நமக்கெதுக்கு? இத வச்சு நாம என்ன செய்றது?ன்னு கேட்டாங்க .அதுக்கு மாமா இது சாதாரணப பெட்டியில்ல. இதுல நமக்கு வேண்டிய சாப்பாடெல்லாம் கிடைக்கும். வடை, பாயசம, சாப்பாடு கொடுன்னு இதுகிட்டே கேட்டா, எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் சாப்பாடு தரும். இத வச்சுக்கிட்டுக் கவலையில்லாம சாப்பிடலாம் என்றார். மாமிக்கு ஆச்சரியமாவும் சந்தோஷமாவும் இருந்துச்சாம்.

அந்தப்பெட்டிகிட்டே வடை.பாயசம் சாப்பாடு கொடுன்னு கேட்டு வேளாவேளைக்குச் சாப்பிட்டாங்களாம்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2013
22

- 1790- துருக்கியின் இஸ்மாயில் நகரை ரஷ்யாவின் சவோரவ் என்பவனும் அவனது படைகளும் கைப்பற்றின.
- 1807-வெளிநாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை நிறுத்தும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டது.
- 1845-பஞ்சாபில் ஃபெரோசிஷா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் சீக்கியர்களைத் தோற்கடித்தனர்.
- 1849-ரஷ்ய எழுத்தாளர் பியோதர் தஸ்தயெவ்ஸ்கியின் மரணதண்டனை கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.
- 1851-இந்தியாவின் முதலாவது சரக்கு புகையிரதம் உத்தராஞ்சல் மாநிலத்தில் ரூர்க்கீ நகரத்தில் ஓடவிடப்பட்டது.
- 1915-மலேசியாவின் இலங்கைத் தமிழரால் வாங்கப்பட்ட யாழ்ப்பாணம் என்ற விமானம் பிரித்தானிய வான்படைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 1937-லிங்கன் சுரங்கம் நியூயோர்க் நகரில் பொது மக்களுக்காகத் திறந்துவிடப்பட்டது.
- 1942-இரண்டாம் உலகப்போர்: போரில் பாவிப்பதற்கென வீ-2 ஏவுகணைகளை உற்பத்தி செய்ய ஹிட்லர் உத்தரவிட்டார்.
- 1944-இரண்டாம் உலகப்போர்:வியட்நாமில் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிராக வியட்நாம் மக்கள் இராணுவம் அமைக்கப்பட்டது.
- 1989-ஒருவார சண்டையின் பின்னர் இயோன் லியெஸ்கு, கம்யூனிச ஆட்சியயாளரான நிக்கலாய் செய்செஸ்குவை வீழ்த்தி ருமேனியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1989-கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் பேர்லினில் பிரித்த பிராண்டன் பேர்க்கதவு 30 ஆண்டுகளின் பின்னர் திறந்துவிடப்பட்டது.
- 1990-மார்ஷல் தீவுகள், மைக்குரோனீசியா கூட்டு நாடுகள் ஆகியன விடுதலையடைந்தன.

### பிறப்புக்கள்

- 1666- குருகோவிந்த் சிங், சீக்கிய குரு (இ.1708)
- 1853-அன்னை சாரதா தேவி, (இ.1920)
- 1858- ஜகக்கோமோ புச்சீனி, இத்தாலிய இசையமைப்பாளர் (இ.1924)
- 1887- இராமானுசன், இந்தியக் கணிதவியலாளர் (இ.1920)

### இறப்புக்கள்


- 1995-ஜேம்ஸ் மீட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1907)
- 2006-... இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் (பி.1910)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமாய் வதைத்து... மௌனமாய் சீரழிக்கும்...?



ஆன்மீகம் 73



கேள்வி: சமீப காலங்களில் நம்மை பயமுறுத்தி வரும் மனநோய் பெருகி வரக் காரணமென்ன?

சத்குரு:- இந்தப் பைத்தியக் காரத்தனத்தை உங்களால் கையாள முடிகிறது என்பதால், அவர்களிடமிருந்து நீங்கள் வித்தியாசப்பட்டவர்கள் என்று அர்த்தம் அல்ல. நீங்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பைத்தியமாக போனாலாவது மனநோய் மருத்துவமனையில் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

ஈஷாவில் வழங்கப்பட்டிருக்கிற தியான முறைகள் எல்லாம் உங்களை அமைதியாக்குவதற்காக அல்ல. உங்களுக்குள் அவை வெடித்துக் கிளம்புகின்றன. உங்களுக்குள் அமைதியும் இல்லை. தொந்தரவும் இல்லை. அந்த நிலையைத்தான் நீங்கள் அமைதி என்று அழைக்க முடியும்.

தொந்தரவை வைத்துக்கொண்டே நீங்கள் உங்களை அமைதியாக்கிக் கொண்டிருந்தால் அதற்குப் பெயர் அமைதி அல்ல. அது புயலுக்கு முன்பாக இருக்கின்ற அ்மைதி போன்றது. புயல் வீசிக்கொண்டே இருக்கிறது. மையத்தில் அவ்வளவு அமைதியிருக்கிறது. இந்த அமைதியை நம்பி ஏமாறாதீர்கள். அடுத்த புயலும் வீசத் தொடங்கும்.

ஏனென்றால், சூறாவளிகள் இப்படித்தான். நகர்ந்துகொண்டேயிருக்கின்றன. சூறாவளிகளைப் பொறுத்தவரையில், முன்புறத்தில் அவை பலம் குறைந்ததாகவும் போகப் போக தீவிரம் அடைந்தும் வருவதே அதன் இயல்பு. இது இயற்கையினுடைய சுழற்சி முறை.

எனவே, முதலில் பார்ப்பதை வைத்துக்கெர்ணடு இவ்வளவுதான் என்று பிணைக்காதீர்கள். இன்னும் பெரிதாக வரும். இதுவே உங்கள் மனதிற்கும் பொருந்தும். இந்த பிரபஞ்சத்தின் இருப்பில் எல்லாமே இப்படித்தான் இருக்கிறது. எது நிகழ்ந்தாலும் அசுர வலிமையோடு தான் நிகழ்கிறது.

முதலில் நிகழும். பிறகு ஒரு இடைவெளி தரும். பிறகு மீண்டும் புயல் வந்துமோதும். மனிதமனமும் அப்படித்தான். பல்வேறு தொந்தரவுகளுக்கு ஆளாகிறது. பிறகு மீண்டும் அமைதி பெறுகிறது. அது அமைதி என்று கருதாதீர்கள். அது உங்கள் பைத்தியக்காரத்தனத்தில் ஓர் இடைவெளி.

பைத்தியங்கள் கூட தங்கள் வாழ்வில் சில வினாடிகள் முற்றிலும் குணமடைந்தவர்கள் போல் காணப்படுவார்கள். 24 மணி நேரமும் அவர்கள் பைத்தியங்கள் கிடையாது. சில நேரங்களில் மிக இயல்பாக இருப்பார்கள். அவர்கள் உங்களை விட நிகழ்காலத்தின் நிமிஷங்களாக இருக்கிறார்கள்.

தங்கள் மனதின் சமநிலையை இழந்தவர்கள் உங்களைவிடவும் திறந்தநிலையில் இருக்கிறார்கள். அவர்கள் செய்வதையே சில நேரங்களில் நீங்களும் செய்கிறீர்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# சிங்கள மக்கள் மத்தியிலிருந்து இணக்க அரசியல் சிந்தனையுள்ள தலைமைக்கு அறவே வாய்ப்பில்லை!



யாழ்.பல்கலைக்கழகத்தின் நவீன வரலாற்றுத்துறையின் முன்னாள் விரிவுரியாளர் மு.திருநாவுக்கரவு

நெல்சன் மண்டேலா ஆபிரிக்க விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் சரிவர ஒருங்கிணைத்திருந்தார் என்பது முதலாவது உலகப்பொது உண்மை. உலகலாவிய கண்ணோட்டம், சர்வதேச பார்வை, களநிலை, யதார்த்தம், இந்த நான்கையும் ஒருசேர நேர்கோட்டில் இணைத்து அவர் ஆபரிக்க தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

ஆபிரிக்க தேசிய விடுதலையை சர்வதேசக் கண்கொண்டு பார்க்க ஒருபோதும் அவர் தவறவில்லை. சர்வதேச போராட்ட ஒழுங்கில் அவர் அந்தப் போராட்டத்தை ஒருங்கிணைத்திருந்தார். முக்கியமாக மண்டேலா கைது செய்யப்பட்ட 1965 ஆம் ஆண்டின் பின்பு களநிலை யதார்த்தத்திற்கு ஏற்ப அவர் தன்னை புதுப்பித்துக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் பேராட்டத்தைப் பொறுத்தவரை எம்மிடம் இலட்சியம் முதன்மையாக இருந்தது. தியாகங்கள் இழப்புக்கள், அர்ப்பணிப்புக்கள் மிகப்பெரிதாகவே இருந்தன. ஆனால், சர்வதேசம் எம்மைப்பற்றி என்ன நினைக்கிறது என்பது பற்றி கவலைப்படாமல் இருந்தோம். ஆதலினால் உலக அரங்கிலும் உள்நாட்டிலும் கவலைக் கிடமான நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளோம். உள்நாட்டில் ஈழத்தமிழ்மக்களின் மத்தியில் அதிக தியாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் போராட்டத்தை முன்னெடுத்த அதேவேளையில் புவிசார் அரசியலுக்கும் சர்வதேச அரசியலுக்கும் பொருத்த மாக உலகம் எம்மைப்பற்றி என்ன நினைக் கிறது என்பதனை பார்க்கத் தவறி னோம்.

இவை மட்டுமல்ல நெல்சன் மண்டேலா மக்களை ஒருங்கிணைப் பதில் வெற்றி பெற்றிருந்தார். உள்நாட்டில் மக்களை ஒருங்கிணைப்பதிலும் சர்வதேச ரீதியாக போராட்டத்திற்கான கௌரவத்தை பெறுவதிலும் ஒரே நேரத்தில் இரண்டையும் இணைத்து வைத்திருந்ததில் வெற்றி பெற்றிருந்தார்.

குறப்பாக 1965 இல் அவர் கைது செய்யப்பட்ட போது ஆயுதப் போராட்டத்தில் இருந்து அகிம்சைப் போராட்டத்திற்கு மாறிய போது ஆபிரிக்க தேசிய காங்கிரசில் இருந்த எதிர்ப்பை அவர் அழகாகவே சமாளித்திருந்தார். புதிய கள நிலைக்கு ஏற்ப கறுப்பின மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியையும் கறுப்பின மக்களுக்கான நீதியையும் உலக அரங்கிற்கு சரியான முறையில் எடுத்துச் செல்வதற்கான சரியான பாதையை வகுத்துக்கொண்டார். அங்கே போராட்டக் குழுக்கள் இல்லாவிட்டாலும் பல்வேறு இனக் குழுக்கள் இருந்தன. அந்த இனக் குழுக்களை கோட்பாட்டு ரீதியில் இணைப்பதில் அவர் வெற்றி பெற்றிருந்தார். ஈழத் தமிழர்களைப் பொறுத்த அளிவில் பல்வேறு இனக் குழுக்களையும் இணைப்பதில் யாரும் வெற்றி பெறவில்லை.

இலங்கையின் போராட்டத்தைப் பொறுத்தவரை ஈழத்தில் காணப்பட்ட பல்வேறு குழுக்களுக்கும் இடையில் ஜனநாயக உள்ளடக்கத்தை காணத் தவறியிருந்தன. தாம் ஜனநாயகரீதியாக ஐக்கியப்பட வேண்டும் என்ற எண்ணத்தைப்பெற அனேகமாகவே எல்லோருமே தவறிவிட்டார்கள். ஆனாலும் கூட எல்லோரிடமும் அர்ப்பணிப்புக்களும் தியாகங்களும் போராட்டங்களும் இருக்கவே செய்தன. ஜனநாயகத்திற்கான அடிமனக் கலாசாரம் இருக்கவில்லை. எல்லோருமே ஜனநாயகம் பற்றியும் விடுதலை பற்றியும் பேசினோம். ஆனாலும்கூட, ஜனநாயக விழுமியங்களை பின்பற்றத் தவறிவிட்டோம்.

எனினும் இலங்கையில் போராடிய போராட்டக்குழுக்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரசை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டார்கள் என்றால் அந்தக் காலத்திலே அது மேலெழுந்ததனால். அது ஒரு ஃபாசனாக- நாகரீகமாக இருந்தது. ஆனால், அந்த முன்னுதாரணத்தின்படி வாழ்ந்து காட்டுவதற்கு இன்னும் அதிகதூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது.

தென்னாபிரிக்க விடுதலையின் பின்பு மண்டேலா இணக்க அரசியலைப் பற்றி பேசினார். மண்டேலா பேசிய இணக்க அரசியல் என்பது வெற்றி பெற்றவர் பேசிய இணக்க அரசியல். கறுப்பின மக்கள் ஆதிக்கத்திற்கு வந்தபின் வெள்ளையின மக்கள் செய்த அநீதிகளை மன்னிப்போம். ஆனால், மறக்க முடியாது எனச் சொல்லியதோடு நாம் இணக்கமாக வாழ்வதற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் வழியைக் கண்டு பிடிப்போம். ஆனால், நடந்தவற்றை மறக்க முடியாது எனச் சொல்கிறார்



ஆனால், இலங்கையில் ஒருபோதுமே ஈழத் தமிழர்கள் பற்றிய புரிந்துணர்வு கொண்ட எந்த சிங்களத் தலைவரும் தோன்றவில்லை. இனியும் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. கிளார்க்கைப் பொறுத்தவரை கறுப்பின மக்கள், போராட்டத்தின் காரணமாக உலக அரங்கில் அவர்கள் பெற்ற முக்கியத்துவத்தை அவர் ஏற்றுக் கொண்டார். இலங்கையில் உள்ள சிங்கள மக்களின் அரசியலில் அப்படி ஒருவர் தோன்ற இடமே இல்லை. எனவே, சிங்கள மக்கள் மத்தியில் இருந்து ஒரு இணக்க அரசியல் பற்றிய சிந்தனையோ தமிழர்களை அரவணைக்க வேண்டும் என்ற பார்வையுள்ள தலைவர்களோ தலைமைத்துவங்களோ தோன்றுவதற்கான யதார்த்தம் இங்கு சிறிதளவிலும் காணப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வழங்கிய அதிகாரத்திற்கு மதிப்பளித்து செயற்படுவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் வழங்கிய அதிகாரத்துக்கு மதிப்பளித்து மக்களுக்கான சேவையை வழங்குவதோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாத்து முன்னேற்றும் பொறுப்பு கட்சியின் சகல உறுப்பினர்களுக்கும் உரியது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரச்சினைகள் உள்ளதென தெரிவித்து கட்சியைப் பலவீனப்படுத்த சிலர் செயற்படுகின்றனர்.

வரலாற்றில் ஒருபோதுமில்லாதவாறு இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி பலமடைந்துள்ளது. அதனை மக்களிடமிருந்து தூரமாக்குவதற்கு எவராலும் முடியாது.

கட்சியின் பிரச்சினையை பெரும் பிரச்சினையாக்கிக் கொள்பவர்கள் கட்சியிலிருந்து விலகி சென்றவர்களே. எமது தரப்பினையும் அதில் ஈடுபடுத்திக் கொள்ள அவர்கள் முயற்சிக்கின்றனர்.

உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளானது கட்சியின் பிரச்சினையல்ல. அவை பதவிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு இனவாதக் கட்சியல்ல. மக்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் யுகம் உருவாகியுள்ளது.

கட்சியின்றி முன்னே பயணம் செய்ய எவராலும் முடியாது. அவ்வாறு பயணிக்க முயன்ற பலர் வரலாற்றிலிருந்து அழிக்கப்பட்டுள்ளனர்.

வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத பொற்காலம் பற்றி இப்போது பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் உள்ளூராட்சிச் சபைகளிலும் பேசப்படுகின்றது. தற்போதுள்ள அதிகாரத்தினால் தான் இது பற்றி பேசப்படுகின்றது.

இந்த அதிகாரத்தை மேலும் பலப்படுத்தி முன்னேற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கடற்றொழில் அமைச்சர் ராஜித விரைவில் இந்தியாவுக்கு விஜயம்

**இந்திய மத்திய விவசாய மற்றும் கடற்றொழில் அமைச்சர் சரத் பவாரின் விசேட அழைப்பையேற்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன இன்னும் ஓரிரு தினங்களில் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.**

நீண்டகாலமாகநிலவிவரும் இலங்கை–இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அமைச்சர்களது இரு தரப்பு சந்திப்பு அமையவுள்ளது.

இலங்கை–இந்திய பிரச்சினை தொடர்பிலான கூட்டு ஆணைக்குழுவிற்கு மேலதிகமாகவே இந்த விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்படிருப்பதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த 213 மீனவர்கள் தற்போது இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது 40 மீன்பிடி படகுகளும் இந்திய அரசாங்கம் வசமேயுள்ளன.

இது தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக இலங்கை அரசாங்கம் சார்பில் நாம் பலமுறை முயற்சித்தபோதும் இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பின்மையால் இந்த விடயம் காலதாமதத்திற்குள்ளானது.

இந்நிலைமையிலேயே இந்திய மத்தியமைச்சர் சரத் பவாரிடமிருந்து எனக்கு தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்

அமைச்சரின் இந்திய விஜயம் தொடர்பில் இலங்கை–இந்திய தூதரகங்கள் அவசியமானநடவடிக்கைகளைமுன்னெடுத்து வருகின்றன.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அவ்வாறானதொரு நடைமுறை வழக்கத்திலில்லை. ஒன்றிணைந்த விசாரணைக்குழுகூடி ஆராய்வதன் மூலமே சிறை வைக்கப்படும் மீனவர்கள் விடுவிக்கப்படுவது உண்டு.

ஆனால் தற்போது தமிழ் நாட்டு முதலமைச்சர் அதனை நடைமுறைப்படுத்த இடமளிக்காமை பாரிய சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதுடன் இராஜதந்திர செயற்பாடுகளுக்கும் இது முட்டுக்கட்டையாக அமைந்துள்ளதெனவும்அமைச்சர் கூறினார்.

இந்தியாவிலுள்ள எமது உயர்ஸ்தானிகர்களுக்கு இலங்கை மீனவர்களை பார்வையிடுவதற்கு கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சிறை வைக்கப்பட்டிருக்கும் எமது மீனவர்களுக்கு அவசியமான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மீன்பிடி திணைக்களத்தினால் நான்கரை இலட்சம் ரூபா எமது இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தப் பொருட்களைக் கூட அவர்களிடம் ஒப்படைக்க அனுமதிக்கப்படவில்லை. இது மனித உரிமை மீறலாகும்.

இந்திய மத்திய மீன்பிடித் துறையமைச்சருடனான சந்திப்பின் போது நான் இந்தக் காரணங்கள் குறித்து தெளிவாக விளக்கமளிக்கவுள்ளேன்.

தேவையானவற்றை பெற்றுக் கொடுக்கின்றோம். நீதிமன்ற உத்தரவின்பேரில் அவர்களை இடைக்கிடையே விடுவிக்கின்றோம். எனவே இந்தச் சந்திப்பில் இப்பிரச்சினை குறித்து மிக விரிவாகவும் நட்புறவுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட தான் எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பின் விளைவாக இந்தியாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் எமது 213 மீனவர்களையும் அவர்களது படகுகளுடன் விடுவிக்க கூடியதாக விருக்குமென தான் நம்புவதாகவும் அவர் கூறினார். (அ-2)

# தேசிய கீதத்தை ஏற்காவிட்டால் நாட்டில் இருக்க முடியாது

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் நாட்டின் தேசிய கீதத்தை பாட முடியாது என சவால் விடுத்துள்ளதால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்று அதன் முன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேசிய கீதத்தை பாடமுடியாது என சவால் விடுத்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தி, மக்களின் இறைமையை பாதுகாக்க வேண்டியது பாராளுமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பொறுப்பு.

நாட்டின் அரசியல் அமைப்பு, நாட்டின் தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் அப்படியான நபர்கள் நாட்டுக்குள் வாழ உரிமை கிடையாது.

அத்துடன் பாராளுமன்றம் மற்றும் ஏனைய மக்கள் சபைகளில் அங்கம் வகிக்க உரிமையில்லை.

தேசிய கீதத்தை தமிழில் பாட முடியாது என்றால் தமக்கு தேசிய கீதம் தேவையில்லை என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். (அ-2)



அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தினால் பரராயசிங்கம் பிரசன்னாவின் மரண உரிமை கோரிக்கைக்குரிய கொடுப்பனவாக 4 இலட்சத்து 13 ஆயிரத்து 728 ரூபா தொகையை அவரின் சகோதரன் ப.பிரகலாதனுக்கு அலியான்ஸ் மெட்ரோ கிளையின் பிராந்திய முகாமையாளர் கே.சிறீராம் வழங்குவதையும் அருகில் பிராந்திய கிளையின் கனிஷ்ட நிர்வாகி எ.திவ்யா, காப்புறுதி முகவர் ஜி.கஷ்மிலா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# சனல் 4 காணொலிகள் போலியானவை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சனல் 4 தயாரித்து வெளியிட்ட காணொலிகள் யாவும் போலியானவை என்று இலங்கை மீண்டும் தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பேராதனை பல்கலைக்கழக முதல்வருமான பேராசிரியர் பி. டபிள்யூ. எப்பாசிங்க இந்த கருத்தை தற்போது வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதன்போது அவர் தொழில்நுட்பம் எவ்வாறு பிழையான வழியில் பயன்படுத்தப்படுகிறது என்பதை விளங்கப்படுத்தினார்.

சனல் 4 காணொலி இலங்கையை பொறுத்தவரையில் நாட்டின் இறைமைக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் சிலர் தமது நோக்கங்களை நிறைவேற்ற முனைந்துள்ளதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 2003ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தமை தொடர்பில் பிரித்தானியா மீது குற்றம் சுமத்தப்பட்ட போது பிரித்தானியா அதனை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையில் வீட்டோ அதிகாரத்தை கொண்டு தடுத்தது என்றும் எப்பாசிங்க சுட்டிக் காட்டினார். (அ-2)

# கரையோரப் பாதுகாப்புப் பிரிவு தனி அலகாக இயங்கும்

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கரையோரப் பாதுகாப்புப் பிரிவு தனி அலகாக இயங்கும் என கடற்படைத் தளபதி ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைக் கடற்படையின் ஒரு பிரிவாக கரையோரப் பாதுகாப்புப் பிரிவு இயங்கி வருகின்றது.

எதிர்காலத்தில் கரையோரப் பாதுகாப்புப் பிரிவு தனியான அலகாக செயற்படும்.

கடற் பாதுகாப்பு, கரையோர சுற்றாடல் பாதுகாப்பு, மீட்புப் பணிகள் போன்றவற்றில் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் கவனம் செலுத்த வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரின் பணிகள் விஸ்தரிக்கப்படவுள்ளது என கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபை விவாதங்களை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டாம்

## ஆளும்கட்சி எம்.பிகள் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றில் நடைபெறும் விவாதங்களை நேரடியாக ஒளிபரப்புச் செய்ய வேண்டாம் என ஆளும் கட்சி கோரியுள்ளது. பாராளுமன்ற விவாதம் வீடியோ, ரி.வி. ஊடாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படுகின்றது.

இவ்வாறு நேரடியாக ஒளிபரப்புச் செய்வதை நிறுத்துமாறு சபாநாயகரிடம் ஆளும் கட்சியினர் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்,

நேரடி ஒளிபரப்பின் போது ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் நன்மதிப்பு களங்கப்படுத்தப்படுகின்றது என தெரிவித்துள்ளனர்.

நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வழக்குத் தொடரக் கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கோரியுள்ளார். (அ-2)

# கட்டடங்களை அமைப்பதால் மட்டும் நன்மை ஏற்படாது

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

மனித வளத்தை மேம்படுத்தாது நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் குறித்த நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கட்டடங்களை நிர்மாணிப்பதன் மூலம் மட்டும் நன்மை ஏற்பட்டு விடாது.வீடமைப்புத் திட்டங்கள் மேற் கொள்வது மிகவும் சிறந்த விடய மாகும்.

எனினும் அதனை விடவும் மனித வள மேம்பாடு முக்கியமானது.

மனித வளத்தை மேம்படுத்தாது கட்டடங்களை அதிகரிப்பதனால் பயனிலலை.இதனை அபிவிருத்தியாகவும் கருதமுடியாது.

மனித வளத்தை வலுவூட்டாது நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)



யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் கிளைகளில் ஒன்றான ஏ-9 பிரதான வீதியின் சாள்ஸ் சந்தியில் அமைந்துள்ள கிளையின் பெயர்ப்பலகைத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இவ்வருடம் வெளியேறும் பகுதி நேர கணக்கியல்துறை மாணவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பெயர்ப்பலகையை HNDA துறைத்தலைவர் ரி.நவநீதன் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் வி.செந்தில்ராஜா ஆகியோர் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## இரண்டு மாதங்களில் 20 கோடி ரூபா வசூல்

(கொழும்பு)

கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த இரண்டு மாதங்களில் 20 கோடி ரூபா வசூலிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக துறைமுகம் மற்றும் பெருந்தெருக்கள் திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துள்ளன எனவும் அவர் கூறினார்.


தினமும் இந்த வீதியில் சுமார் 15ஆயிரம் வாகனங்கள் பயணம் செய்கின்றன.இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# மோசடிமிக்க நாடாகவே இலங்கை மாறிவருகிறது

## ஹரீன் பெர்னாண்டோ எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**பிரதமர் டி.எம்.ஜெயரட்ணவை அப்பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கும் வேறொருவரை அப்பதவியில் அமர்த்துவதற்கும் சதி இடம்பெறுகின்றது. ஆனால் எதிர்க்கட்சியினரான நாம் பிரதமரை பாதுகாப்பதற்கு முன்னிற்போம் என ஐ.தே.கட்சி எம்.பி.ஹரீன் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிதி திட்டமிடல் அமைச்சின் மீதான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியப் பட்டியல் எம்.பிக்களாக கல்விமான்களையே நாம் நியமித்துள்ளோமே தவிர குண்டர்களையும், கெட்டவார்த்தை பேசுவோரையும் நியமிக்கவில்லை.

சபை விவாதத்தில் உரையாற்றிய பெரும்பாலான அமைச்சர்கள் ஐ.தே.கட்சியின் தலைமைத்துவ சபை மற்றும் ஆட்சிக்கு தமது கட்சி வரப்போவதில்லை என்பதற்கு முதலிடம் வழங்கியே பேசினார்கள்.

ஆனால் வரவு செலவுத் திட்டத்திலுள்ள சாதக,பாதகங்கள் தொடர்பில் எதனையும் பேசவில்லை.

இலங்கையைவிட சனத்தொகை மற்றும் விசாலமான நாடுகளான இந்தியா, சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய 4 நாடுகளிலும் மொத்தம் 103 அமைச்சர்களே உள்ளனர்.

ஆனால் 2 கோடி மக்களை கொண்ட இலங்கையில் 106 அமைச்சர்கள் உள்ளனர். "ஜம்போ" அமைச்சரவை காணப்படுகிறது.

இத்தொகை அமைச்சர்களுக்கு வரவு செலவு திட்டத்தில் நூற்றுக்கு 70 வீதமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சர்கள் புலம புகின்றனர்.

ஆச்சரியமிக்க இலங்கையல்ல கசினோ போதைவஸ்து மோசடிகள் நிறைந்த நாடாகவே மாறிவருகிறது.

கொழும்பில் நடத்தப்பட்ட கார் ரேஸ்க்காக கொழும்பு நகர சபைக்கு வழங்க வேண்டிய வரிகள் செலுத்தப்படவில்லை. இதற்கு வந்த வெள்ளைக்காரர்கள் மதுவுக்கு முற்றுப் புள்ளி என்கிறார்கள்.

ஆனால் கார் ரேஸின் போது அடிக்கு அடி பியர் சென்டர்கள் தான் இருந்தன.

பிரதமரை அப்பதவியிலிருந்து வெளியேற்றி வேறொருவரை அப்பதவியில் அமர்த்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் எதிர்க்கட்சியான நாம் பிரதமரை பலமாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.(அ-2)

## நத்தார் விழா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன கிறிஸ்தவ ஒழுகம் நடத்தும் வருடாந்த நத்தார் விழா இன்று காலை 8.30 மணிக்கு செவிப்புலனற்றோர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

# இராணுவ சப்பாத்துக்களின் கீழ் நாட்டை அடக்க இடமளியோம்

## அனுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வாதிகார இராணுவ ஆட்சியை உருவாக்கும் நோக்கத்திலேயே ஜனாதிபதி மாகாண சபைகளையும் பிரதேச சபைகளையும் கட்டுப்படுத்துகின்றார்.

இராணுவ சப்பாத்துகளின் கீழ் நாட்டை அடக்க நாம் ஒரு போதும இடமளிக்க மாட்டோம் என்று ஜே.வி.பியின்பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் தொடர்பில் இரகசிய வாக்கெடுப்பினை நடத்தினால் அரசாங்கத்தின் உண்மை நிலைமை தெரியும். அமைச்சர்களே வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பர எனவும் ஜே.வி.பியினால் அண்மையில் பத்தரமுல்லயில ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போது அவர் மேற் கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும தெரிவிக்கையில்,

மாகாண சபைகளுக்கோ, பிரதேச சபைகளுக்கோ அதிகாரங்களைக் கொடுத்து நாட்டில் சமமான ஆட்சியை நடத்துவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை.

இராணுவ சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்காகவே அரசாங்கம் மாகாண சபை மற்றும் பிரதேச சபைகளின் அதிகாரங்களை கட்டுப்படுத்துகின்றது.

இராணுவ ஆட்சியை நடைமுறைப்படுத்தி அனைத்து அதிகாரங்களையும் பாதுகாப்பு பிரிவின் கீழ்கொண்டு வந்தால்எவரும்எதிர்த்து கேள்வி கேட்கமுடியாது.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படமுடியாதென்றே அரசாங கம் நினைக்கின்றது. இதற்கு இடமளித்தால் சிறுபான்மை இனத்தவர் மட்டுமல்ல சிங்கள மக்களும் வாழ முடியாது போய்விடும்.

இரும்பு சப்பாத்துகளின் கீழ் நாட்டையும் மக்களையும் அடக்கி நாட்டை சுடுகாடாக்க நாம் ஒரு போதும் விடமாட்டோம். அரசாங்கத்திற்கு எதிராகவும் மக்களை காப்பாற்றும் நோக்கத்திற்கும் ஜே.வி.பி. தொடர்ந்தும் போராடும்.

அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத்திட்டம் உள்ளூராட்சி மன்றங்களிலேயே தோல்வி கண்டுவிட்டது. இது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத தன்மை, வரவுசெலவுத்திட்டத்தில் எவருக்கும் உடன்பாடின்மை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்ப அரசியலின் அச்சுறுத்தல்களினாலேயே பலர் அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றனர். இது வெகு காலத்திற்கு நிலைத்திருக்காது. வெகு விரைவில் மக்களே ஆட்சி மாற்றமொன்றினை ஏற்படுத்துவர் எனவும் அவர் தெரிவிததார. (அ-2)

## ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்தாராம்.பந்துல

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆசனத்தில் அமர்ந்த சம்பவம் சலசலப்பை ஏற்படுததியிருந்தது.

2010ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு பிரத்தியேகமாக ஆசனம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்களில் வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர்ந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் சபைக்கு வந்த கல்வி அமைச்சர் பந்துல குணவரதன, ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் திடீரென அமர்ந்து கொண்டார்.

இதனால் சபையில் சிறிது நேரம சலசலப்பு ஏற்பட்டது. ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், பந்துல குணவர்தன அமைச்சரை அந்த ஆசனத்தில் இருந்து எழுந்து செல்லுமாறு கூறியதை அடுத்து, நிலைமையை சுதாரித்துக் கொண்ட அமைச்சர் அந்த ஆசனத்திலிருந்து எழுந்து சென்றார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்துகொண்டது ஆளும் கட்சி அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் "வெறும் வாய்க்கு அவல்" கிடைத்த நிகழ்வாக மாறியிருந்தது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ப்ரீமன்' தீர்ப்பு, இலங்கை விவகாரத்தை திசை திருப்புமா?



இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்து, சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டால், என்ன நடக்கும் என்பதனை மிகத்தெளிவாக காட்டுகிறது, ஜேர்மனியில் நடைபெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் (The permanent people Tribunal) அமர்வுகள்.

இத்தாலிய உரோமில் தலைமையகத்தைக் கொண்ட நிரந்தர மக்கள் தீர்பாயம் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்தான முதற் கட்ட விசாரணைகளை 2010 ஜனவரியில் மேற்கொண்டது.

அதன் தொடர்ச்சியாக, அனைத்துலக மனித உரிமைகள் ஒன்றியம்- ப்ரீமென் மற்றும் இலங்கையில் சமாதானத்திற்கான ஐரிஸ் பேரவை ஆகியவை விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, ஜேர்மனியின் ப்ரீமனில் இரண்டாவது கட்ட அமர்வினை நடத்தியுள்ளது.

அயர்லாந்தில் நடைபெற்ற முதற்கட்ட அமர்வில், போர்க் குற்றம், மானுடகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பதனடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆனால், ப்ரீமனில் வழங்கப்பட்ட தீர்ப்பில், இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்றும், அந்த இனப்படுகொலைக்கு உடந்தையாக, அமெரிக்காவும், பிரித்தானியாவும் இந்தியாவும் செயற்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்தியா மீதான குற்றச் சாட்டுக்குத் தேவையான ஆதாரங்கள் போதுமானவையாக இல்லை என்கிற கருத்தினையும் அத்தீர்ப்பில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

ஜேர்மனி, இத்தாலி, பர்மா, ஆர்மேனியா, ஆஜென்டீனா, தூருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிங்கள நண்பர்கள் பலர் இந்த அமர்வில் கலந்து கொண்டுள்ளனர்.

மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களான திருமுருகன், உமர், மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடமாகாண சபைத் தேர்தலில் இரண்டாவது அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்ற அனந்தி எழிலன், சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படத் தயாரிப்பாளர் கலும்மக்ரே, கலாநிதி என்.மாலதி ஆகியோர் இங்கு சாட்சியமளித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். அத்தோடு, 30 இற்கு மேற்பட்ட நேரடிச் சாட்சியங்களும் இந்தத் தீர்ப்பாயத்தின் முன்னால் பிரசன்னமாகியிருந்தனர்.

இன்னும் இருவாரங்களில் இத்தீர்பாயத்தின் முழுமையான அறிக்கை வெளிவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்தியா குறித்த, விடுபட்டுப்போன விடயங்களும் உள்ளடக்கப்படுமென நம்பப்படுகிறது. இலங்கை தொடர்பாக, இரண்டாவது தடவையாக கூட்டப்பட்ட அமர்வில், பூகோள அரசியல் நகர்களை அதிரவைக்கும் விடயமாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் மீது சுமத்தப்பட்ட இனப்படுகொலைக்கு அனுசரணை வழங்கிய விவகாரம், மிக ஆழமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இத்தீர்ப்பாய்த்தின் இறுதி அறிக்கை சர்வதேச மட்டத்தில் விவாதிக்கப்படும் போது, இலங்கை அரசின் மீது இந்த வல்லரசுகள் வழுவழுத்த அழுத்தங்களைப் பிரயோகிக்காமல், உறுதியான நிலைப்பாட்டினை எடுக்கத் தூண்டுமென எதிர்பார்க்கலாம். இதனை சர்வதேச அரங்குகளுக்கு கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

அதேவேளை, கடந்த இரண்டு தடவைகளும், உள்நாட்டிலேயே விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் என்று அமெரிக்கா, ஐ.நா.வில் கொண்டுவந்த தீர்மானங்களின் பின்புலத்தை நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவுகள், அம்பலமாக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.

***நவநீதம்பிள்ளை அம்மையார் முன்மொழியும் சர்வதேச விசாரணையை நாம் ஆதரிப்போம்*** என்று முழங்கிய பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி, இவர்களாகவே தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய நிர்ப்பந்தத்தினை இந்தத் தீர்ப்பாயம் உருவாக்குமா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு முடிவடைந்த பின்னர், இலங்கை அரசின் தொடர்ச்சியாக மேற்குலகின் அழுத்தங்கள் அதிகரிப்பதைக் காணலாம். ஐரோப்பிய ஒன்றியமும் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள விருப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

அது என்ன தீர்மானமென்று எவருக்கும் தெரிவில்லை. நாம் விரும்பியவாறே அது இருக்குமென்று, சுயதிருப்தி கொள்ளும் செய்திகள்தான் வருகின்றன.

மேற்குலகம் எமக்குச் சார்பாக, மனித உரிமைப் பேரவையில் தீர்மானங்களைக் கொண்டு வர உத்தேசித்துள்ள நிலயில், இனப்படுகொலையின் பங்காளிகளாக மேற்குலகைச் சேர்த்துவிட்டதே இந்த இத்தாலியத் தீர்ப்பாயம் என்று கரித்துக் கொட்டுபவர்களும் இருக்கின்றார்கள்.

ஆனால், இனிமேலும் இரட்டை வேடம் போடமுடியாத இக்கட்டான சூழ்நிலைக்குள், இந்த மகா வல்லரசுகளை நிறுத்தியிருக்கிறது இத்தாலியத் தீர்ப்பாயம் என்பதை, உணர்ந்தாலே போதும். இருப்பினும், ஐ.நா.வின் தீர்மானங்களுக்கே அசையாத, அல்லது அதனை பொருட்படுத்தாத வல்லரசுகள், இந்த நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவுகளுக்கா பயப்படப் போகின்றன? என்கின்ற கேள்வி எழுவது நியாயமானது.

ஒரு தேசிய இனமானது, இன அழிவிற்கு உள்ளாக்கப்படுகிறது என்கிற பிரக்ஞை அல்லது அது குறித்தான விழிப்புணர்வு இந்த வல்லரசுகளுக்கு இருக்க வேண்டுமென நாம் எதிர்பார்ப்பதும், அவர்களால் அது புரிந்துகொள்ளப் படமுடியாததால் நாமே அவர்களுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைப்போம் என்று அவர்களை அணுகுவதுமே, தற்போது இராஜதந்திரம் என்ற பெயரில் நடைபெறும் போராட்ட அரசியல் கோட்பாடாக நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையின் அமைவிடம், இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் கடல்வழித் தலைவாசலில் இருக்கின்றது. இதுதான் சர்வதேச அரங்கில், இலங்கை பெறும் மூலோபாய கேந்திர முக்கியத்திற்கான காரணியாக அமைகின்றது.

ஈழத்தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை, இந்த வல்லரசாளர்களின் பிராந்திய நலன்களை தீர்மானிக்கும் நகர்வில், ஒரு முக்கிய துருப்புச் சீட்டாக இங்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்த வல்லரசுகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரதிநிதித்துவம் செய்யும் ஆசியான், சாங்காய் ஒத்துழைப்பு ஒன்றியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றோடு, அனைத்துலக நாணய நிதியம், உலகவங்கி, நேற்றோ என்பன, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளில் தமது வர்த்தக நலன்களையும், வெளிநாட்டு நேரடி முதலீட்டின் அளவினையும் பார்க்கின்றன.

இதேபோன்று, ஆசியாவுக்கு இன்னொரு முக்கியமான கடல்வாசல் உண்டு. வடதுருவ பனிப்பாறைகள் உருகினால் இதன் முக்கியத்துவம் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. தற்போது சர்வதேச ஊடகப்பரப்பில் அதிகமாகப் பேசப்படும் கிழக்கு சீனக் கடல்தான் அது.

இக்கடல் வானில், வான் பாதுகாப்பு இனங்காணும் வலயம் என்கிற (Air Defense Identification Zone) முன்னெச்சரிக்கை வான் பிரதேசத்தை சீனா பிரகடனம் செய்ததால் அப்பிராந்தியத்தில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

சீனாவுடன் மோதிக்கொள்பவர்கள், அமெரிக்காவின் மிகப்பெரிய பொருண்மியப் பங்காளிகளான ஜப்பானும், தென்கொரியாவுமே, போர் விமானங்களும், நாசகாரிக் கப்பல்களும் இக்கடலை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

இப்பிரகடனம் புதிய விடயமல்ல. அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான் உட்பட 20 நாடுகள், இவ்வாறான வான்பாதுகாப்பு முன்னெச்சரிக்கை வலயங்களை உருவாக்கியுள்ளதாக படைத்துறை நிபுணர் ஜின்ஷூவா வாதிடுகின்றார்.

ஆனால், பிரச்சினை இதுவல்ல. இதனூடாக சீனாவிற்கு எதிராக, நேட்டோ போன்றதொரு இராணுவக் கூட்டமைப்பினை ஆசியாவில் நிறுவிட அமெரிக்கா அடித்தளமிடுகிறது. என்கிற கணிப்பும் உண்டு. முரண்பாடுகளை உருவாக்கி, அதனூடாக நட்புச் சக்திகளை இணைத்துக்கொள்ளும் தந்திரோபாயங்கள் பழைய அணுகுமுறைகளாக இருந்தாலும், அமெரிக்காவின் இந்நகர்வினை, சீனா எவ்வாறு முறியடிக்க முயலும் என்று பார்ப்போம்.

தென்சீனக்கடலில் ஏற்பட்ட பிராந்திய முறுகல் நிலையை இடம் மாற்றுவதால், அதாவது, கிழக்கு சீனக்கடலில் அக்களத்தினை திறந்து கொள்வதால், சீனாவிற்கு என்ன இலாபம் என்கிற ஐயமும் ஏற்படுகிறது.

ஆனால், இலங்கை விவகாரத்தில் மேற்குலகம் காட்டும் சடுதியான அக்கறைக்கும், சீனாவின் கிழக்கு சீனக்கடல் வான்கள திறப்பிற்கும் ஏதாவது தந்திரோபாய இணைவு உள்ளதாவென்பதை கவனிக்க வேண்டும்.

திசை திருப்பலுக்கு திறக்கப்படும் புதியகள முனைகள், சிலவேளைகளில் உணர்திறன் மிக்க கொந்தளிப்புக் களமாக மாறக்கூடிய சாத்தியப்பாடுகளும் உண்டு.

தென்சீனக்கடலிற்குள் சீனாவின் ஆசியக்கனவினை முடக்கிவிடலாம் என்கின்ற அமெரிக்காவின் 10 ஆண்டு ஆசிய பசுபிக் திட்டம் வலுவிழந்துபோவது போல் தெரிகிறது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் தனிநாட்டு கோரிக்கையை பழிக்கும் நிலையில் உள்ளூராட்சி மன்றங்கள்



## வடக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**ஈழத்தமிழர்களின் சுயாட்சி, தனிநாட்டு கோரிக்கைகளை சர்வதேசம் பழிக்கும் நிலைக்கு வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன என்று குற்றஞ் சாட்டியுள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், உள்ளூராட்சி மன்றங்களின் உட்பூசல்கள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் தொடர்பில் மாகாணசபை ஆராயவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.**

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனங்களின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர் களுடான சந்திப்பின் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்குச் சுகயீனமான சந்தர்ப்பத்திலும் இந்தக் கூட்டத்துக்குச் சமுகம் அளிக்கின்றேன் என்றால் அதற்கு இரண்டு காரணங்கள், ஒன்று சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளரான சிற்றம்பலம் துரைராஜாவின் அழைப்பை என்னால் மறுக்க முடியவில்லை.

இரண்டு உள்ளூராட்சி மன்றங்கள் எமது அமைச்சின்கீழ்வருவதால்வந்தேயாகவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டின் பேரிலும் உங்கள் முன்னிற்கின்றேன்.

வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் இன்றைய நிலை மனநிறைவு தருவதாக அமையவில்லை.

முதன் முதலாகத் தொடங்கப்பட்ட வட மாகாண சபை என்பதால் பல பூர்வாங்க விடயங்களில் என் கவனம் உள் நுழைந்து இருந்ததால் முழுமையான கவனத்தை உள்ளூராட்சி மன்றங்களின் மீது செலுத்த முடியவில்லை.

ஒரு பக்கம் உங்களுக்கு பிரச்சினைகள் பல இருக்கும் அதே நேரத்தில் உள்ளூராட்சி உறுப்பினர்களின் சுயநலம் கட்டுக்கடங்காமல் செல்வதை நான் அவதானித்துள்ளேன்.

எமது கட்சியின் அங்கத்தினரே அவர்களுள் அடிபட்டு தமது கட்சியின் வரவு செலவுத் திட்டங்களை முறியடிக்க முன்வருகின்றார் கள் என்றால் எமது உறுப்பினர்களுள் ஏதோ ஒரு குறைபாடு இருக்கின்றது என்று பொருள் படுகின்றது.

பொதுவாகப் பதவியில் இருக்கும் ஒருவருடன் ஒத்துப் போக முடியாது போனால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம் அல்லது ஒத்துப் போகாதவர் தமது பதவியில் இருந்து இராஜினாமா செய்யலாம்.

அதைவிட்டு விட்டு எமது கட்சி சார்பில் கொண்டுவரும் வரவு செலவுத் திட்ட ஆவணத்தை சபையில் முறியடித்தல் என்பது



மன்னிக்க முடியாத ஒரு குற்றம்.

ஏனென்றால் அத்திட்டத்தில் குறைகள் இருந்தால் முன்னமே அதனைப் பேசித் தீர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அதற்கு மாறான நடவடிக்கைகள் எடுத்து தமது வரவு செலவுத்திட்டத்தைத் தாமே முறியடித்தவர்கள் வெட்கப்பட வேண்டும்.

எமது உள்ளூராட்சி மன்றங்கள் தான் தோன்றித்தனமாகப் போதிய புரிந்துணர்வு இல்லாமல் இதுவரை காலமும் வந்துள்ளன. போரின் தாக்கமும் அவற்றின் வளர்ச்சியில் படியாமல் இல்லை.

கூட்டுறவு அடிப்படையில் அல்லாது ஒரு வித இராணுவ ஆணையிடும் அடிப்படையில் உறவுகள் இருந்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அலுவலர்களின் ஆட்சி பற்றிய அடிப்படை அறிவும் எந்தளவுக்கு இருக்கின்றது என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

மாகாண சபை உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றின் திறன் மீள்விருத்தி செய்யப்பட வேண்டிய காலம் வந்துள்ளது. உறுப்பினர்கள் கடமைகள், தவிசாளர் கடமைகள், செயலாளர் கடமைகள் என்று பலதையும் நாம் அறிய முற்படவேண்டும்.

இது சம்பந்தமாகக் கருத்தரங்கங்களை வைத்து நிபுணர்களைக் கொண்டு அறிவுரை வழங்க உள்ளோம். எமக்கு தொழில் ரீதியாக முழுமையான அறிவு கிடைத்தால் மன்ற அங்கத்தவர்களை அதுவும் ஒரே கட்சியில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்களைப் பதவி இறக்குவது போன்ற நடவடிக்கைகளில் நாம் ஈடுபடமாட்டோம் என்று நம்பலாம்.

பதவியில் இருப்பவர்களும் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ள மாட்டார்கள் என்றும் எதிர்பார்க்கலாம். மேலும் கட்சிகளின் கட்டுக்கோப்பு, ஒழுக்கம், கடமைப்பாடு போன்றவற்றையும் கணக்கில் எடுத்து தொழிற்திறனை உறுதி செய்யலாம்.

உள்ளூராட்சி மன்றங்களை நாங்கள் தொழிற்திறனுடன் நடத்தினால் தான் எமக்குப் போதிய நிர்வாகச் செயலாட்சி, மேலாண்மைத் திறன்களும் தகுதிகளும் உண்டென்று உலகம் நம்பும் .இல்லையேல் உள்ளூராட்சி மன்றங் .களையே நடத்தத் தெரியாதவர்கள் ஏன்தான் சுயாட்சி, தனிநாடு என்றெல்லாம் கோஷம் போட்டுத் திரிகின்றார்களோ தெரியவில்லை என்று எங்களை உலகம் பழிக்கும்.

எமது ஆட்சி உட்பூசல்கள் அம்பலத்துக்கு வருவதை நாங்கள் தவிர்க்க வேண்டும். விரைவில் வடமாகாண சபையானது உள்ளூராட்சி மன்றங்களின் உட்பூசல்கள், நிர்வாகத் திறனின் குறை நிறைகள், இலஞ்ச ஊழல்கள் போன்ற பலதையும் பற்றி ஆராயும்.

ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும் தொழில்திறன் என்று கூறும் போது முக்கியமாக ஏழு தகைமைகள் அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

அவற்றை இங்கு கூறி வைக்கின்றேன். ஒன்று சுயநலமற்ற தன்மை, இரண்டு வெளி யார்களுக்குக் கடன்பட்டிருந்து அதனால் தமது தொழிலில் தர்மசங்கட நிலைக்கு ஆளா காதிருத்தல், மூன்று தகைமை அடிப்படை யில் சகல தேர்வுகளையும் நடத்துதல், நான்கு வெளிப்படைத்தன்மை, ஐந்து ஒவ்வொருவரின் நடவடிக்கைகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டிய கடப்பாட்டைப் பேணுதல்.

ஆறு பின்னணியில் சுயதேவைகளை மனதில் வைத்துக் கொண்டு நடவடிக்கைகளில் இறங்காதிருத்தல். அதாவது நம்பகத்த ன்மை, ஏழு தமது நடவடிக்கைகள் மூலம் இவற்றைப் பேணி நடப்பதால் மற்றவர்களுக்கு உதார ணமாக இருப்பது. இந்த ஏழு தகைமைகளையும் நாம் உள்வாங்கி விட்டால் எமது பொது வாழ்க்கை பயனளிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பலவித இடர்களை எதிர்நோக்கிய உள்ளூராட்சி மன்றங்கள் இனியேனும் ஒற்றுமைப்பட்டு ஒன்று சேர் ந்து மேற்கண்ட தகைமைகளை மனதில் கொண்டு உண்மையான மக்கள் சேவையில் ஈடுபட வேண்டும்என அவர்மேலும்தெரிவித்தார்.(அ-6)

# அரசின் கடன் 75 வீதமாக குறைவடைந்துள்ளது

அரசாங்கத்தின் முழுக் கடன் தொகையை தேசிய வருமானத்தின் மூலம் 75 வீதமாக அரசாங்கத்தினால் குறைக்க முடிந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதியமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதற்கு முன்னர் இது 104 வீதமாக இருந்தது. நாட்டின் தனி நபர் கடனானது தனிநபர் வருமானத்தை விடவும் குறைவாகவுள்ளது.

நாட்டின் தனி நபர் கடன் தொகையானது மூன்று இலட்சம் ரூபா என சிலர் கூறிய போதிலும் தனி நபர் வருமானம் 4 இலட்சம் ரூபா என்பதை குற்றம் சுமத்துபவர்கள் குறிப்பிடாதது கவலைக்குரிய விடயம் என்றார். (அ-2)

# 2014 ஆம் ஆண்டை தேர்தல் ஆண்டாக அறிவிப்பு

2014 ஆம் ஆண்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் ஆண்டாக அறிவிததுள்ளார்.ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டார் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்வரும் ஆண்டில் சில வேளைகளில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படக் கூடும்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் சேறுபூசும் வகையிலான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப் படுத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எதிர்வரும் ஆண்டு தேர்தல்கள் நிறைந்த ஆண்டாகவே கருதப்பட வேண்டும்.

அனைத்து உறுப்பினர்களும் தேர்தல்களுக்கு ஆயத்தமாக வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்கவில்லை. (அ-2)

# மானிப்பாய் பிரதேச சபைக்கு சுற்றுமதில் அமைக்க அனுமதி

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தை சுற்றி மதில் அமைக்கப்படவுள்ளது.

மானிப்பாய் பிரதான வீதியில் அமைந்துள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கட்டடங்களை சூழ இம் மதிலானது அமைக்கப்படவுள்ளதுடன் மிக நீண்ட காலமாக தகரத்தினால் அடைக்கப்பட்டிருந்ததனால் இது குறித்து சபையில் ஆராயப்பட்ட போதே மதில் கட்டுவதற்கான அனுமதி கிடைத்திருந்தது.

நீண்ட காலமாக தகரத்தினால் அடிக்கப்பட்டிருந்தமையால் பாதுகாப்பு பிரச்சினைகளும் பலவற்றை பிரதேச சபையினர் சந்தித்து வந்தனர்.

மதில் அமைக்கப்படும் போது தமது வீடுகளுக்கான பாதையில் பாதிப்புக்கள் ஏற்படுமென தெரிவித்து சிலரை பிரதேச சபையின் உறுப்பினர்களையும் பதில் தவிசாளரையும் சந்தித்து கலந்துரையாடிய பின்னரே மதில் கட்டுவதற்கு அனுமதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் தற்போது மதில் அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் நில அபகரிப்பினால் எமது தேசம் வளமிழக்கின்றது

## விவசாய அமைச்சர் ஆதங்கம்

(கிளிநொச்சி)

**இராணுவ நெருக்குவாரங்களினாலும் நில அபகரிப்பினாலும் அல்லற்பட்டுக்கொண்டிருக்கின்ற எமது தேசத்தில் விவசாயம் மற்றும் பாற்பொருள் உற்பத்தித்துறைகளில் முதலீடு செய்வதற்கு புலம்பெயர் தமிழ் தொழில் அதிபர்களிற்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அழைப்பு விடுத்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட கால்நடைத்திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற கால்நடை வைத்தியர்களுக்கும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் வடமாகாண விவசாய மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

இராணுவ நெருக்குவாரங்களாலும் நில அபகரிப்பினாலும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்ற எமது தேசத்தில் இத்தகைய நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கான போராட்டங்களும் நிகழ்கிறது. அதேவேளை அசுரவேகத்தில் பல முதலீட்டு வங்கிகளும் கடன் உதவு நிறுவனங்களும் எமது மக்களுடைய பணத்தை எமது நிலத்தை விட்டு வெளியேற்றுவதில் பங்களிக்கிறார்கள்.

வடமாகாணத்தில் பணசுழற்சி நிலை மந்தம் அடைந்திருக்கிறது. தொழில் இன்மையும் வறுமையும் அதிகரித்திருக்கின்றது. ஆகவே நிலஅபகரிப்பை தடுத்து நிறுத்தப் போராடுகின்ற அதேவேளை இருக்கின்ற



நிலங்களில் விவசாய மற்றும் கால்நடை கூட்டுப்பண்ணைகளை நிறுவ புலம் பெயர்ந்திருக்கின்ற தமிழ்த்தொழில் அதிபர்கள், கூட்டுறவு அமைப்புக்கள் எமது நிலத்தில் முதலிட முன்வர வேண்டும்" என்றார்.

இந்நிகழ்விற்கு வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, வடமாகாண கால்நடை வைத்தியத் திணைக்களப்பணிப்பாளர் வைத்தியர் வசீகரன், வடமாகாண நீர்ப் பாசனப் பணிப்பாளர்ஸ்ரீரிசிவபாதம் அமைச்சின்செயலாளர் கலால்டீன் மற்றும் வைத்தியர்கள், உயரதிகாரிகள், உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்.

அத்துடன் உணவு மற்றும் விவசாய அமைப்பின் அனுசரணையுடன் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ம-4)

# பால் உற்பத்தியாளர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் உள்ள 75 இற்கு மேற்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு 15 நாட்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் கொடுப்பனவான ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை பூநகரி கால்நடை கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இதுவரை வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் தமது பகுதி பால் உற்பத்தியாளர்களின் குடும்பங்கள் தமது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் பெரும் அவலங்களைச் சந்திப்பதாக முக்கொம்பன்,செம்பண்குண்டு, கிறாஞ்சி பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தலைவர்கள் கவலை தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், இதுவரை காலமும் கால் நடைத்திணைக்கள வைத்திய அதிகாரியின் உறுதிப்படுத்தலுடன் மாதாமாதம் இரு தடவை சீரான முறையில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன.


பூநகரி கால்நடைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், செயலாளர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால் கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் இக்கொடுப்பனவு உறுதிப்படுத்தலை செய்ய முற்பட்டதால் பால் உற்பத்தி செய்யும் பாமரமக்கள் பெரும் துன்பங்களை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பண்ணையாளர்கள் மாதாந்தம் 3 இலட்சம் ரூபா பெறுமதிக்கும் கூடுதலான பசும்பாலை பூநகரி கால்நடைக்கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கி வருகின்றனர்.

இங்குள்ள போட்டி நிலையால் வேறு நிறுவனங்கள் கூடுதலான விலையைக் கொடுத்து பாலைக் கொள்வனவு செய்ய முயற்சி எடுப்பதாகவும் தெரியவருகிறது. (ம-84)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# நேரக்கணிப்பாளர் கூடு சேதம்



(குருமன்காடு)

மன்னார் நகரின் முச்சக்கரவண்டித் தரிப்பிட நிலையத்திலுள்ள நேரக்கணிப்பாளர் கூடு இனந்தெரியாதோரால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-250)




# சிறுவர்கள் மீது வன்புணர்வு; சந்தேக நபர் கைது



(முல்லைத்தீவு)

மாங்குளம் பகுதியில் பாட்டனாரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்ட இரண்டு சிறுவர்களை மாங்குளம் பொலிஸார் மீட்டெடுத்ததுடன் சிறுவர்களின் சித்தியின் முறைப்பாட்டினடிப்படையில் பாட்டனாரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய வேளையில் சந்தேகநபரை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

பிள்ளைகளின் அம்மம்மா தனது கணவர் சம்பந்தமாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யக்கூடாது என பயமுறுத்தியதையடுத்தே பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை என பிள்ளைகளின் சித்தி மன்றில் தெரிவித்தார். (ம)

# மது விற்பனை நிலையத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கவும்

## செல்வம் எம்.பி கோரிக்கை

மன்னார், பெரியகடை கிராமத்தில் மக்கள் குடியிருப்பிற்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வரும் மது விற்பனை நிலையத்தை அகற்ற உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரியகடை கிராம மக்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையில் இரகசியமான முறையில் மது விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தற்போதுதான் அக்கிராம மக்களுக்கு தெரியவந்துள்ளது. ஏற்கனவே மன்னார் சௌத்பார் பகுதியில் அமைந்திருந்த 2 மது விற்பனை நிலையங்களும் அப்பகுதி மக்களின் பாரிய எதிர்ப்பால் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இரகசியமான முறையில் பெரியகடைப் பகுதியில் மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு வந்துள்ளது.

அப்பகுதியில் அதிகமான பாடசாலை மாணவர்கள், யுவதிகள் உள்ள நிலையில் போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மக்களின் ஆதரவுடன் குறித்த மது விற்பனை நிலையம் அமைப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால் அப்பகுதியில் பல்வேறு கலாசார சீர்கேடுகள் இடம்பெறும் என அப்பகுதி மக்கள் குறிப்பாக பெண்கள் அஞ்சுகின்றனர். எனவே, குறித்த இடத்தில் மது விற்பனை நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கிய அதிகாரிகள் உடனடியாக அதனை நிறுத்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (ம-250)

# திருக்கேதீஸ்வரத்தில் மனித எச்சங்கள் மீட்பு

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் மண்டையோடுகள் மற்றும் மனித எலும்புகளின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார், திருக்கேதீஸ்வரம் கிராம சேவகர் பிரிவுக்குற்பட்ட மாந்தை சந்தியிலிருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு செல்லும் பாதையில் இருந்து சுமார் 75 மீற்றர் தொலைவிலேயே குறித்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் குறித்த பகுதியில் குடிநீர் இணைப்பை வழங்குவதற்காக பணியாளர்கள் வீதிக்கரையில் பள்ளம் தோண்டிய போது குறித்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

முதலில் இரண்டு மண்டையோடுகளும். ஏனைய பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன. இது குறித்து உடனடியாக அருகில் உள்ள இராணுவத்திற்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் இராணுவத்தினரும் சம்பவ இடத்திற்கு வந்தனர்.


அதனைத்தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸார தலுவத்தை உட்பட பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வந்தனர்.

அத்துடன் வடமாகாண அமைச்சர் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிறிமூஸ் சிறாய்வா,மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அந்தோனி சகாயம் ஆகியோரும் சம்பவ இடத்திற்கு வந்து மனித எச்சங்களை பார்வையிட்டனர்.

தற்போது தோண்டப்புட்ட பள்ளத்தினுள் மேலதிகமான எலும்புக்கூடுகள் இருக்கலாம் என்ற அச்சம் நிலவுவதனால் ஏனைய பகுதிகள் நேற்று சனிக்கிழமை நீதவான் முன்னிலையில் தோண்டப்பட்டதுடன் அவ்விடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவன் வேற மாதிரி - திரைவிமர்சனம்




பெரும் சினிமா பின்னணி கொண்ட விக்ரம் பிரபுவின் இரண்டாவது படம்..., "எங்கேயும் எப்போதும் முதல் படத்திலேயே முத்திரை பதித்த இயக்குநர் எம். சரவணனின் இரண்டாவது படம்.. என ஏகப்பட்ட "இரண்டாவது.. எதிர்பார்ப்புகளுடன் வெளிவந்தாலும் இந்த வாரத்திலும், இன்னும் சில வாரங்களிலும் முதல் இடத்தைப் பெற வந்திருக்கும் திரைப்படம் தான் "இவன் வேற மாதிரி.

கதைப்படி சென்னை சட்டக்கல்லூரியில் சில வருடங்களுக்கு முன் பொலிஸ் கண் எதிரே அவர்கள் கைகட்டி வேடிக்கை பார்க்க நடந்தேறிய கொலை வெறி மாணவர் அடிதடி தான் "இவன் வேற மாதிரி படத்திற்கான அடி நாதம்! அந்த வன்முறை சம்பவத்தில் வெகுண்டெழும் விக்ரம் பிரபு, அந்த அடிதடிக்கு காரணமான பதவி வெறிபிடித்த சட்ட அமைச்சர் உள்ளிட்ட சகலமானவர்களையும புரட்டி எடுத்து சட்டத்தின் முன் நிறுத்துவதும், சாட்சியே இல்லாமல் கொல்வதும் தான் இவன் வேற மாதிரி படத்தின் மொத்த கதையும்!

இத்தனைக்கும் விக்ரம் பிரபு, சம்பந்தப்பட்ட சட்டக்கல்லூரி மாணவரா என்று கேட்டால் அதுதான் இல்லை. அப்புறம் பின்னே..?! அவர் "விஸ்காம் முடித்து சின்ன சின்ன போட்டோ கிராபி வேலைகள் செய்யும் புகைப்பட கலைஞர். அவருக்கு சட்டக் கல்லூரி அடிதடியில் ஆக்ரோஷம் பீறிடுவதற்கான காரணம் என்ன? எனும் கதையுடன், கதாநாயகி சுரபி, விக்ரம் பிரபுவின் காதலையும் (அப்போ நாயகி சுரபி சட்டக்கல்லூரி மாணவியாக்கும், என நீங்கள் நினைத்தால், அதுவும் இல்லை என்பது தான் ஸ்கிரீன் பிளே மேஜிக்!) கலந்து கட்டி கலர்புல்லாக அதே நேரம் லவ், ஆக்ஷன், சென்டிமென்ட் திரில்லராக இவன் வேற மாதிரி திரைப்படத்தை புதுமாதிரியாக தந்திருக்கிறார் இயக்குநர் எம். சரவணன். அதற்காக அவருக்கு ஒரு ஹேட்ஸ ஆப் சொல்லியே ஆக வேண்டும்!


இயக்குநர் எம். சரவணனின் எதிர்பார்ப்பை அவர் கற்பனையில் உருவாக்கிய குணா "அலைஸ் குணசேகரன் பாத்திரமாகவே மாறி நடித்து அடித்து உடைத்து தூள் பரத்தியிருக்கிறார் விக்ரம் பிரபு. "கும்கியில் ஒரு மாதிரி விக்ரம் பிரபு என்றால் இதில் "வேற மாதிரி விக்ரம்! பிரபு (இளைய திலகத்தை சொன்னோம்..!) கவலையை விடுங்கள் குட்டி 16 அடி அல்ல தாத்தா நடிகர் திலகத்திற்கும் சேர்த்து 64 அடி பாயும்!

புதுமுகம் சுரபி டில்லி பொண்ணாம்! செவத்த சேலத்து பக்கம் பொண்ணு மாதிரி மாலினியாகவே மாறி நடிப்பில் பொளந்து கட்டியிருக்கிறார். அதுவும் விக்ரம் பிரபு தந்த மீன்களும் தொட்டியும் கையுமாக முன் பாதியில் கடும் காதல் தவம் புரியும் அம்மணி, பின் பாதியில் தன் காதலன் ஒரு நல்ல விடயத்திற்காக அமைச்சர் தம்பி அண்ட் கோவினரை அடித்து, அடைத்து உதைத்திருக்கிறார் என தெரிந்ததும் அதை காட்டிக்கொள்ளாமல் விக்ரமை தொடர்ந்து காதலித்து வில்லனின் கைகளில் சிக்கி உண்மையை சொல்ல மறுத்து திருஷ்டி பொம்மையாகும் இடங்கள் கண்ணீர் இல்லாதோர் கண்களையும் கரைத்து விடும்!.

அரவிந்தன் ஐ.பி.எஸ், ஆக கணேஷ் வெங்கட்ராமன், சட்டத்துக்கு புறம்பான சட்ட அமைச்சராக வள்ளி ஹரிராஜன், அவரது தம்பியாக வம்சி கிருஷ்ணா, அம்மா சார்மிளா, புதிய அப்பாக்கள், நாயகியின் புதுமுக தங்கை எல்லோரும் பாத்திரமறிந்து பளீச்சிட்டிருக்கிறார்கள்.

சி. சத்யாவின் இசையில் லவ்வுல... லவ்வுல விழுந்துட்டேன்... என்னை மறந்தேன் இது தான் உள்ளிட்ட ஆறு பாடல்களும் எங்கேயும் எப்போதும் பட சாயலிலேயே இருந்தாலும் அதுவும் இவன் வேற மாதிரி படத்துக்கு ப்ளஸ் தான்! சக்தியின் ஒளிப்பதிவு படத்திற்கு மேலும் சக்தி கூட்டுகிறது. சண்டை பயிற்சியாளர் ராஜசேகரின் அதிரடியும் அசத்தம்!

நாயகி சுரபியை காணோம் என பொலிஸ ஸ்டேஷன் வரும் இரு வீட்டு பெற்றோரிடமும், பொலசார் இந்த காதலன் இல்லாமல் பொண்ணுக்கு வேறு காதலர் யாரும் உண்டா? எனக் கேட்டு விட்டு, இப்படி கேட்கறதால எங்களை மாதிரி பொலிஸை தப்பா நினைக்காதீங்க, உங்க பொண்ணை பத்தி உங்களுக்கு நல்ல அவிப்பிராயம் தான் இருக்கும். ஆனா அந்தப் பொண்ணை தேட இதுமாதிரி டீடெயில் எல்லாம் உதவியா இருக்கும் எனும் வசனத்தில் ஆகட்டும், விக்ரம் பிரபு - சுரபி வீட்டினர் இவர்கள் காதல் தெரிந்து முதன் முதலில் சந்திக்கும் காட்சியில், இவர் வீட்டினருக்கு அவரும், அவர் வீட்டினருக்கு இவரும் குடிக்க ஏதோ பானம் எடுத்து செல்லுகின்ற காட்சியில் ஆகட்டும் புரட்சி படைத்திருக்கிறார் இயக்குநர்.



அதேநேரம் முன்பாதியில் தெரியும் சற்றே குறைவான வேகம், வாட்ச் மேன் கொலையை தாமதமாக துப்பு துலக்குவது உள்ளிட்ட ஒரு சில குறைகள் இருந்தாலும் இவன் வேற மாதிரி - ரொம்ப புது மாதிரி.!

## விரைவில் ஜித்தன் 2




ஜித்தன்' படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் தயாராக இருக்கிறது.

வின்சென்ட் செல்வா இயக்கத்தில் ஆர்.பி.சௌத்ரியின் மகன் ரமேஷ் கதாநாயகனாக நடித்த இப்படத்தின் வெற்றியை தொடர்ந்துதான் ரமேஷை 'ஜித்தன்' ரமேஷ் என்று அழைக்கத் தொடங்கினார்கள்.


இந்தப் படத்திற்குப் பின்பு மதுரை வீரன், புலி வருது. பிள்ளையார் தெரு கடைசி வீடு போன்ற பல படங்களில் நடித்த ஜித்தன் ரமேசிற்கு அப்படங்கள் சொல்லும் படியான வெற்றியை கொடுக்கவில்லை.

சமீபகாலமாக எந்தப் படங்களிலும் நடிக்காமல் இருந்த அவர் அடுத்து, ஜித்தன் படத்தின் இரண்டாம் பாகமாக உருவாக இருக்கும் 'ஜித்தன் 2' படத்தில் நடிக்க இருக்கிறார்.

க்ரைம், த்ரில்லர் படமாக உருவாக இருக்கும் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனத்தை வின்சென்ட் செல்வா எழுத. ராகுல் இயக்குகிறார்.

இந்தப் படத்தின் கதாநாயகி யார், இசை அமைப்பாளர் யார் என்பது போன்ற விடயங்கள் இன்னும் முடிவாகவில்லை என கொசுறுத்தகவல்.

## தோசை சுடுவதில் அசத்தும் தமன்னா



தோசை சுடுவதில் நான் ஸ்பெஷலிஸ்ட் என்கிறார் தமன்னா.

எட்டு ஆண்டுகளில் முப்பது படங்களில் நடித்து விட்டார் தமன்னா.இவருடன் வந்த பல நடிகைகள் மார்க்கெட் இழந்து ஓரம் கட்டப்பட்டு விட்டனர்.

ஆனால் இவர் மட்டும் தமிழ், தெலுங்கில் இன்னும் பிசியாக நடித்துக் கொண்டு இருக்கிறார்.

தற்போது அஜித்துடன் நடித்த 'வீரம்' படம் பொங்கலுக்கு வருகிறது. மேலும் இரண்டு இந்தி படங்களிலும் ஒரு தெலுங்கு படத்திலும் நடிக்கிறார்.

என்னதான் படங்களில் பிசியாக நடித்தாலும் குடும்பம்தான் தமன்னாவுக்கு ரொம்ப முக்கியமாம்.

இதுகுறித்து அவர் கூறுகையில், சினிமாவா? குடும்பமா? என்றால் குடும்பத்திற்குதான் முதல் இடம் தருவேன். குடும்பம் எனக்கு ரொம்ப முக்கியம். என் பலம், பலவீனம் இரண்டுமே குடும்பம்தான்.

மேலும் வீட்டில் இருந்தால் நான் ஒரு நடிகை என்பதையே மறந்து விடுவேன் என்று கூறியுள்ளார்.

குடும்பம் மட்டுமல்லாமல் சமையலிலும் வெளுத்து வாங்குவாராம், அதிலும் குறிப்பாக தோசையை சிறு கோணல் கூட இல்லாமல் அற்புதமாக சுடுவேன் என்றும் அந்த தோசையை பார்த்தால் எல்லோருக்கும் சாப்பிட ஆர்வம் தோன்றும் எனவும் கூறியுள்ளார்.


## கூகுல் தேடலில் முன்னணியில் சன்னி



கூகுள் தேடலில் தொடர்ந்தும் இந்த ஆண்டிலும் சன்னி லியோன் தென்னிந்திய நடிகைகளில் முதல் இடத்தில் இருக்கிறார். லியோனுக்கு என்றும் ரசிகர்கள் மத்தியில் தனி வரவேற்பு உண்டு என்று மீண்டும் நிரூபித்துள்ளார்.

அதே சமயம் இந்தியாவில் அதிகம் கூகுள் செய்யப்பட்ட பிரபலங்களில் விஜய் முதலிடத்திலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அஜித் புகழ் பாடும் குஷ்பு



அஜித்தை ஹொலிவுட் நடிகருடன் ஒப்பிட்டு புகழாரம் சூட்டியுள்ளார் குஷ்பு.

சினிமாவைப் பொறுத்தவரை 60 வயதை கடந்த ஹீரோக்கள் கூட தலையில் கறுப்பு சாயம் பூசிக் கொண்டு தங்களது ஹீரோ இமேஜை காத்துக் கொண்டு வருகின்றனர்.

ஆனால் அஜித்தோ மங்காத்தா, ஆரம்பம படங்களையடுத்து இப்போது, வீரம் படத்திலும் நரைமுடி கலந்த தன் ஒரிஜினல் கெட்டப்பிலேயே நடித்துள்ளார்.

இதற்கு ரசிகர்கள் மத்தியில், வரவேற்பு இருப்பதை போல் சில சினிமா பிரபலங்களும இதை வரவேற்றுள்ளனர்.

குறிப்பாக நடிகை குஷ்பு, அஜித்தை ஹொலிவுட் நடிகர் ஜார்ஜ் க்லுனியுடன், ஒப்பிட்டு கருத்து கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், ஆரம்பம படத்தில் அஜித்தை பார்த்தபோது ஹொலிவுட் நடிகர் ஜார்ஜ் க்லுனியை பார்ப்பது போன்று இருந்தது. கொலிவுட்டைப் பொறுத்தவரை, அஜித்தான், ஜார்ஜ் க்லுனி என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## நிர்வாக சுதந்திரம்

அன்புடையீர்!
இதுவோர் அரச
திணைக்களம்,
ஆதலால் நீங்கள்
வரலாம் போகலாம்
வராமலும் இருக்கலாம்
வந்தவுடன் இருக்கலாம்
நாளையும் வரலாம்
கேள்வியில்லை!
கேட்பாரில்லை!!
அமர்ந்திருக்கலாம்
நடந்து திரியலாம்
அமைதியாயிருக்கலாம்
உரத்தும் பேசலாம்
ஏனென்று எந்தக்
கேள்வியுமில்லை
வேலை செய்யலாம்
செய்யாது இருக்கலாம்
காலையில் வந்து
காணாமற் போய்
மாலையில் வந்து
ஒப்பமும் போடலாம்!
யாரும் வந்து
யாரோடும் பேசலாம்
வந்தவரோடு
வாசலில் நிற்கலாம்
வாசலில் நின்றே
வேடிக்கை பார்க்கலாம்!
முறுக்குக் கொறிக்கலாம்
மிட்டாய் தின்னலாம்
கொறித்துக்கொண்டே
கோலும் பேசலாம்!
கைத்தொலைபேசியை
காதில் வைத்து
நடக்கலாம் சிரிக்கலாம்
நடனமும் ஆடலாம்!
வேட்டி கட்டலாம்
ரையும் கட்டலாம்
வெள்ளிக்கிழமை
வேலை நாள்
வேறுபாடின்றி
பொட்டும் வைக்கலாம்
விடுமுறை எடுக்கலாம்
எடுக்காமலிருக்கலாம்
விடுமுறைக் கடிதம்
தரலாம், விடலாம்!
பொறுப்புகள் எதுவும்
ஏற்காதிருக்கலாம்
ஏற்றால் எதுவும்
செய்யாதிருக்கலாம்
கேள்வியுமில்லை
கேட்பாருமில்லை
அன்புடையீர்!
யாரும் வரவும்
யாரும் போகவும்
எந்தத் தடையும்
எவருக்கும் இல்லை!
இத்தனையும் செய்து
எத்தனை மகிழ்ச்சி!
மாதமுடிவில்,
ஒப்பமிடுவதும்
ஊதியம் கிடைக்கிறது
என்னருமை தாய்நாட்டு
அரச நிர்வாகத்திற்கு
ஜனநாயக சோஷலிச
சுதந்திரக் குடியரசுக்கு
ஓ போடு

**கவிக்குரல்**



## தம்பியுடையான்...

தம்பி எழுந்தான்
இன்பம் எதுவென அறிய
இச்சையானான் போதையில்
மிச்சம் மீதியின்றி
மொத்தமும் முடிந்த பின்பு
நித்தம் வீதியில்
பிச்சை எடுக்கிறான்
போதை இச்சை
தணிப்பதற்காய்

**மாவை. நா.கஜேந்திரன்**



## புத்தாண்டு வேண்டும்

பொற்காலம் தங்கிட
புத்தாண்டு வேண்டும்
பொலிவுடன் புதுவாழ்வு
புலர்ந்திட வேண்டும்
இத்தரை இலயித்திட
இலௌகீகம் வேண்டும்
இன்னல்கள் நீங்கிட
இயல்பு நிலை வேண்டும்
போர்முனை அகன்றிட
ஊர்மனை வேண்டும்
பொல்லாத அச்சங்கள்
ஒழிந்திட வேண்டும்
இல்லாமை நீங்கிட
நல்லாக்கம் வேண்டும்
இறையாண்மை
கிடைத்திட
இத்தனையும்
வேண்டும்

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**





## இறுதி வணக்கம்

அடக்கப்பட்ட இனத்திலிருந்து
ஆயிரம் மண்டேலாக்கள் பிறப்பர்
அவ்வினத்தின் விடுதலைக்காய்
போராடி வீழ்ந்த பின்னும் முளைப்பர்
உலகின் தலைவர்களுக்கு
உதாரணம் கொடுத்தவரே
உமக்கு எம்மவர் சார்பில்
செலுத்துகிறோம் இறுதி வணக்கம்

சி.ரவிக்குமார்
திருமுறிகண்டி

## வரலாறின் உண்மையான மனிதன்

இனத்தில் கறுப்பினமாம்
இனவெறியை நாட்டிலிருந்து
விரட்டிய வீரனான
மண்டேலா- எதிர்ப்புக்களை
பொறுமையுடன் வென்ற
வரலாற்று உண்மையான
மனிதன்

செ.மிதுர்ஷா
பருத்தித்துறை

## மறுபிறவி

விடுதலை கேட்ட
விடுதலை தலைவன்
விடுதலையடைந்து
விடுதலை தலைவனானாய்-உன்
விடுதலை- மறுபிறவிக்கா?

இணுவில் வாகீசன்

# மௌனத்தின் தேடல் – 183

## விடுதலைச் சிரிப்பு

இருபத்தேழு ஆண்டுகள்
இரும்புச் சிறையில்
இட்ட தீப்பொறி
எரிமலைப் பிழம்பாகி
வெள்ளை ஜனநாயகப்
பூட்டுக்களை உடைத்து
இனவெறிச் சங்கிலியை
அறுத்தெறிந்த வீரன்
விடுதலைச் சிரிப்பால்
அகிலத்தை அணைத்தான்

இரா.பிரம்மா
நெடுந்தீவு

## கறுப்பு பேரழகன்

நீயோ கறுப்பு-உன்
மனமோ வெள்ளை
எங்கள் தலைவர்கள்
சிங்கப்பூர்
செல்லும்போது
நீயோ
சிறைக்குச் சென்றாய்
உன் சிறை வாழ்க்கை
கறுப்பினத்திற்கு
சீதனமாம்
நீர் இல்லாவிட்டாலும்
உம் நாமம் சொல்லும்
இவ்வுலகம்

க.கபில்ஸ்ரன்

## பயணம்

கொடுங்கோண்மை
வெள்ளையரின்
கடும்போக்கு கண்டு
சினந்தெழுந்த சிங்கமே!.
சிறைக்கூடம் தன்னில் நீர்
சித்திரவதை தாங்கியும்
அடிமை வாழ்வுக்கு
விடிவளிக்கும் பயணம்
மரணத்திலும் தொடரும்

அ.கஜன், மல்லாவி

## இன் உலகில்

தான்தோன்றி இன் உலகில்
கருமலராய் நீ தோன்றி
நறுமணம் அதில் வீசி
வெண்ணிற மலர்போல்
மலர்ந்திட இவ்வுலகை
வேண்டித்தான் சென்றாயோ
இனியொரு மலரும்
மலர்ந்திடுமோ

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## நினைவுகள்

இனத்தின் விடிவுக்காய்- இந்த
ஜகத்தின் சோதியாய்
ஒளிர்ந்த தீப ஒளி- இன்று
ஒளியிழந்து போனாலும்
என்றும் எம்மவர்
நெஞ்சங்களில் நீங்காது
நிறைந்திருக்கும்
விடிவு தாண்டியும்

ஈழவன்
துணுக்காய்

## மனிதம்

இன மத பேதமின்றி
எல்லோர் நெஞ்சிலும்-பாரம்
கண்கள் சமுத்திரமாகிட
நீர் செய்தவை எம்மனக் கண்ணில்
நிழலாடிட- உம் கொள்கைகள் எமக்கு
முன்மாதிரியாகிட சாய்ந்துவிட்ட
மனிதத்திற்காய் மனிதம்
தேடும் உலகம் ஆழ்துயரில்


ஆர்.விஜி, உடுவில்

## மாமனிதன்

தனக்காகவே வாழும்
இவ்வுலகில்
பிறருக்காகவே வாழ்ந்து
விடியல் தேடிய
இருண்ட கண்டத்து
சூரியனை
போற்றுவோம்
பின்பற்றுவோம்
எமக்கான
விடுதலையை
நோக்கி...!

உதயம் ரூபன்
நயினை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –184



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 26.12.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீயா!

A/L பரீட்சை பெறுபேறு பற்றி மாணவர்களின் மனநிலை பற்றிய உங்கள் கருத்து?

*செ.மிதுர்ஷா, பருத்தித்துறை*

விதைத்ததே விளையும் அவ்வளவு தான்.




அன்பின் வியாசரே!

பெண்களின் மனதை அறியும் மந்திரம் உமக்கு தெரியும் என்று சொல்கிறார்கள் உண்மையா? ஒரே வரியில் சொல்ல முடியுமா?

*கிரு.செந்தூரன், பருத்தித்துறை*

ஆனானப்பட்ட சிவபெருமானால் கூட அறிய முடியாத மந்திரம் , அற்பம் எனக்கு தெரிந்திருந்தால் பிரயோகித்திருப்பேனே? குடும்பத்துடன் குதூகலமாய் வாழ்ந்திருப்பேனே?

அன்பின் வியாசரே!

பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது என்பர். தங்கள் கருத்து என்ன?

*கணபதிதாசன், கட்டைக்காடு*

ஒட்டாதுதான். ஆனால் ஒன்றிணையும்.

Hello அண்ணா!

இன்னுமொரு நெல்சன் மண்டேலா தோன்ற வாய்ப்புக்கள் உண்டா? அல்லது அதற்கான வாய்ப்புக்கள் உருவாகுமா?

*க.கபில்ஸ்ரன்*

அதிகார வர்க்கத்திடமிருந்து மக்களை மீட்டு வெளிச்சத்திற்கு கொண்டு வரத் துடிக்கும் மண்டேலாக்களா? ம்ம்ம்.... வேண்டுமென்றால் சினிமாவில் பார்க்கலாம்.

இன்னுமொரு நெல்சன் மண் டேலா தோன்ற வாய்ப்புக்கள் உண்டா? அல்லது அதற்கான வாய்ப்புக்கள் உருவாகுமா?

**கொஞ்சம் சிரிங்கப்பா...**




வியாசர் ஐயா!

எப்படி இருக்கீங்க. ஒரு அழகான கவிதை உம்மைப் பற்றி சொல்லும் பார்ப்பம்?

*பா. பொன்னொளி, அல்வாய்*

பொன்னொளியே -நீ
மின்னொளியோ?
எனை பொல்லாத கேள்வி கேட்கும்
நீ வன்மொழியோ?

ஆண்கள் ஏன் விதம்விதமான தொலைபேசிகள் வைத்துக் கொண்டு அலைகின்றனர்.

அன்பின் வியாசரே!

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பதன் அர்த்தம் யாது?

*சி.றெபேக்கா, மட்டுவில்*

சிரிக்கும்போது உடலில் உள்ள தசை நார்கள் இளகி உடல் இலகுவாக்கப்படுகின்றது. இதனால் இரத்த ஓட்டம் சீராக்கப்படும். (விஞ்ஞானங்கள் கண்டு பிடிக்க முன்னாடியே இந்த பழமொழியை தமிழன் உருவாக்கி விட்டான்)

அன்புடன் வியாசருக்கு!

துன்பம் வரும் போது சிரிக்கும் படி வள்ளுவனார் சொல்கின்றார். அது எப்படி முடியும் வியாசர்?

*சி.லீலா, இணுவில்*

உனக்கு துன்பம் வரும் போது சிரிக்கச் சொன்ன வள்ளுவன் அதனுள் சொல்லாப் பொருளொன்றையும் சொல்லியிருக்கிறான். அதுதான் மற்றவனுக்கு துன்பம் வரும் போது வருந்து என்பது.

வியாசர் சேர்!

செய்வினை சூனியம் என்று கூறுகின்றார்கள். இதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரங்கள் ஏதும் இருக்கின்றனவா?

*தில்லைநாயகம், மத்தியூஸ்வீதி*

விஞ்ஞான ரீதியாக எந்த ஆதாரமும் இல்லை. செய்வினை சூனியம் என்பன உண்டென்றால் உலகில் உள்ள பொல்லாத தீவிரவாதிகளை அழிக்கட்டும் பார்க்கலாம். எல்லாம் பொய்யும் பித்தலாட்டமும்தான்.

வியாசரே!

அதிகமான அழகு பெண்களுக்கு ஆபத்தை உண்டாக்குமா?

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

இல்லை. அதிகமான அழகுசாதனப் பொருட்கள்தான் ஆபத்தை உண்டாகதும்.

வியாசர் ஐயா!

எனக்கொரு சந்தேகம் நீர் எவ்வளவு தூரம் படித்தீர்?

*சீதாராம், பருத்தித்துறை*

உங்கள் கேள்விகளுக்கு பதில் கூறும் அளவிற்கு.

அன்புள்ள விஜய் அண்ணா!

ஆண்கள் ஏன் விதம்விதமான தொலைபேசிகள் வைத்துக் கொண்டு அலைகின்றனர்.

*இ.தெனிஸ்ரன்*

விதவிதமான சிம் கார்டுகள் இலவசமாய்க் கிடைக்கிறதே வாங்கி சொருகலாம் என்றுதான்.

# பள்ளிவாசல்கள் விவகாரத்தில் பொலிஸார் தலையிடக்கூடாது

புதிதாக அமைக்கப்படும் பள்ளிவாசல்கள் தொடர்பில் சட்டதிட்டங்களை அமுல்படுத்தலாம். ஆனால் அமைக்கப்பட்டுள்ள பள்ளிவாசல்கள் தொடர்பில் எத்தகைய நடவடிக்கைகளிலும் பொலிஸார் தலையிடக்கூடாது என்று பிரதமரும் பௌத்தசாசன மதவிவகார அமைச்சருமான டி.எம். ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்காவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோதே இந்த உத்தரவினை அவர் விடுத்திருக்கின்றார்.

கொழும்பு தெகிவளைப் பிரதேசத்திலுள்ள 3 பள்ளிவாசல்களில் தொழுகை நடத்துவதற்கு பொலிஸார் தடைவிதித்திருந்தனர். அத்துடன் கொகுவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் ,தாருல் சாபி பள்ளிவாசல்மீது இனந்தெரியாத நபர்கள் கடந்த புதன்கிழமை இரவு தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

இச் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்கள் பிரதமர் டி.எம். ஜயரத்னவைச் சந்தித்து தமது விசனத்தை தெரிவித்திருந்தனர்.

பள்ளிவாசல்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவது முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயத்தில் மதவிவகார அமைச்சரான நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர்களும் எம்.பிக்களும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து கொழும்பு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்காவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதமர் தெகிவளை பகுதி பள்ளிவாசல்கள் விவகாரம் குறித்து கேட்டறிந்ததுடன் பள்ளிவாசல் விவகாரத்தில் பொலிஸார் தலையிடக்கூடாது என்று பிரதமர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பள்ளிவாசல்கள் விவகாரம் தொடர்பில் பிரதமர் நேரடியாக கவனம் செலுத்த வேண்டும். அமைச்சின் செயலாளர் இது தொடர்பில் முடிவுகளை எடுப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் முஸ்லிம் அமைச்சர்கள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

இதனையடுத்து பிரதமர் பள்ளிவாசல்கள் தொடர்பில் எத்தகைய முடிவுகள் எடுப்பதானாலும் தனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னரே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சின் செயலாளருக்கும் உத்தரவிட்டுள்ளார்.(அ-2)

## மீள் திருத்தத்திற்கு விண்ணப்பிக்கலாம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை வினாத்தாள் மீள் திருத்தத்திற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரிமாதம்20ஆம்திகதிக்குமுன்னதாகஅனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. பாடசாலை மூலமான பரீட்சார்த்திகள் மீள் திருத்துவதற்கான விண்ணப்பங்களை அவர்களுடைய பாடசாலை அதிபரிடம் கையளிக்க முடியும்.

தனியார் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 26 ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியாகும் அறிவுறுத்தல்களுக்கு அமைய விண்ணப்பப் படிவத்தை நிரப்ப முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் வெளியான கல்விப்பொது தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் நேற்றைய தினம் தபாலிடப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)


## இதம் CACPD

22, ஆனைக்கோட்டை றோட், கொக்குவில் மேற்கு கொக்குவில்

**பதவி வெற்றிடம்**

இதம் CACPD நிறுவனம் பின்வரும் பதவி நிலைகளுக்கு தகைமையுடையோரிமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

1.கள நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் -1 (Field Program Coordinator)
2. சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்-1 (Child Protection Officer)
3. நிதி உதவியாளர்-1 (Finance Assistant)
4. கள உதவியாளர்- 1 (Field Assistant)
5. உளவளத் துணையாளர் - 2 (Coun seller)
6. சமூக சேவைப் பணியாளர் -4 (Social Worker)
7. சந்தைப்படுத்தல் ஆலோசகர்- 1 (Marketing Advisor)
8.உணவு தயாரித்தல் மற்றும் பதனிடல் பயிற்றுநர் (Food Processing trainer ) -1
9. அலுவலக உதவியாளர் -1 (Office Assistant)

விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை உபதலைவர் S. இரட்ணவேல், பிரதான வீதி, பண்டத்தரிப்பு எனும் முகவரிக்கு 28.12.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

(5119)

உப தலைவர்
இதம் CACPD


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)

வட்டாரம்:-04, ஆதன இலக்கம்:- 91 (புதிய ஆதனம்),சுதுமலை வீதி

வட்டாரம் 04 சுதுமலை வீதி ஆதன இலக்கம் 91 இல் (புதிய பதிவு) அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை) ***கம்பன் ஓடை*** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 17.1 கொண்ட இவ்வாதனமானது மானிப்பாயைச் சேர்ந்த கனகரத்தினம் பெண் யோகநாயகி அவர்களால் அறுதி உறுதி மூலம் சுதுமலையைச் சேர்ந்த தியாகராசா பெண் பத்மாவதி ஆகிய இவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் வெ.யோகேஸ்வரன் முகதாவில் நிறைவேறிய 179 ஆம் இலக்க 1977.01.29 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் ***கம்பன் ஓடை*** நிலப்பரப்பு 03 குளி 17.1 இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாத விடத்து இவ்வாதனம் தியாகராசா பெண் பத்மாவதி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதனை அறியத்தருகின்றேன். (5116)

*தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்கள் உண்ணாவிரதம்

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களை மீட்கக்கோரி, நேற்று முதல் 7 மீனவ கிராம மக்கள் காலவரையறையற்ற உணணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி நேற்றுக்காலை 6 மணி முதல் நாகை தபால் நிலையம் முன்பு உண்ணாவிரதப் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இது குறித்து சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள மீனவர்கள் கூறியதாவது, எல்லை தாண்டி மீன் பிடிக்க வருவதாக கூறி இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைப் பிடிக்கப்பட்டு வருவதும், மீன்பிடிச் சாதனங்களை சேதப்படுத்தி வருவதும் நடந்து வருகிறது.

கடந்த ஒரு வாரத்திற்குள் 210 மீனவர்களை சிறைப் பிடித்தும், 70 விசைப் படகுகளையும் கைப்பற்றி உள்ளனர். எனவே, சிறைப்பிடித்த மீனவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும, விசைப் படகுகள் அனைத்தையும் மீட்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் குடும்பத்துடன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறோம் என்றார்கள். (2)

# இந்திய கடற்படையினரின் கப்பல்களை இலங்கையிலிருந்து மீளப் பெறவேண்டும்

## மன்மோகனுக்கு "ஜெ" மீண்டும் கடிதம்



(சென்னை)

**இலங்கைக்கு கூட்டுப் பயிற்சியில் ஈடுபடசென்றுள்ள இரு இந்திய கடற்படை கப்பல்களையும் உடனடியாக மீள அழைக்க வேண்டும். இலங்கையுடன் இந்திய கடற்படை கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பது தமிழக மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. இலங்கையுடன் எந்தக் கூட்டுப் பயிற்சியும் மேற்கொள்ளக் கூடாது என பாதுகாப்புத் துறைக்கு பிரதமர் அறிவுறுத்த வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு முதலமைச்சர் நேற்றைய தினம் கடிதமொன்றை வரைந்துள்ளார்.

அதில் அவர் கூறி இருப்பதாவது,

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்து வரும் அத்து மீறல்களால் தமிழ்நாட்டில் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களிடமும் ஏற்பட்டுள்ள ஆழமான உணர்வு பற்றி உங்களுக்கு நான் பல தட்வை கடிதம் எழுதிவிட்டேன்.

இலங்கையில் நடக்கும் மனிதவுரிமை மீறல்களுக்கு எதிராக இந்தியா கடும் பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்நாடு சட்ட சபையிலும் கண்டன தர்மானம் கொண்டு வரப்பட்டது.

தற்போதைய இலங்கை அரசு, கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் அப்பாவி தமிழக மீனவர்கள் மீது காரணமற்ற கொள்கையை காட்டி, மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்துகிறது.

நடுக்கடலில் தாக்கப்பட்டு, சட்ட விரோதமாக கடத்திச் செலலப்படும் மீனவர்கள் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவரகளது சிறைக்காவல் நீடிக்கப்படுகிறது.

தமிழக மீனவர்களின் படகுகள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை இலங்கை பறிமுதல் செய்து முடக்கி வைத்துள்ளது.

அதில், தமிழ்நாட்டு மீனவர்கள் மீது நடந்து வரும் தாக்குதல்களை நிறுத்தும் வரை மற்றும் இலங்கையில் சிறுபாண்மை தமிழர்கள் மீது நடந்துவரும் மனிதவுரிமை மீறல் செயல்களை முழுமையாக நிறுத்தும் வரை இலங்கை இராணுவப்படைகளுக்கு பயிற்சியோ அல்லது எந்த வடிவிலான ஒத்துழைப்பும் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தி இருந்தேன்.

இலங்கை இராணுவத்துக்கு எந்த வடிவத்திலும் உதவக் கூடாது என்பதை உறுதி செய்யவும் கோரி இருந்தேன்.

இந் நிலையில் இலங்கையில் திருகோணமலை கடல் பகுதியில் 2013 டிசெம்பர் 21 ஆம் திகதி தொடங்கும் கடலோரப் பாதுகாப்பு பயிற்சியில், இந்தியா சார்பில் இந்திய கடலோர படை கப்பல்களும், கடற்படை வீரர்களும் பங்கு பெறுவதை அறிந்து நான் கடும் அதிர்ச்சி அடைந்தேன்.

இது முழுக்க, முழுக்க தமிழ்நாட்டு மக்களின் மன உணர்வுகளுக்கு எதிரானது.

தமிழர்களின உணர்வை மதிக்காமல் இந்திய அரசு தனது கொள்கை நோக்கில் தொடர்ந்து இலங்கைக்கு சாதகமாகவே நடந்து வருகிறது.

உண்மையில் இந்திய அரசு, இராணுவ பயிற்சி விடயங்களில் இலங்கைக்கு வெளிப்படையான ஒத்துழைப்பை கொடுக்கிறது.

அவர்கள் மீது மிக கடுமையான மனித உரிமை மீறல்கள் நடத்துகின்றன. இது கொடுமையானது. கண்டனத்துக் குரியது.

இலங்கையுடனான இந்திய அரசின் இத்தகைய இராணுவ ஒத்துழைப்பு கொள்கைக்கு நான் கடும் எதிர்ப்பை தெரிவிக்க விரும்புகிறேன். இந்திய அரசின் கொள்கையில் தமிழக கடலோர மக்களுக்கு நேரடி பாதிப்பு ஏற்பட்டு, அவர்களது வாழ்வாதார உரிமை நசுக்கப்பட்டுள்ளது.

எனவே இலங்கையுடனான இந்தியாவின் இராணுவ ஒத்துழைப்பு கொள்கையை மறுபரிசீலனை செய்யவேணடும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இலங்கையில் நடக்கும் கடலோர பாதுகாப்பு பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ள இரண்டு இந்திய போர்க் கப்பல்களையும், கடற்படை வீரர்களையும் அதில் பங்கேற்காமல் உடனே திரும்ப அழைக்க பாதுகாப்பு அமைச்சகத்துக்கு அறிவுறுத்தக் கேட்டுக் கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கைத் தமிழர்களுக்கு சமவுரிமை கிடைக்க வேண்டும்

## முரளிதர் ராவ் தெரிவிப்பு



இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகவும, பொருளாதார ரீதியாகவும் சம உரிமை கிடைக்க பா.ஜ.க. துணைநிற்கும் என அக்கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் முரளிதர் ராவ் தெரிவித்துள்ளார்.


இது குறித்து கோவையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

தற்போது நடந்து முடிந்த ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில், நான்கு மாநிலங்களில் பா.ஜ.க. முன்னிலை பெற்றது. இந்த முடிவுகள் இந்தியாவில் பா.ஜ.க. வலிமையாக இருப்பதையே காட்டுகிறது.

ஏழ்மை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பாதுகாப்பு இவற்றை நரேந்திர மோடி ஒருவரால் மட்டுமே வழுங்க முடியும் என்பதை நாட்டு மக்கள் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர்.

தமிழகத்தில் தற்போது நிலவும் மின்வெட்டு, மீனவர் பிரச்சினைகள் குறித்தும், இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்தும் நாங்கள் நன்கு அறிவோம். இவை முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படும். குறிப்பாக, இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகவும், பொருளாதர ரீதியாகவும் சமவுரிமை கிடைக்க வேண்டும என்பதில் பா.ஜ.க. தீவிரமாகவுள்ளது.

இந்த விடயத்தில் எங் கள் கட்சி எப்போதும் துணை நிற்கும். அதே நேரத்தில் இலங்கையை நட்பு நாடாகவும் ஏற்றுக்கொள்வோம் என்றார். (2)




வெனிசுவெலா வெளியுறவுத்துறை அமைச்சர் எலியாஸ் ஜா மிலானோ இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இதன்போது அவர் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவிடமிருந்து அமெரிக்கா பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்

## வெளி.துறை செயலாளர் சுஜாதா சிங் அறிவுரை



(புதுடில்லி)

அயல்நாட்டு தூதரக அதிகாரிகளை நடத்தும் விடயத்தில் இந்தியாவை பார்த்து அமெரிக்கா பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என வெளியுறவுத்துறை செயலாளர் சுஜாதா சிங் கூறியுள்ளார்

இந்திய பெண் துணைத் தூதர் தேவயாணி அவமதிக்கப்பட்ட விவகாரத்தில் இந்திய, அமெரிக்க அரசுகளுக்கு இடையேயான கருத்து மோதல தொடர்ந்து நீடிக்கிறது.

இந்நிலையில் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங்,

தூதரக அதிகாரிகளை நடத்துவது பற்றி இந்தியாவிடமிருந்து அமெரிக்கா பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இதனிடையே இந்த விவகாரத்தல் மன்னிப்பு கேட்கும் பேச்சுக்கே இட மில்லை என அமெரிக்கா மீண்டும் கூறியுள்ளது.

தேவயாணி மீதான வழக்கை வாபஸ் பெறவும் அந்நாடு மறுத்துள்ளது.

இதனையடுத்து தேவயாணியை பாதுகாப்பாக திரும்ப கொண்டு வருவது குறித்து மாநிலங் களவையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் இந்திய அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றார். (2)

### ஐ.நா.அலுவலகம் தாக்குதல்; பான் கி மூன் கண்டனம்

சூடான் ஐ.நா. அலுவலகம்மீது தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கி மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.


பயங்கர ஆயுதங்களுடன் ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்ட தீவிரவாதிகள், உள்ளே இருந்த சர்வதேச அமைதிப் படையினரை நோக்கிதுப்பாக்கிகளால் சரமாரியாக சுட்டனர்.

இந்த ஆவேச தாக்குதலில் இந்தியாவை சேர்ந்த 2 அமைதிப் படையினர் பரிதாபமாக உயிரிழந்தனர். சூடான் இராணுவத்தை சேர்ந்த வர்கள் உட்பட மொத்தம் 22 பேர் நேற்றுமுன்தினம் நடைபெற்றதாக் குதலில் பலியாகினர்.

படுகாயமடைந்த பலர்பல் வேறு வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கி மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்திய அமைதிப்படை வீரர்களின் குடும்பங்களுக்கும், இந்திய அரசுக்கும் அனுதாபமும் [illegible] தெரிவித்து அவர் செய்தி அனுப்பியுள்ளார். (2)

# நாட்டை விட்டு வெளியேற மாட்டேன் மன்னிப்பு வழங்குங்கள்-முஷாரப்



(இஸ்லாமாபாத்)

"தவறு செய்திருந்தால் என்னை மன்னியுங்கள். என் மீதான வழக்குகள் அனைத்தையும் சந்திக்கத் தயாராக வுள்ளேன். கோழையைப் போல் நாட்டை விட்டு ஓடப் போவதில்லை என பாகிஸ்தான் முன்னாள்ஜனாதிபதி பா வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

அவரது பாலாட்டியல் பண்ணை வீட்டில் சிறை வைக்கப்பட்டு 8 மாதங்களுக்கு பின்னர் முதன்முதலாக தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியின் போதே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டு நலன் கருதியே தான அனைத்தையும் செய்ததாகவும், அதில் தவறு நடந்திருக்கலாம், ஆனால் தவறான எண்ணமிருந்ததில்லை என்று கூறியுள்ளார். நான் தவறு செய்திருப்பதாக யாராவது கருதினால், என்னை மன்னித்து விடும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

என் மீது பதிவு செய்யப்பட்டிருககும் அரசுக்கு எதிரான குற்றவழக்கு உட்பட அனைத்து வழக்கிற்கும் பயந்து தான் நாட்டை விட்டு ஓடப்போவதில்லை. அனைத்து வழக்குகளையும் சட்டப்படி சந்திக்க தயாராக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அந்நாட்டு வரலாற்றில் முன்னாள் ஜனாதிபதி மீது ராஜ துரோக வழக்கு தொடரப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

இக்குற்றச்சாட்டு நிரூபணமானால் அவருக்கு ஆயுள்தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்பட வாய்ப்புளளது என கூறப்படுகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமும் நன்றே, பூமியும் நன்றே. ஆனால் அவற்றின் இடையே உள்ள அந்த ஒன்றுதான் கெட்டது. - ஸ்பானியப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அழைப்பு விடுவதை விடுத்து நீங்கள் தருவதைக் கூறுங்கள்

"உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண வெளி நாடுகளை நாடாதீர்கள்; உள்நாட்டில் எங்களுடன் இணைந்து தீர்வு காண வாருங்கள்" எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

உள்நாட்டில் இணைந்து தீர்வு காண்பதென்பது நல்ல சமாச்சாரம். கேட்கவே பெருவிருப்பாக இருக்கிறது.

ஆனால், உள்நாட்டில் இணைந்து தீர்வு காணக் கூடியதான நிலைமை இருந்தபோதா; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழ் மக்கள் வெளி நாடுகளை நாடினர்? என்றால் இல்லவே இல்லை.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது உள் நாட்டில் தீர்க்கப்படக்கூடிய சூழலை அறவே கொண்டிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளுடனான இறுதிப்போருக்கு பின்பு, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேச்சு நடத்துவதில் இலங்கை அரசு இம்மியும் ஆர்வம் காட்டவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதியுடனும் அரசுடனும் ஓர் இணக்கப்பாடான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சித்தார்.

அதற்காக அவர் தனது கட்சிக் கொள்கைகளைக் கூட பொருட்படுத்தாமல் அரசுடன் இணைந்து பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று நம்பினார்.

அந்த நம்பிக்கைக்கு கிடைத்த பெறுபேறு ஏமாற்றமாகவே இருந்தது.

வன்னிப் போருக்குப் பின் இலங்கையில் இனப் பிரச்சினை கிடையாது-எவரும் எங்கும் வாழலாம்; தமிழர்களுக்கு என்று தனியான தாயகம் இல்லை என்பது அரசின் நிலைப்பாடாக இருந்தது.

இதன் காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் எனும் விடயம் பற்றி அரசு இம்மியும் நினைக்கவில்லை.

மாறாக இப்போது இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நாவில் நிறைவேறியதைத் தொடர்ந்து சர்வதேச அழுத்தம் இலங்கை மீது கடுமையாகப் பிரயோகிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளை தோற்கடித்த எங்களை எவரும் எதுவும் செய்யமுடியாது என்றிருந்த இலங்கை அரசுக்கு சர்வதேசத்தின் அழுத்தம் தலையிடியைக் கொடுக்கவே செய்யும்.

கூடவே பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் ஓரிரண்டு தடவைகள் அல்ல பல தடவைகள் இலங்கை அரசைச் சாடியுள்ளன.

குறிப்பாக போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை உள்ளக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும்,

தவறும் பட்சத்தில் சர்வதேச விசாரணை நடத்தப்படும் என்றும் உலக நாடுகள் கூறிவருவதை சாதாரண விடயமாக எவரும் கருதி விட முடியாது.

ஆக, புலிகளை வென்று விட்டோம்; இனி வருடம் தோறும் வெற்றி விழாக் கொண்டாட்டம்தான் என்றிருந்த இலங்கை அரசுக்கு, சர்வதேசத்தின் அழுத்தம் போரில் வென்றும் நிம்மதி இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டது.

இந்நிலையில்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளிநாட்டில் தேடாமல் உள்நாட்டில் எங்களுடன் இணைந்து தீர்வு காண வாருங்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி விடுத்த அழைப்பு பெறுமதி உடையதாக இருக்கவேண்டுமெனில், தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்கு "... **இந்தத் தீர்வைத் தருவேன்**" என ஜனாதிபதி கூறவேண்டும்.

தீர்வு தருவதற்கு எந்தவகையிலும் தயாரில்லாத போது, இணைந்து தீர்வு காண்போம் என அழைப்பு விடுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

மாறாக ஆற்றில்போட்டு குளத்தில் எடுக்கும் ஒரு வகைமுறையாக இலங்கைப்பிரச்சினைக்கானதீர்வை சர்வதேசத்திடம் தேடுவதே பெரும் பொருத்தம் என்ற முடிவை தமிழ் மக்கள் முழுமையாக எடுக்கும் நிலைமை தோன்றும்.

அவ்வாறான நிலைமை தோன்றாமல் இருப்பதும் அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது.

# மாகாண சபையை நடத்துவதற்கு அரசு பங்களிக்க வேண்டும்

## சுரேஷ் எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் குறைந்தபட்ச செயற்பாடுகளைச் செய்வதற்குக் கூட அரசு ஒத்துழைக்காமல் இருப்பதை மாகாண சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச ரீதியில் பகிரங்கப்படுத்துவதுடன் அரசாங்கம் வட மாகாண சபையை நடத்துதற்குப் பங்களிக்கக் கூடிய வகையில் அழுத்தங்களை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு அண்மையில் கொழும்பில் கூடியது. தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடிவெள்ளி தோழர் நெல்சன் மண்டேலாவிற்கு மரியாதை செலுத்தி கூட்டம் ஆரம்பமானது.

கூட்டத்தில் இன்றைய அரசியல் கள நிலைகள் தொடர்பாகவும், தேர்தலுக்குப் பின்னரான வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள், மாகாணசபை எதிர் நோக்கும் பிரச்சினைகள், அரசாங்கம் கொடுக்கும் நெருக்கடிகள் போன்ற பல விடயங்கள் மிக ஆழமாக ஆராயப்பட்டன.

தமிழ் மக்கள் மிகப் பிரமாண்டமான அளவில் வாக்களித்து மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும் மேலாக வாக்களித்து தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் மேல் அம்மக்கள் பாரிய எதிர்பார்ப்பினை வைத்துள்ளனர்.

ஆனாலும் குறைந்த பட்சம் செயற்பாடுகளைச் செய்வதற்குக் கூட அரசு ஒத்துழைக்காமல் இருப்பதை மாகாண சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச ரீதியில் அதனைப் பகிரங்கப் படுத்துவதுடன் அரசாங்கம் வட மாகாண சபையை நடத்துவதற்குப் பங்களிக்கக் கூடிய வகையில் அழுத்தங்களை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டது.

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனிதவுரிமைகள் ஆணைக் குழு தொடர்பாகவும் அது எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.


மேற்கண்ட விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டப்பட்டு இவை தொடர்பாக தேவையான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் கலந்துபேசி விரைவில் ஒருங்கிணைப்புக் கூட்டத்தை கூட்டுமாறு கேட்டுக் கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இது தவிர, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் மிகவிரிவாக ஆராயப்பட்டது என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### பட்டது பட்டேற்றும்



சித்தத்திலே தித்திக்குந்
தேனை நீ யுண்டிடெடி- தங்கம்
தீராநோய் தீருமெடி

அட்டாங்க யோகத்திற்கும்
அப்பாலே யுள்ளதெடி-தங்கம்
ஆரறிவா ரென்றாரெடி


# உள்ளத்தில் ஏழையாக மாறி கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடுவோம்

தன்னை பல்வேறு வகைகளிலும, பலவித உருவங்களிலும் தேடிய மனிதரின் முன் தோன்ற கடவுள் விரும்பினார். வரலாற்றில் தன்னை வெளிப்படுத்துவது கடவுளின் முன் குறிக்கப்பட்ட திட்டமாக இருந்தது. கடவுள்,தன்னை ஆபிரகாமுக்கு உருவம் இல்லாத நிலையில் வெளிப்படுத்தி இஸ்ரயேலரை தனது சொந்த மக்களினமாக தேர்ந்து கொண்டார். அவர்கள் வழியாகவே தனது மீட்புத் திட்டத்தை செயற்படுத்த விரும்பினார். இயேசுவின் வருகைககாக அவர்களைத் தயார்செய்தார். இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் கடவுள் மனிதராக பிறக்க இருந்ததை மக்களுக்கு முன்னறிவித்தனர். திருவருகைக்காலத்தில் இருக்கும் நமக்கு, உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது... எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார் என்று கூறியுள்ளார். அவரது வார்த்தை உயிருள்ளது, உண்மையானது என்றும் அழியாதது. எனவே நாம் அவரின் வருகைக்காக தம்மையே தயாரிக்க வேண்டும். அதற்காகத்தான் திருச்சபை திருவருகைக் காலம் என நான்கு ஞாயிற்றுக்கிழமைகளை தந்து அதன் இறுதியிலே கிறிஸ்துமஸ் விழா கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டு அதனை நிறைவேற்றுவது எம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். அதற்கு நாம் உள்ளத்தில் ஏழையாக மாறவேண்டும்.

உண்மையில் உள்ளத்தில் ஏழையாக மாறாதவர்கள் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடமுடியாது. என்னிடம் எல்லாமே உள்ளன, நான் மட்டுமே எனக்குப் போதும் என்ற மமதையில் வாழ்பவர்களுக்கு இறைவன் தேவைப்படுவதில்லை. அவர்களுக்குக் கிறிஸ்து பிறப்பும் தேவைப்படுவதில்லை.

ஏழைகள், பசியுற்றோர், தேவையில் இருப்போர்... இவர்களாலேயே கிறிஸ்து பிறப்பு விழாவில் பொருள் காண முடியும். அவர்களைத் தேடியே இம்மானுவேல், அதாவது, கடவுள் நம்மோடு என்ற பெயர் தாங்கிய இறைவன் வருவார். நல்லவைகள் வாழ்வில் நடக்கும். கருமேகங்களாய் சூழ்ந்து வரும் பிரச்சினைகள் மத்தியில் மின்னல் கீற்றுபோலத் தோன்றும் நல்லவற்றை உறுதியாகப் பற்றிக் கொள்வோம்.

அநாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் தெரு, தெருக்களாக அதிகரிக்கும் போது, ஆதரவற்றவர்களின் எண்ணிக்கை பெருகும் போது,



கருவறையே கல்லறையாகும் போது, சிசுக் கொலையும், பாலியல் பலாத்காரமும், அதிகரிக்கும் போது, அநீதி யின் கைகள் ஓங் கும் போது, கலாசாரமும், பண்பாடும் அழியும் போது, சிகப்பு ஏரியாக்கள் எங்கும் மிளிரும்போது, அரசியலும், சினிமாவும்தான் வாழ்க்கை என்றாகும் போது, குடி, போதை, கஞ்சா, சீரியலுக்கு அடிமையாகும்போது, முதலாளித்துவம் தழைத்தோங்கும் போது இன்னும் பல போதுக்களோடு நாம் வாழும்போது இயேசுவின் பிறப்பு நம்மிலே எப்படி சாத்தியமாகும்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவார். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள். நமது வாழ்விலே வேதனை, சோதனை, துன்பங்கள்,தோல்விகள், நோய்கள், ஏமாற்றங்கள் எது வந்தாலும் கலங்கவேண்டாம், அஞ்சவும் வேண்டாம்.

ஏனெனில் நமது கடவுள் எந்நாளும் நம்மோடு இருக்கிறார். திருவருகைக் காலத்தில் இருக்கும் நாம் இயேசுவின் பிறப்பு விழாவை கொண்டாட நம்மை தயார் செய்வோம். இருளிலும் இறப்பின் பிடியில் இருப்போருக்கு ஒளிதரவும் நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும், நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும், விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது. எனவே இயேசுவின் பிறப்பில் நாம் வாழ எம்மை சாத்தியமாக்குவோம்.

## பரமபிதா காட்டிய பாதை

இது கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முன்னரான கடைசி ஞாயிறு. இது மனித உடலேற்பு மறை பொருளான கிறிஸ்து பிறப்புக்கு ஆயத்தம் செய்ய நம்மை அழைத்துச் செல்கிறது.

வருகையும், காத்திருத்தலும் நமது அன்றாட வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. வருகை மகிழ்ச்சியை தர, காத்திருத்தல் நம்பிக்கையுடன் கூடிய சுகத்தைத் தருகிறது. நாம் எம்வாழ்வில் பலரின் வருகைக்காக காத்திருக்கிறோம். பல பணிகளைப் புரிய காத்திருக்கிறோம். இவை அனைத்துமே நொடிப் பொழுதிலோ, மணித்துளியிலோ சந்தோசத்தை தந்து மறைந்து போய்விடுகின்றன. ஆனால் திருவருகைக் காலம் என்பதோ கடவுளின் வருகைக்காக காத்திருப்பது. அவர் நம்மிடையே வரவேண்டும். நம்மில் வரவேண்டும் என்பது தான் அனைவரின் விருப்பம். நம் விருப்பம் நிறைவேற நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஏனெனில் இயேசுவே நற்செய்தியில் விழிப்பாயிருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிரி டயமன்ஸ் வி.கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி இன்று


சென். லூசியன்ஸ்


சென். மேரிஸ்

(மானிப்பாய்)

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 100 ஆவது ஆண்டினை முன்னிட்டு அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியை நத்தியது.

இதன் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

54 அணிகள் பங்கு கொண்ட இப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் மன்னார் சென்.லூசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இரு அணிகளும் பலமானவை என்பதால் போட்டிகள் விறுவிறுப்பாக அமையவுள்ளன. இப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படுவதோடு. இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு 20ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இறுதிப் போட்டியின் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் செ.சத்தியசீலன் கலந்து கொள்வார். (க-23)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

உரும்பிராய் புனித மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 5 பேர் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு மாவட்ட ரீதியில் அனைத்து விளையாட்டுக கழங்களையும் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர் ம.நிசாந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

077 1725432 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (க)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# தலைவர் வெற்றிக் கிண்ணம்; வதிரி டயமன்ஸ் வி.க. வெற்றி



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் தலைவர் கிண்ண போட்டியின் அரையிறுதிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

போட்டி ஆரம்பமாகி 5ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணி வீரர் கைலாஷ் தனது அணிக்காக முதலாவது கோலை அடித்தார். மீண்டும் 15ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணி வீரர் கைலாஷ் தனது அணிக்காக இரண்டாவது கோலை அடித்தார்.

தொடர்ந்து ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் வீரர் தனது அணிக்காக முதலாவது கோலை போட்டார். போட்டி நடைபெற்று கொண்டிருக்கையில் முதற்பாதி ஆட்டம் 2:1 என்ற கோல் கணக்கில் நிறைவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த முதல் டயமன்ஸ் அணி வீரர்கள் தமது வேகமான ஆட்டத்தை வெளிபடுத்தினர். அதன் பயனாக பல கோல் சந்தர்ப்பங்கள் வந்த போது டயமன்ஸ் அணி வீரர்கள் தவற விட்டவாறு இருந்தாலும் ஆட்டத்தின் 46ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் முன்கள வீரர் அரவிந் அணிக்காக இரண்டாவது கோலை போட டயமன்ஸின் ஆட்ட வேகம் மேலும் அதிகரித்தது.

தொடர்ந்து அடுத்தடுத்து டயமன்ஸ் முன்னணி வீரர் பிறேம்குமார் 52.63 ஆவது நிமிடங்களில் இரண்டு கோல்களை அடிக்க இறுதியில் 4:2 என்ற கோல் விகிதத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுகழகத்தை வீழ்த்தி இறுதி போட்டிக்கு தெரிவானது வதிரி டயமன்ஸ் விளையாட்டுகழகம். (க-23)

# இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சி;
## ஆலடி சிந்து ,மயிலிட்டி வள்ளுவர் அரையிறுதியில்

வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சி சுற்றுப் போட்டியில் காலிறுதிப்போட்டிகள் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் மயிலிட்டி அணியும் அளவெட்டி பாரதி அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த மயிலிட்டி வள்ளுவர் அணி முதல் அரைப்பாதியின் போது 8:1 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையிருந்தது.

இரண்டாவதுஅரைப்பகுதியில்மேலும் 6 புள்ளிகளை மயிலிட்டி வள்ளுவர் அணி பெற பதிலுக்கு ஒரு புள்ளியையே அளவெட்டி பாரதி அணி பெற்றது.

இதனால் போட்டி நிறைவில் 14:2 எனும் புள்ளிகளின் அடிப்படையில் மயிலிட்டி வள்ளுவர் அணி வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றது.


மற்றைய அரையிறுதியில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் [illegible] வில் வைகறை அணியும் மோதின.

இப்போட்டியில்முதல்அரைப்பாதியின் போது2:1என்னும்புள்ளிகளின்அடிப்படையில் ஆலடி சிந்து முன்னணி வகித்தது.

இரண்டாவது அரைப்பாதியினையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆலடி சிந்து மேலும் 6 புள்ளிகளைப் பெற்ற போதும் உடுவில் வைகறையால் 3 புள்ளிகளையே பெறமுடிந்தது.

இதன்படி 8:4 என்னும் புள்ளிகளின் அடிப்படை யில் ஆலடி சிந்து வெற்றிபெற்று இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றது. தொடந்து காலிறுதிப் போட்டிகள் இடம் பெறவுள்ளன. (க-23)

# பாகிஸ்தானை வீழ்த்தி இறுதி ஓவரில் இலங். அணி திரில் வெற்றி பெற்றது




பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டி இலங்கை அணி இறுதி ஓவரில் திரில் வெற்றி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச [illegible] போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 4 விக்கெடடுக்களை இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 8 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, இரண்டாவது விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களைப் பகிர்ந்ததோடு 4 ஆவது விக்கெட்டுக்காக 105 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது. இறுதி 29 பந்துகளில் விக்கெட்டுக்கள் எவற்றையும் இழக்காத பாகிஸ்தான் அணி 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.


துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அஹமட் ஷெஷாத் 140 பந்துகளில் 124 ஓட்டங்களையும் மிஸ்பா உல் ஹக் 62 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும் மொஹமட் ஹபீஸ் 52 பந்துகளில் 32 ஓட்டங்களையும் ஷகிட் அப்ரிடி 15 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் குலசேகர. லசித் மலிங்க. சீக்குகே பிரசன்ன ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக கைப்பற்றினர்.இதில் இலங்கையின் திஸர பெரேரா. அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் பந்துவீசிக் கொண்டிருக்கும் போது உபாதை காரணமாக மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

285 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை 49.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்து. 35.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுக் காணப்பட்டது.

ஆனால் பின்வரிசை வீரரான நுவான் குலசேகரவுடன் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் சிறப்பான ஆட்டத்தைப் புரிந்து இலங்கையின் வெற்றியை உறுதி செய்தார்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குமார் சங்கக்கார 67 பந்துகளில் 58 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 44 பந்துகளில் 47 ஓட்டங்களையும் டினேஷ் சந்திமால் 57 பந்துகளில் 44 ஓட்டங்களையும் திலகரட்ண டில்ஷான் 48 பந்துகளில் 40 ஓட்டங்களையும் நுவான் குலசேகர 26 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.




பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக ஜுனைட் கான் 3 விக்கெட்டுக்களையும் ஷகிட் அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும் சயீட் அஜ்மல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியின்ஆட்ட நாயகனாக இலங் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவானார். இந்தப் போட்டியின் முடிவையடுத்து 2 போட்டிகளின் நிறைவில் இரு அணிகளும் தலாஒருவெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு குறித்து ஆராய தெரிவுக்குழு அமைக்க வேண்டும்

## இரா. சம்பந்தன் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் 13-வது அரசியலமைப்புத் திருத்தத்தின் வரையறைக்குள் மட்டும் குறுகிநிற்காமல், அதனையும் தாண்டிய அரசியல் தீர்வுத் திட்டம் பற்றி ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டால் அதில் பங்கெடுப்பது பற்றி நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

13-ம் திருத்தத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எல்லா ஜனாதிபதிகள் தலைமையிலான அரசாங்கங்களும் (ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் உட்பட) இனப் பிரச்சனை தீர்வு தொடர்பில் அமைத்திருந்த தெரிவுக்குழுக்களும் நிபுணர் குழுக்களும் 13-ம் திருத்தத்துக்கும் அப்பால்சென்று முன்மொழிந்த அரசியல் தீர்வுத் திட்டத்தையே பரிந்துரை செய்திருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட நிறைவுரையை ஆற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,

"வெளிநாட்டிடம் தீர்வு தேடாமல் உள்நாட்டிலேயே தீர்வொன்றை" எட்ட முன்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த அழைப்பை ஏற்றுக் கொள்கிறீர்களா- அதுபற்றிய உங்களின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பியபோதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

"ஜனாதிபதியின் அழைப்பை கவனமாக பரிசீலிப்போம். உள்ளூரிலேயே இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமாகவும் விசுவாசமாகவும் நாங்கள் செயற்பட்டு வந்திருக்கிறோம்" என்றார் சம்பந்தன்.

ஓராண்டுக்கும் மேலதிகமாக அரசாங்கத்துக்கும் தமக்கும் இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடந்தும் அதன்போது தாம் முன்வைத்திருந்த தீர்வு யோசனைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து உறுதியளிக்கப்பட்டவாறு இன்னும் பதில் கிடைக்கவில்லை என்றும் சம்பந்தன் கூறினார்.

பின்னர் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்ட உடன்பாடுகளும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

2012-ம் ஆண்டு ஜனவரி 17, 18, 19-ம் திகதிகளில் இடம்பெற இருந்த பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சமுகமளிக்காதபடியாலேயே இருதரப்பு பேச்சுவார்த்தைகள் முறிந்துபோனதாகவும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தை முறிவடைந்தமைக்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து அதில் இடம்பெறுமாறு அரசாங்கம் தமக்கு விடுத்த அழைப்பை ஏற்கவில்லை என்றும் அவர் கூறினார்.

"13-ம் திருத்தத்தை முற்றாக இல்லாது செய்வதற்கான அல்லது அதிகாரங்களைக் குறைப்பதற்கான தெரிவுக்குழுவில் இடம்பெற முடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு நியாயமான அரசியல் தீர்வை எட்டுவதற்கான பேச்சுவார்த்தையாக இருந்தால், ஜனாதிபதியின அழைப்பை ஒருபோதும் நாங்கள் நிராகரிக்க மாட்டோம் என்றும் சம்பந்தன் கூறியுள்ள்ார். (எ-4)

# இந்தியாவின் வெற்றிக்கு 8 விக்கெட்டுக்கள் தேவை



இந்திய-தெனனாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஜோகன்னஸ்பர்க் நகரில் நடந்து வருகிறது. முதல் இன்னிங்சில் இந்தியா 280 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம் இழந்தது. பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா 244 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இந்தியா தரப்பில் சகீர் கான், இஷாந்த் ஷர்மா தலா 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினர்.

இதையடுத்து 36 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்கை இந்தியா ஆடியது. துவக்க வீரர் தவான் சொதப்பியபோதும் அதன்பின்னர் புஜாரா மற்றும் விராட் ஹோலியின் பொறுப்பான ஆட்டத்தால் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

பந்துகளை நாலாபுறமும் விரட்டியடித்து இந்திய ரசிகர்களை குஷிப்படுத்திய புஜாரா தனது 6-வது சதத்தை பதிவு செய்தார். ஹோலி அரைசதம் கடந்தார். இதனால் 3-வது நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 2-வது இன்னிங்சில் 2 விக்கெட் இழப்புக்கு 284 ரன்கள் சேர்த்திருநதது. புஜாரா 135 ஓட்டங்களுடனும் விராட் ஹோலி 77 ஓட்டங்களுட னும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4-வது நாள் ஆட்டத்தின் போது, தொடர்ந்து ஆடிய புஜாரா, 153 ஓட்டங்களிலும் ஹோலி 96 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பினனர்வந்த வரர்கள் நீண்ட நேரம் களத்தில் நிற்கவல்லை. இதனால இந்தியா இரண்டாவது இன்னிங்சில 421 ஓட்டங்கள் குவித்தது. தோனி 29 ஓட்டங்கள் எடுத்தார். சகீர்கான் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து தென் ஆப்பிரிக்காவுக்கு 458 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. துவக்க வீரர்களாக பீட்டர்சன், ஸ்மித் ஆகியோர் களமிறங்கினர். நம்பிக்கையுடன் இலக்கை நோக்கி பயணித்த இந்த ஜோடி நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தது. இந்த ஜோடியைப் பிரிக்க முடியாமல் இந்திய பந்து வீச்சாளர்கள் திணறினர். சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் விடா முயற்சியுடன் பல ஓவர்கள் வீசியும் விக்கெட எடுக்க முடியவில்லை.

இந்நிலையில், தென்னாபிரிக்காவின ஓட்டஎண்ணிக்கை 108ஐ தொட்டபோது ஸ்மித்தை, ரகானே ரன் அவுட் செய்தார். ஸ்மித் இந்த இன்னிங்சில் 44 ரன்கள் சேர்த்தார். அதேசமயம் மறுமுனையில் ஆடிக்கொண்டிருந்த பீட்டர்சன் அரை சதம் கடந்தார். அம்லா 4 ரன்களில் பவிலியன் திரும்பியதும் பீட்டர்சனுடன் டுபிளெசிஸ் இணைந்தார். இதனால் நேற்றைய ஆட்டநேர முடிவில் தென் ஆப்பிரிக்கா 2 விக்கெட் இழப்பிற்கு 138 ஓட்டங்கள் சேர்த்தது.

தென் ஆப்பிரிக்காவின் வெற்றிக்கு இன்னும் 320 ஓட்டங்கள் தேவை. இதனால் இன்று நடைபெற உள்ள கடைசி நாள் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும்.

## பயங்கரவாதம் ஒழிக்கப்...

நடத்தியிருந்தார்.

பாகிஸ்தான் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள வழியமைத்தது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் மிக சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கைக்கு பாகிஸ்தான் சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் இதற்காக நன்றி பாராட்டுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால் பயங்கரவாதத்தை இல்லாதொழித்திருக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தான் இலங்கையின் நெருங்கிய நண்பர் என்பதனை நிரூபித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## தேர்தலை நடத்தக்...

டாந்த தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஆண்டில் அரசாங்கத்தை மாற்றும் தேர்தல ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக அனைவரும் ஐக்கியமாக செயற்பட வேண்டும். தேவை ஏற்பட்டால் தேர்தலை பெற்றுக்கொள்வதற்காக நீதிமன்றத்தை நாடவும் தயாராக இருக்கின்றோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறார். போர் நடைபெற்ற காலத்தை விட மக்கள் தற்பொழுது பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டில் வாழும் ஒரு வீதமான பிரிவினர் சுகபோகங்களை அனுப வித்து வருவதுடன் 99 வீதமான வர்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

துயரத்தில் வாழ்ந்து வரும் மக்களை அதிவேக நெடுஞ்சாலையில் செல்லுமாறு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கூறுகிறது என்றார். (எ-4)

## மலேரியா...

2 என்ற வீதமும் நாட்டிற்கு திரும்பியதும் நான்கு கிழமைகள் 2 மாத்திரை வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு செய்வதன் மூலம் மலேரியா நோயிலிருந்து அனைவரையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பு

(23.12.2013 திங்கட்கிழமை)



அன்புடையீர் !

நிகழும் விஜய வருடம் கார்த்திகைத் திங்கள் 22-ம் நாள் (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத் தந்தையும் ஆவரங்கால் சிவன் தேவஸ்தான ஸ்தானீய குருவும், பிரதம குருவுமாகிய

### சிவஸ்ரீ வே.நடராஜ சிவாச்சாரியார்

அவர்களின் ஆத்ம சாந்தியை முன்னிட்டு ஆவரங்கால் 'சிவசக்தி மணி மண்டபத்தில்' 23.12.2013 திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அஞ்சலியுரையும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் இந் நிகழ்வில் கலந்து அப்பாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
அன்னாரின் குடும்பத்தினரும்
சிவன் தேவஸ்தானமும்

சிவன் கோவிலடி,
ஆவரங்கால், புத்தூர்.

(5128)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாகாண சபை பட்...

பட்டு வடக்கு மாகாண சபையின் 2014-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்ப் பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டாலும் சபையில் நிறைவேற றப்பட்ட வரவு செலவுத் தட்டம் ஆளுநரின் அனுமதிபெறப்பட்டாலே அது அங்கீகரிக்கப்பட்ட தாகக் கருதப்படும்.

வரவு செலவுத் திட்டம் பேரவைச் செயலகத்தினால் ஆளுநரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டு அவரின் கையொப்பம் பெறப் படல் வேண்டும்.

இந்நிலையில் பேரவைச் செயலகத்தினால் அனுப் பப்பட்ட வரவு செலவுத திட்டத்தினை ஆளுநர் நேற்றைய தினம் கையொப்பமிட்டு அங் கீகரித்துள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டம் சில புதிய திணைக களங்களினை உருவாக்க முயன்றுள்ள தாகவும், இது அரசியல் அமைப்புக்கு விரோதமானது எனவும், நாட்டின் தேசிய கொள்கைகளினை வடக்கின் வரவு செலவுத்திட்டம் மீறுகின்றது வரவு செலவுத் திட்ட விவாதம்முழுவதும் வடககு மாகாண சபைக்கு ஒரு சிவிலிய ஆளுநர் தேவை என் பதை ஸ்மையப்படுத்தியதாகவே இருந்தது.

வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டம் நிறைவேற றப்பட்ட மறுநாளே கொழுமபு ஆங்கில ஊடகமொன்றுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கருத்து வெளியிட்டிருந்தமை குறிப பிடத்தக்கது. (எ-4)

## மீனவர்களை...

வித்துள்ளார்.

இலங்கையுடன் இணைந்து கரையோரப் பாதுகாப்பு குறித்து இந்திய படையினர் பயிற்சியில் ஈடுபடுவதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் இது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி வருகின்ற தருணத்தில், இந்திய கடற்படையினர் இலங்கைக் கடற்படையினருக்கு நேசக்கரம் நீட்டுவது ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளைப் பேணுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர்தெரிவித்துள்ளார். (எ-4)

## பயிற்சியை...

பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் வன்னி பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மதவாச்சியில்உள்ள இராணுவ தொண்டர் படையணிக்கு 45 தமிழ் பெண்களும் 10 சிங்கள பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் அவர்களுக்கு 3 மாத பயிற்சிகளும் வழங்கப் பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித் துள்ளது. (எ-4)

## ஜெனிவா மனிதவுரிமை...

நடத்தியுள்ளார்.

இதனைத் தவிர பிரித்தானிய தமிழர் பேரவைமற்றும்உலக தமிழர்பேரவை ஆகியவற்றின் அருட்தந்தை இம்மானுவேல் மற்றும் சுரேந்திரன் ஆகியோர் உண்மைக்கு புறம்பான தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை பிரித்தானிய அரசிடம் அளித்திருப்பதாக ஞாயிறு திவயின தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான இந்த யோசனையைமுன்வைக்க போவதாக பொதுநலவாய அமைப்பின் விவகாரங்களுககான அமைச்சர் ஹியு கோஸ்விங் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தெரிவித் துள்ளார்.

இதனிடையே பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளில் உள்ள இலங்கைக்கு ஆதரவான தரப்பினர் அந்நாடுகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்களை இலங்கை அரசுக்கு வழங்கியிருப்பதாக திவயின குறிப்பிட்டுள்ளது.

தனது யோசனைக்கு ஆதரவு வழங்குமாறு பிரித்தானியா, இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும் வன்னி இராணுவ நடவடிக்கைகளுக்கு விமானங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள், ரேடார் மற்றும் ஏனைய உதிரிபாகங்களை இந்தியாவே இலங்கைக்கு வழங்கியிருப்பதால், இந்தியா பிரித்தானியாவின் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்துள்ளது என்றும ஞாயிறு திவயின குறிப்பிட்டுள்ளது. (எ-4)


**பிரத்தியேக கணினி வகுப்பு**

* உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
* DTP(Photoshop CS5, CorelDraw X4, PageMaker) Ms office, Internet & E-mail, Web Design.
* சிறுவர்களிற்கான கற்கைநெறி-(ஆண்டு 1-6)
* பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும் 10வருட அனுபவம்
* குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.

TP:0779672038 ஆசிரியர்:KRC

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் ராசவீதியிலுள்ள (Police Station அண்மையில்) 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு:

0779001523 (5109)

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவில் அருகில் 15 3/4 பரப்புக் காணியுடன் 100 தென்னை மரங்கள், 3 வாகனம் விடும் செற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

0773253610 (5117)

**காணி விற்பனைக்குண்டு**

மாதகல்மேற்கு நுணசையடைப்பு நிலக்காணி ஏழு (07) பரப்பு உறுதியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

0776936744, 0776653723 (4893)

**Licensed Surveyor**

கோப்பாயிலுள்ள 10 பரப்பு வெற்றுக் காணியை அளவீடு செய்து வரைபடம் சமர்ப்பிக்கக்கூடிய மேற்குறிப்பிட்டதகைமை உடையஒருவர்தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு:

0779001523 (5109)

**நிரந்தர வேலைவாய்ப்பு**

வாழ்க்கை பாதையை உயர்த்திக்கொள்ள கல்வியுள்ள / அற்ற இருபாலாருக்கும் 18000/-, 38000/- வரையான சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு ஆண் - பெண் 18-50. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம் / குளிர்பானம் / டயர் / கிளவுஸ் / தேயிலை / சொக்லட் / பிஸ்கட் / பொலிதீன் போன்றவற்றிற்கு உற்பத்தி / லேபல் / பொதியிடல் பிரிவுக்கு ஆட்கள் தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலையில் தரப்படும். நண்பர்கள் + குழு + தம்பதியினர் ஒரு தொழிற்சாலைகளில்.

தொடர்பு : 0778430179

(C-5850)

**German Language Academy**

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் துறை சார்ந்த ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் புதிய வழிமுறைகளில் A1பரீட்சைக்கு ஏற்றவாறு Audio, Vedio மூலம் மிகவும் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது.

ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட டொச் மொழிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகி...

அவதானிப்பு : 29.10.2013 செவ்வாய்க்கிழமை எமது German Language Academy நிறுவனம் பற்றி பத்திரிகையில் சிறப்புச் செய்தியில் பிரசுரமாகியது குறிப்பிடத்தக்கது.

GERMAN LANGUAGE ACADEMY
No. 23, Palaly Road, Jaffna.
T.P : 0779707322

N Soft Academy
Vairavar Kovil Road,
Vairavar Puliyang Kulam, Vavuniya.

(4881)

இந் நிறுவனத்தில் ஒரே ஒரு ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் மட்டுமே கற்பிக்கப்படுகிறது. தொடர்பு கொண்ட பின் நேரில் வரவும்.

யாழ் நகரில் உயர்தரத்தில் இம்முறை சிறந்த பெறுபேற்றை பெற்ற ஒரேஒரு கல்வி நிறுவனம்

A/L DAY CLASS

ஆரம்பம் 23.12.2013 (நாளை) திங்கள் 7.00 மணி

NEC கலை, வர்த்தகம் பிரிவு

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மணிக்கூட்டு வீதி,யாழ்ப்பாணம், (பெருமாள் கோவில் அருகில்)

(C-5955)

**உடனடி வேலைவாய்ப்பு**

(20 பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவர்)



சர்வதேச ரீதியில் 10,000 கிளைகளை கொண்டிருக்கும் Innovege Multinational Company க்கும், அதன் வட மாகாண கிளைகளுக்கும் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

- Sales Supervisor
- Sales Distributors
- Innventory
- Management trainee
- Account



குறிப்பு :-

- அனுபவம் அவசியமற்றது
- தங்குமிட வசதி இலவசம்
- சர்வதேச ரீதியிலான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும்
- ஆங்கில & சிங்கள வகுப்புக்கள் இலவசமாக நடைபெறும்
- உணவு & தங்குமிட வசதி இலவசம்
- வயதெல்லை :- 18-35

0771906728, 0776219536

**A/L பெறுபேறுகள் வெளியாகிவிட்டன...**

அடுத்து என்ன செய்வது என்று சிந்திக்கிறீர்களா?
பரீட்சைப் பெறுபேறு எதுவாக இருந்தாலும் - நீங்கள்

**நினைத்ததை அடைய சிகரம் வழிகாட்டும்**

3Cக்கு மேல் பெற்றவர்களுக்கு புலமைப்பரிசிலுடன் பல்கலைக்கழக அனுமதி

3Cக்கு குறைந்த பெறுபேறுகள் பெற்றவர்களுக்கு Foundation Course உடன் பட்டக்கல்விவாய்ப்பு

பெறுபேற்றில் திருப்தியில்லாவிடின் வருமானத்துடனான தொழிற்பயிற்சியும் தொழில்வாய்ப்புக்களும்

UK, Australia, New Zealand, Switzerland, Canada, America, Malaysia & Thailand பல்கலைக்கழக அனுமதிகள்

சிகரம் தொழில்வங்கி ஊடாக உள்நாட்டு வேலைவாய்ப்புக்கள்

50,000/- வரையான வருமானத்துடனான ஹொட்டேல் பயிற்சிநெறியும், வேலைவாய்ப்பும்

தொழில்தேடுவோர், ஆங்கில மூலம் கல்வி கற்போருக்கான ஆங்கிலக் கற்கைநெறி

அவரவர் கல்வித் தகைமைகள், பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ற கட்டுபடியான கட்டணங்கள்

வங்கிக் கடன் வசதிகள்

IELTS, வங்கிக் கட்டணம், தூதரக நேர்முகத் தேர்வு எதுவுமின்றி விசா ஏற்பாடுகள்

கல்வி கற்பது முதல் தொழில்வாய்ப்புப் பெறும் வரையில் தொடர்ந்து வழிகாட்டும் ஒரே நிறுவனம்

மேலதிக விபரங்களுக்கு:

www.sikaram.lk

கல்விக்கும், தொழிலுக்கும் என்றே ஒரு இணையம்

மேலதிக விபரங்களுக்கு Call/SMS Name & Address to: 077 36 16 798

சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி

இல. 153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தொ.பே.: 021 222 00 11, நேரடி: 0773 616 798

**A/L பரீட்சை முடிவுகள் திருப்தியா / இல்லையா?**

**படித்துக்கொண்டே பல இலட்சம் வெளிநாடுகளில் சம்பாதிக்கலாம். Laptop இலவசம் - நிபந்தனைகளுடன்**

- A/L தேவையில்லை. சர்வதேச ஆங்கிலப் பரீட்சை IELTS தேவையில்லை. பின்வரும் நாடுகளுக்கு பறக்கலாம்.
- ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படித்துக்கொண்டே உறுதியாக ஒரு இலட்சம் உழைக்கலாம்.
- நியூசிலாந்தில் படித்துக்கொண்டே பல இலட்சம் சம்பாதிக்கலாம். 2 வருடத்தில் PR பெற்று ஆஸ்திரேலியா குடிபெயரலாம்.
- போலந்தில் படிக்க, உழைக்க வெறும் 7 இலட்சம் போதும்.

எதிர்வரும் 25.12.2013 வரை 20% கட்டணக்கழிவு
மடிக்கணனியும் இலவசம் - நிபந்தனைகளுடன்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

www.thisaivisa.com



(C-5633)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org